# மஹிந்த சிந்தனை

## உலகை வெல்லும் வழி



## பாதுகாப்பான தேசம்

## வளமான எதிர்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த சிந்தனை

## உலகை வெல்லும் வழி



**பாதுகாப்பான தேசம்**
**வளமான எதிர்காலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது நோக்கு

அனைத்து வெற்றியும்
தாய்நாட்டுக்கே

## எமது செயற்பாடு

ஒற்றுமையில் நாட்டை
கட்டியெழுப்பி
உலகை வெல்லும் வழி
சமைப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்
ஒற்றுமை மிகு இனம்
எமக்கு
பாதுகாப்பான நாடு உள்ளது.
பெருமை மிகு
இனத்திற்கு
உரிய அனைத்து அடிப்படைகளையும்
நாம் பூரணப்படுத்தியுள்ளோம்.
அந்த பெருமையை
அந்த பாதுகாப்பை
உறுதிப்படுத்திக்கொள்வதே இப்போது
நாம் செய்ய வேண்டியுள்ளது.
ஊயிரைக் கொடுத்தாவது பாதுகாப்பதே
நாட்டு மக்களின்
தேவையும் பிரார்தனையுமாகும்
நற்குணங்களை பாதுகாக்கும்
சூழலை உருவாக்குவதற்காக
எனது நோக்கு மற்றும்
எமது செயற்பாடுகளை உள்ளடக்கிய
"மஹிந்த சிந்தனை உலகை வெல்லும் வழி"
எனது நேசத்துக்குரிய தாய் நாட்டில்
அதி வணக்கத்திற்குரிய பௌத்த பிக்குகளுக்கு,
அன்பான தாய்மார்களுக்கு, தந்தையர்களுக்கு,
சகோதர சகோதரிகளுக்கு,
பிள்ளைகள் மற்றும் நண்பர்களுக்கும்
இதய பூர்வமாக கையளிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | இதுவரை | 9 |
| 1 | தேசிய பாதுகாப்புத் தொடர்பாக பூலோக ரீதியான முன்னுதாரணம் | 14 |
| 2 | முழுமையான அரசியல் மறுசீரமைப்பு - புதிய அரசியல் கலாசாரம் | 18 |
| 3 | நற்பண்புகள் நிறைந்த சமூகம் | 25 |
| 4 | நாட்டிற்காக உழைக்கின்ற தேசப்பற்றுள்ள அரச சேவை | 30 |
| 5 | செல்வந்த நாடு | 35 |
| 6 | தேசிய தொழில் நிகழ்ச்சி நிரல் | 53 |
| 7 | அபிவிருத்தியின் சிறந்த பலன்கள் கிராமங்களுக்கு கொண்டு செல்லும் திவிநெகும | 64 |
| 8 | தேசிய ஆளுமை மிக்க கல்வி | 70 |
| 9 | நோயற்ற வாழ்வு குறையற்ற செல்வம் | 78 |
| 10 | நீண்ட ஆயுளைத் தரும் விளையாட்டு | 84 |
| 11 | பெண்களுக்கு வளமான எதிர்காலம் | 86 |
| 12 | இளைஞர் சக்தியால் நிறைந்த நாடு | 88 |
| 13 | வசதியான போக்குவரத்து | 94 |
| 14 | உயிரிலும் மேலாக பாதுகாக்கப்படும் சுற்றாடல் | 99 |
| 15 | நிலையான மக்கள் இல்லம் | 103 |
| 16 | உட்கட்டமைப்பு வசதிகள் புரட்சி தொடர்ந்தும் முன்னோக்கி | 105 |
| 17 | விஞ்ஞான தொழில் நுட்பமும் புதிய உற்பத்திகளும் | 112 |
| 18 | கலைஞர்களின் திறன்களை நாட்டுக்கு வழங்குதல் | 114 |
| 19 | சமூகப் பாதுகாப்பு | 117 |
| 20 | சமாதானத்தின் நல்லிணக்கப் பயன்கள் மக்களுக்கு | 120 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை.............................................................

தாய்நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக பேரபிமானம் பல தசாப்தங்களாக நீண்டுகொண்டே சென்றதையும் நீங்கள் தினம் தினம் ஏங்கிக்கொண்டிருந்ததையும் நான் கண்டேன். மக்கள் பிரதிநிதியாக இதனை என்னால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. தனது உயிர் மட்டுமல்ல தனது அன்பானவர்களின் உயிர்களும் உடமைகளும் அக்கினிச் சுவாலைகளின் மத்தியில் துகள்களாகிப்போனதை சகித்துக்கொள்ள முடியாத அதற்கு எதிராக முன்வந்தவர்களுக்கும் தாய் நாட்டுக்கும் உரித்தானது தோல்வியும், பின்னடைவும் மட்டுமே. புலம்பல்களின் ஊடான எமது தாய்நாட்டுக்கு, சுதந்திரமும் சமாதானத்தின் ஒழிக்கீற்றும் எப்போது விழும் என எவராலும் சொல்ல முடியாத நிலை இருந்தது. என்றாலும் கொடூரமான பயங்கரவாதத்திலிருந்து எமது நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பு என்னால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை நான் உறுதியாக என் மனதில் நிலைநிறுத்திக்கொண்டேன். எனது இந்த எதிர்பார்ப்பை நீங்கள் விளங்கிக்கொண்டீர்கள். இதனை 2005ஆம் ஆண்டில் உறுதிசெய்து எந்தவித சந்தேகமும் இன்றி உங்களுடைய மக்கள் ஆணையை எனக்குப் பெற்றுக்கொடுத்தீர்கள்.

நான் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்யும் அந்த சந்தர்ப்பத்திலும் கண்கள் குளமாகிய நிலையிலும் இதயம் கனத்த உங்களது வேண்டுகோள் தாய்நாட்டை கொடூர பயங்கரவாதத்திலிருந்து மீட்டுத்தாருங்கள் என்பதேயாகும். தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக என்னுடைய ஒரே குறிக்கோளாக என் இதயத்தில் ஆழமாகப் பதிந்தது உங்களுடைய அந்தக் கண்ணீரே. மாவில்லாறு அணை மூடப்பட்டு ஒரு சொட்டுத் தண்ணீரையும் வழங்காமல் எனது மக்களை இயற்கை மரணத்தை நோக்கி செல்வதற்கு பயங்கரவாதிகள் எடுத்த அந்த முயற்சியை நாட்டை மீட்டெடுப்பதற்கான முதலாவது அடித்தளமாக பயங்கரவாதிகளுக்கு எதிராக முதலாவது வேட்டாக இதனை நான் பயன்படுத்திக்கொண்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005ஆம் ஆண்டு நீங்கள் எனக்கு பொறுப்பாகத்தந்த இந்த நாடு பயங்கரவாதிகளிடமிருந்து மட்டுமல்ல பொருளாதார ரீதியாகவும் துவண்டுபோன நிலையில் இருந்தது. வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம் என்பன உச்சநிலையை அடைந்திருந்தன. உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்தன. தேசிய வருமானம் மிகவும் குறைவடைந்திருந்தது. வறுமை உச்சநிலையில் இருந்தது. கல்வி, சுகாதார சேவை போன்ற துறைகளில் வெற்றிடங்கள் அதிகளவில் இருந்தன. என்றாலும் அரச தேவைக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த சேவைகள் அனைத்தும் மக்களின் தேசிய அபிலாசைகளை மட்டுமல்ல அன்றாட தேவைகைளை நிறைவேற்றிக்கொள்ளக் கூட முடியாத ஒரு துரதிஸ்டமான நிலையிலேயே இருந்தது. அரச கடன் தேசிய வருமானத்தைவிட 102 வீதமாக இருந்தது. இதனால் உங்களது வாழ்க்கையை பாதுகாக்கும் பொறுப்பு மட்டுமல்ல பொருளாதார சமூகரீதியாக பலப்படுத்தும் கடப்பாடும் பொறுப்பும் என்மீதும் சுமத்தப்பட்டது.

நீங்கள் அனைவரும் அதற்காக எனக்கு வாழ்த்துக்கள் கூறி நாட்டை விடுதலை செய்வதற்கான தலைமைதாங்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு பாரிய சக்தியாக எனது நண்பர்கள் கூட்டமாக என்னுடன் இருந்தீர்கள். தாய்நாட்டையும் உங்களையும் நான் ஒன்றாகவே காண்கிறேன்.

2009ஆம் ஆண்டு உங்களதும் எனதும் இந்தத் தாய்நாடு சுதந்திரம் மற்றும் சமாதானம் புதிதாகப் பிறந்த எழிலான பூங்காவாக நாடு முழுவதும் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது. நீங்கள் மகிழ்ச்சி பிரவாகத்தில் வெற்றிக்கோசங்கள் எழுப்பும்போது நான் ஆனந்தக் கண்ணீருடன் உங்களை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு தகப்பன் ஒரு சகோதரன் ஒரு உறவினன் ஒரு நண்பன் என்ற ரீதியிலேயே நான் உங்களை பார்த்துக்கொண்டிருந்தேன்.

2005இல் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட எந்தப் பொறுப்பு நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று மகிழ்ச்சி அடைந்த நீங்கள் என்னிடம் கேட்டது துரிதமான சமூக பொருளாதார அபிவிருத்தி என்பதை நான் அறிந்திருந்தேன். 2010ஆம் ஆண்டு முதல் முறையாக அதிகூடிய மக்கள் ஆணையை எனக்குப் பொற்றுக்கொடுத்தது அதனாலேயே. உங்களது அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புகளை நடைமுறைச்சாத்தியமாக்கி வறுமையை 7 வீதமாகக் குறைத்தும் தனிநபர் வருமானத்தை 4000 டொலர்கள் வரையும் பொருளாதார வளர்ச்சி வீதத்தை 7 வீதத்துக்கும் அதிகமாக தொடர்ச்சியான பொருளாதார அபிவிருத்தியுடனான நாட்டை நான் உங்களுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறேன்.

தெற்கு மற்றும் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைகள் அடங்கலாக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் பெருந்தெருக்கள் கட்டமைப்பு சர்வதேச மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சுகல கிராமிய வீதிகளையும் புனரமைத்துள்ளேன். காலணித்துவ யுகத்தில் கட்டப்பட்டிருந்த எந்தவித புனரமைப்புக்களும் செய்யப்படாத பாலங்களும் பயங்கரவாதிகளினால் அழிக்கப்பட்ட பாலங்கள் உட்பட நாட்டிலுள்ள பாலங்கள் கட்டமைப்புகளை புனரமைத்துள்ளேன். மாகம்புர புதிய துறைமுகம், கொழும்பு தெற்கு புதிய துறைமுகம், காலி, திருகோணமலை, ஒலுவில் துறைமுகங்கள் உட்பட துறைமுக கட்டமைப்பையும் கட்டியெழுப்பியுள்ளேன். கட்டுநாயக்க விமான நிலையம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டது. அத்துடன் மத்தள புதிய சர்வதேச விமான நிலையம் பூர்த்திசெய்யப்பட்டு, உள்ளூர் விமானநிலையக் கட்டமைப்பையும் உருவாக்கினேன்.

கெரவலப்பிட்டிய நுரைச்சோலை மற்றும் மேல் கொத்மலை மின்உற்பத்தி நிலையங்கள் கட்டப்பட்டதுடன் சகலருக்கும் மின்சாரம் பெற்றுக்கொடுத்தேன். பொலன்னறுவை, திருகோணமலை, காலி, கொழும்பு பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் குளாய் விநியோகத்திட்டம் ஊடாக அந்தப் பகுதிகளிலுள்ள மக்களின் குடிநீர் உரிமையை உறுதிப்படுத்தினேன். ஏனைய சகல மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தை முழுமைப்படுத்தி சகலருக்கும் குடிநீர் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தை நான் முழுமைப்படுத்தினேன். மொரகஹாகந்த, உமா ஓய, தெதுறு ஓய, யான் ஓய, மாதுரு ஓய பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் ஊடாக விவசாயத்துக்கான தண்ணீர் தேவையை முழுமைப்படுத்தியுள்ளேன்.

மொழி ஆய்வு கூடம், கணித ஆய்வு கூடம், விஞ்ஞான ஆய்வு கூடம் என்பவற்றுடன் கூடிய மஹிந்தோதய 1000 பாடசாலைகள் திட்டம் ஊடாக கொழும்பு நகரில் உயர்பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கிடைக்கும் கல்வி உரிமை கிராமிய பாடசாலை மாணவர்களுக்கும் கிடைப்பதற்கு வழிவகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளேன். பிள்ளைநேய பாடசாலைத் திட்டத்தின் ஊடாக அடிப்படை வசதிகள் கூட இல்லாத சுமார் 5000 பாடசாலைகளுக்கு குடிநீர், மின்சாரம் மற்றும் மலசலகூட வசதிகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தேன். கொழும்பு பெரியாஸ்பத்திரியிலிருந்து கிராமிய வைத்தியசாலைகள் வரையில் சகல சுகாதார கட்டமைப்பையும் அபிவிருத்தி செய்துள்ளேன். இவை நீங்கள் என்னிடம் எதிர்பார்க்காதவை என்றாலும் நான் இந்த நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்த அபிவிருத்தியின் ஒரு துளி மட்டுமே.

எந்தவித பேதமும் இன்றி எமது தாய் நாட்டின் சகல பகுதிகளுக்கும் அபிவிருத்தியின் ஒளிக்கீற்றுகள் பரவின. 2005ல் கண்ட கண்ணீருக்குப் பதிலாக மகிழ்ச்சியுடன் கூடிய நாட்டு மக்களை நான் உருவாக்கினேன். அத்துடன் சுதந்திரமாக அரசியலில் ஈடுபடவும், இரவு பகல் அச்சமின்றி சென்று வரவும், நல்லாட்சி மற்றும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக சுதந்திரமாகப் பேசுவதற்கு எழுதுவதற்கு உரிய சூழலை நான் உருவாக்கியிருக்கிறேன். 1977இல் இருந்து பயங்கரவாத மேகக்கூட்டங்களால் மறைந்துகிடந்த சகல தலைப்புகளும் சுதந்திரமாக வெளியே வருவதற்கு வழிவகை செய்தேன். இந்தத் தலைப்புகளுக்கு உரிய பிரதான அடிப்படைத் தீர்மானங்கள் மற்றும் செயற்பாடுகளை எடுத்த நான், உங்களோடு இணைந்து வடக்கிற்கு மாகாணசபையொன்றை ஏற்படுத்தினேன். உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தினேன். புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்கள் சமூகமயப்படுத்தப்பட்டனர். இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். 365 நாட்களும் நடைமுறையிலிருந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தை மறுசீரமைப்பதற்காக பாராளுமன்றத்தில் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. நான் பதவியேற்பதற்கு முன்னர் சுமார் 7 இலட்சமாக இருந்த அரசசேவை இன்று 14 இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. நீதியானதும், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேசிய அடையாள அட்டை இல்லாமல் ஒரு அமைச்சருக்குக் கூட வாக்களிக்க முடியாத அளவுக்கு சட்டம் இறுக்கமாக்கப்பட்டது. சிறுவர் சிறுமியர் கடத்தப்பட்டு சிறுவர் போராளிகளாக மாற்றிய யுகத்தை நான் முடிவுக்குக்கொண்டுவந்தேன். கூட்டம், பேச்சு சுதந்திரம் என்பவற்றுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடப்பட்டிருந்த அவசரகாலச் சட்டம் என்ற வேலியை நீக்கினேன். பிரபுக்களின் பாதுகாப்புக்கு மூடப்பட்டிருந்த வீதிகளைத் திறந்துவிட்டேன். வீதிகள் தோறும் போடப்பட்டிருந்த பொலிஸ் மற்றும் இராணுவக் காவலரண்கள் அனைத்தையும் நீக்கினேன். பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கினேன். இவ்வாறானவை ஒரு நீண்ட பட்டியல் இருப்பது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். என்பதால் இது தொடர்பாக நான் மேலதிகமாக எழுதவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் மூன்றாவது முறையாகவும் உங்களது ஜனாதிபதியாக பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக மக்களின் ஆணையை நான் வேண்டி நிற்பதானது அபிவிருத்தியின் மற்றும் ஜனநாயக நல்லாட்சியின் முழுமையான அன்பான தாய்நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான மூன்றாவது செயற்பாட்டை முன்னெடுப்பதென்ற சிறந்த நோக்கத்துடனேயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 தேசிய பாதுகாப்புத் தொடர்பாக பூலோக ரீதியான முன்னுதாரணம்

பயங்கரவாதம் கடந்த காலங்களுடன் நிறைவுபெற்றுவிட்டதே தவிர எதிர்காலத்தில் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்கள் இல்லையென்றே சிலர் காண்பிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். என்றாலும் உண்மை அதுவல்ல. புலிகள் ஐரோப்பிய மற்றும் மேலைத்தேய நாடுகளில் பிரிவினைவாதத்தை சுமந்துகொண்டு இன்னமும் தமது இரையைத் தேடி அலைவதை நான் காண்கின்றேன். அவர்கள் வெளிப்படையாக ஆயுதம் ஏந்தி போரிடவில்லை.

தேசிய பாதுகாப்புத் தொடர்பாக உச்ச அளவில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் வெடிக்கும் ஒரு வெடிகுண்டு மூலம் எமது தேசத்தின் எதிர்கால பயணத்தை மீண்டும் பின்னோக்கித் திருப்பக் கூடும். இதனால் தாய்நாட்டின் தேசியபாதுகாப்பை உறுதிப்படுத்துவதானது பொருளாதார சமூக அபிவிருத்தி கட்டாயமான முன்நிபந்தனையாக உறுதியாக நம்புகிறேன். தேசிய பாதுகாப்பு என்பது இதுவரை தொடர்ச்சியாக எமது நாட்டில் வைத்திருந்த அதிகூடிய கவனம் இனிமேலும் பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்வேன் என நான் உறுதியளிக்கிறேன்.

தமிழ், முஸ்லிம், சிங்கள, மலே, பறங்கியர் உள்ளிட்ட அனைவருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கான ஒரு நாட்டை நான் கட்டியெழுப்பியிருக்கிறேன். நீங்கள் இன்று அச்சத்திலிருந்து மீண்ட இதயத்துடன் மகிழ்ச்சியுடன் மனம் நிறைந்தவர்களாக வாழ்கிறீர்கள். எனினும் நான், தூங்காத கண்களுடன் எந்தவொரு இலங்கைப் பிரஜைக்கோ, எந்தவொரு இனத்துக்கோ, மதம் மொழி தொடர்பிலோ எந்தவித பேதமும் பார்க்கமாட்டேன் என்பதை நான் உறுதியளிப்பதுடன், சமூகத்தின் பொதுநலன் மற்றும் தேசத்தின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய இலங்கைக் கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். ஐக்கிய இலங்கை என்ற கொள்கைக்கு மாறான எந்தவிதமான கோரிக்கைகளுக்கோ அல்லது அழுத்தங்களுக்கோ இடம்கொடுக்க மாட்டேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நான் எந்த இலங்கை பிரஜைக்கும் இனம், மதம், மொழி அல்லது வேறு எந்த பேதங்கள் ஊடாகவும் வேறுபாடு காட்டமாட்டேன் என்பதை உறுதியளிக்கிறேன்.

- ஐக்கிய இலங்கையை பாதுகாப்பதற்காக நாங்கள் அனைவரும் செலுத்தியிருக்கின்ற விலை மிக அதிகம். அதனால் சமூகத்தின் பொதுநலம் கருதி நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய இலங்கை கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வேன். மீண்டும் ஒருமுறை பிரிவினைவாதமோ அல்லது நாட்டை ஸ்திரமற்றதாக்குவதற்கு எவருக்கும் இடமளியேன்.

- மனிதாபிமான நடவடிக்கையுடன் தொடர்புடைய படையினர் உட்பட எந்த இலங்கை பிரஜையையும் எந்த சர்வதேச நீதிமன்றத்தின் முன்னோ அல்லது விசாரணைக்கு உட்படுத்த மாட்டேன். உயிரைப் பணயம் வைத்தேனும் அவர்களைக் காப்பேன்.

- மனிதாபிமான நடவடிக்கையின்போது இலங்கையில் வாழும் எந்த பிரஜையினதும் மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தால் நாட்டில் அமுலில் உள்ள சட்ட கட்டமைப்புக்குள் தேசிய நடைமுறையின் கீழ் நேர்மையான முறையில் நீதி நேர்மையை நிறைவேற்றுவதற்கு தேவையான பொறிமுறையை ஏற்படுத்துவேன்.

- நவீன காலனித்துவத்தின் இரும்பு கால்களால் நசுக்கப்பட்டு அதன்படி மூச்சுவிட்டுக்கொண்டிருக்கும் அல்லது இறந்துபோய்க்கொண்டிருக்கும் சகோதர நாடுகளுக்குப் பெறக்கூடிய வகையிலான அரசியல் முன்னுதாரண நாடாக நான் கட்டியெழுப்புவேன்.

## நிரந்தரமான வெளிநாட்டுக்கொள்கை

- உலம் இரண்டு அதிகார முகாம்களாக பிரிந்திருக்கும் நிலையிலும் இடதுசாரிகளின் தத்துவங்கள் வீழ்ச்சியடைந்து உலக அரசியல் பரஸ்பரமற்ற முறையில் இருக்கும்போதும் நாங்கள் பாதுகாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த எங்களது அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையை நிலையாக முன்னெடுத்துச் செல்வேன்.

- பயங்கரவாதத்துக்கு எதிராக நாங்கள் எழுந்தபோது எங்களுடன் கைகோர்த்துக்கொண்ட சகல நாடுகளுடனம் பயங்கரவாதத்தை ஒழித்தது குற்றம் எனக் கருதும் எங்களுக்குத் தண்டனை வழங்கக் காத்திருக்கும் நாடுகளுடனும் நட்பு ரீதியான கொள்கையைக் கடன்பிடிப்பேன்.

- இந்தியா இலங்கை உட்பட சார்க் வலய நாடுகளுடனான தொடர்புகளை மேன்மேலும் பலப்படுத்திக்கொள்ள நான் நடிவடிக்கை எடுப்பேன்.

- இந்தியா, சீனா, ரஷ்யா மற்றும் ஜப்பான் போன்ற நட்பு நாடுகளுடன் இருக்கும் அரசியல் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப தொடர்புகளைப் பலப்படுத்துவேன்.

- மத்திய கிழக்கு நாடுகள் உட்பட ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளுடனம் உள்ள வெளிநாட்டுத் தொடர்புகளை மென்மேலும் விஸ்தரிப்பேன்.

- தெற்காசிய நாடுகள் இடையே உச்ச சட்ட ஆளுகையுடன் அமைதியான நாடாக உலகின் பாராட்டுக்களைப் பெற்ற எனது நாடு வலய மற்றும் உலக பிரச்சினைகளுக்கு சமாதானத் தூதுச் சேவையாளனாக அனுப்புவேன்.

## உணவுப் பாதுகாப்புக்கு முதலிடம்

ஒரு நாட்டில் உணவுப் பாதுகாப்பு என்பது அந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் ஒரு நாட்டில் சரியான முறையில் தரமான, தேவையான உணவு கையிருப்பைப் பேணுவதற்குத் தவறும் பட்சத்தில் அல்லது வேண்டும் என்றே அதற்கு தடையை ஏற்படுத்தல் என்பன நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு ஏனைய நாடுகளுக:கு வழிவகுத்துவிடும் என்பதாலேயே இது தேசிய பாதுகாப்புடன் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகிறது. இதனால் இலங்கை மக்கள் மீண்டும் மண்டியிட்டு வீழ்வதற்கு இடமளிக்க மாட்டேன்.

- நாட்டின் தேவைக்கு ஏற்ற வகையில் போதுமான உணவு உற்பத்தியை, விற்பனையை, கையிருப்பைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கு தேவையான சட்டரீதியான கட்டமைப்பை உருவாக்குவதற்காக உணவு பாதுகாப்புச் சட்டத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பேன்.

- நாட்டின் அரிசி உற்பத்தியை உயர் தரத்தில் பேணுவதுடன் அன்று முதல் எமது தேசிய உணவு வகையான தானிய வகைகள், பலா, ஈரப்பலா, கிழங்கு, வற்றாளை போன்ற பாரம்பரிய செய்கைகளை மேம்படுத்துவேன்.

- புனரமைக்கின்ற சகல குளங்களுக்கு அருகிலும் ஈரலிப்பான பகுதிகளில் பலா, ஈரப்பலா போன்ற தேசிய உணவு செய்கையை செய்வதற்கு வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பேன்.

- நாடு முழுவதும் உள்ள நன்னீர் நீர்நிலைகளை நன்னீர் மீன்வளர்ப்புகளை மேற்கொள்வதன் ஊடாக நாட்டின் மொத்த உணவுத் தொகையை மேம்படுத்துவேன்.

- அரசினால் கொள்வனவு செய்யப்படும் நெல்லை தேசிய அறுவடையின் 10 வீதமாக அதிகரித்து அந்த நெல்லை சிறிய மற்றும் நடுத்தர அரசி ஆலைகளுக்காக வழங்க நடவடிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 முழுமையான அரசியல் மறுசீரமைப்பு - புதிய அரசியல் கலாசாரம்

1978இல் சரியான முறையில் கலந்துரையாடப்படாத எம்மீது சுமத்தப்பட்ட அரசியல்யாப்பு காரணமாக 36 வருடங்களாக நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். அதேநேரம் ஒருவருக்கு ஒருவர் ஏற்றுக்கொள்ளாத தற்கால திருத்தங்களை தற்போதைய அரசியல்யாப்பு விகாரமடைந்துள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதனால் மென்மேலும் தற்காலிக திருத்தங்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடிய புதிய அரசியல்யாப்பை ஒருவருட காலத்தினுள் நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.

- மக்களின் எதிர்ப்பார்ப்புக்களை இனங்கண்டு புதிய அரசியல்யாப்பை உருவாக்குவதற்காக சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கி முழு பாராளுமன்றத்தையும் அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான சபையாக உருவாக்கப்படும்.

- உரிய அரசியல்யாப்புக்கு பிரஜைகளின் கருத்துக்களையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறாத கட்சிகள் இளைஞர் பாராளுமன்ற பிரதிநிதிகள், அரசியல்யாப்பு நிபுணர்கள், புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்களை உள்ளடக்கி பிரஜைகள் ஆலோசனை சபையொன்றை நியமிப்பேன்.

- அந்தக் கருத்துக்களை உள்ளடக்கி அரசியல்யாப்பு வரைபு நடைமுறையிலுள்ள அரசியல்யாப்பின் பல்வகை தன்மைக்கு ஏற்ப நிறைவேற்றுவதற்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பேன். அதன் பின்னர் இந்த வரைபுக்கு உங்களது அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவேன்.

- தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, தேர்தல் முறைமை, சட்டத்தின் ஆளுகை மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாட்சி போன்ற துறைகள் அனைத்தையும் புதிய அரசியல்யாப்பில் உள்ளடக்குவேன்.

- நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையின் நன்மை தீமைகள் பற்றி இடம்பெறுகின்ற வாதப் பிரதிவாதங்கள் குறித்து நான் மிகவும் பொறுமையாக செவிமடுத்தேன். அதனால் பாராளுமன்ற முறைமையில் காணப்படுகின்ற பலவீனங்களைக் களைந்து சிறந்த பண்புகளை உள்ளடக்கி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அரசியல்யாப்பு சபையின் தீர்மானங்களுக்கு அமைய பொருத்தமான முறையில் திருத்தி அமைப்பேன்.

- நடைமுறையிலுள்ள விருப்பு வாக்கு முறையில் காணப்படும் மோசமான பண்புகளை நீக்கி உறுதியான அரசாங்கம் வலுவான எதிர்க்கட்சி மற்றும் சிறுபான்மைக் குழுக்கள் உள்ளிட்ட சமுதாயத்தில் பல்வகைமை பாராளுமன்றத்தில் பிரதிபலிப்பதை நோக்காகக் கொண்டு விகிதாசார பிரதிநிதித்துவம் மற்றும் தொகுதிவாரி முறைமையை உள்ளடக்கி புதிய தேர்தல் முறைமையை நடைமுறைப்படுத்துவேன்.

- மக்கள் பிரதிநிதிகள் மக்களுடன் தொடராக கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டுமென நான் நம்புகிறேன். அதேநேரம், சட்டத்தைத் தயாரிக்கும் செயற்பாட்டுக்கு மக்களின் கருத்துக்கு நேரடியாகப் பெற்றுக்கொள்வது ஜனநாயகத்தை மென்மேலும் சிறப்பாக்கும். அதற்காக மகாசாங்கத்தினர் ஏனைய மதத்தவர்கள் தொழில்சார் நிபுணர்கள், புத்திஜீவிகள், இளைஞர் பாராளுமன்ற பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களின் தேசிய மட்டத் தலைவர்கள் போறோரை உள்ளடக்கிய பிரஜைகள் சபையொன்றை நியமிப்பதற்கான யோசனையை முன்வைக்கிறேன்.

- மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனங்களில் மகளீர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்குத் தேவையான யாப்பு ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு விதிகளை புதிய அரசியல்யாப்பில் உள்ளடக்குவதற்கான யோசனையை முன்வைக்கிறேன்.

- அபிவிருத்தி செயற்பாடு பரவலாக்கப்படுவதைத் தொடர்ந்து நல்லாட்சி குறித்து புதிய அணுகுமுறை குறித்து கவனம் செலுத்தவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் நல்லாட்சி ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் காணப்படும் பலவீனங்களை ஆய்வுசெய்து அந்த நிறுவனங்களை மறுசீரமைப்பதற்குரிய காலம் உருவாகியுள்ளது என நான் கருதுகிறேன். அதனால் தொழில்நுட்பம், முகாமைத்துவம் மற்றும் நிதிக்கணக்காய்வு என்பவற்றுக்கென திறமைமிக்க தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவொன்றை உருவாக்குவேன். அவர்கள் சுதந்திரமான முறையில் விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி மற்றும் மனிதவளம் மாத்திரமல்லாமல் அதிகாரத்தையும் அந்த ஆணைக்குழுவுக்குப் பெற்றுக்கொடுப்பேன்.

- அரசியல்வாதிகளின் இருப்புக் குறித்து சமூகத்தில் கலந்துரையாடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் சகல மக்கள் பிரதிநிதிகளும் தமது பதவிகளின் கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நல்லிப்பைப் பாதுகாப்பது குறித்த உறுதிமொழியை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்வேன். அந்த உறுதிமொழி குறித்த காலப் பகுதியில் பாதுகாக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பது தொடர்பாக கண்காணிப்பதற்குரிய அதிகாரத்தை கணக்காய்வு ஆணைக்குழுவுக்குப் பெற்றுக்கொடுப்பேன்.

- அமைச்சரவைக் கூட்டுப்பொறுப்பு மற்றும் இரகசியத் தன்மையை பாதுகாத்தல் என்பதை அரசியல் யாப்பு ரீதியான பொறுப்பாக்குவேன்.

- தேசிய பெறுமானங்களுடன் கூடிய யோசனைகள் குறித்து கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு இளம்பராயத்தினருக்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதற்காக அவ்வாறான யோசனையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இளைஞர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அவர்களின் கருத்தை அறிவேன்.

- எதிர்கால அரசியல் குறித்து எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பாராளுமன்றத்தில் ஆலோசனை குழுக்களுக்கு பிரதிநிதிகளை நியமிப்பதற்கு அரசியல்யாப்பு ரீதியான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பேன்.

## இலங்கை-இந்திய தத்துவார்த்த ரீதியான மரபுரிமையுடன் கூடிய நல்லாட்சி கொள்கைத்திட்டம்

நல்லாட்சியென்பது புதிய லிபரல் காலணித்துவத்தின் பஞ்சீலத்தின் போலி அடிகள் அல்ல. அது உண்மையான அடிப்படை ஆதாரமாக மரஞ்செடி கொடிகளையும் உயிரினங்களையும் மாத்திரமல்லாமல் சூரியன் சந்திரன் காற்று மழை வெய்யில் நீர் பூமி ஆகிய அனைத்துடனும் பின்னிப் பிணைந்த இலங்கை இந்திய தத்துவார்த்த ரீதியான மரபுரிமையைக் கொண்டிருக்கிறது என நான் நம்புகிறேன். அதனால் நல்லாட்சியின் மூலக்கூற்றை நான் புதிய லிபரல் வாதத்தின் ஆலோசனைகளை வழங்கும் அமைப்புகளிடமிருந்தோ அல்லது துணை நிறுவனங்களிடமிருந்தோ பெற்றுக்கொள்ளவில்லை. வழமான நாட்டின் சுபீட்சமான சமூகத்தின் இயற்கையும் நற்பண்புகளும் இணைந்த சமூகத்தின் ஒருவருக்கிடையேயான பிணைப்புகளையும் வரலாற்று மரபுரிமையுடன் கூடிய இந்திய இலங்கை நெறிமிக்க ஆட்சியிலிருந்தே பெற்றுக்கொண்டேன். சுமார் 5000 வருடங்கள் பழமையான அந்த மரபுரிமையானது அழியாத சக்தியாக இன்று மாரி எம்மை ஒழுங்குபடுத்தியுள்ளதாக நான் உணர்கிறேன். தனிநபரை மையப்படுத்திய சட்டத்தின் அடிப்படையில் தொடரான தர்மத்தின் ஆளுகைவரை உயர்த்திப்பிடிக்கக் கூடிய நல்லாட்சியின் அடிப்படையின் சொந்தக்காரர்களாக இலங்கையராக நாம் மாறுவோம். நானும் நீங்களும் அந்த உரிமையின் பெருமைக்குரிய சொந்தக்காரர்களாகும். அந்த மரபுரிமையின் அடிப்படையில் எமது தாய்நாட்டுக்கு தீங்கு ஏற்படாத வகையில் உண்மையான நல்லாட்சி முறையை ஏற்படுத்துவேன் என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டு ஜனநாயகமும் சமூக ஆட்சி முறையும்

இந்த நாட்டில் நானும் நீங்களும் தனிமைப்பட்டவர்கள் அல்ல. ஆயிரக்கணக்கான வருட வரலாற்றில் எமது மூதாதையினர் ஒன்றிணைந்த கூட்டுறவு காப்பு, பாதுகாப்பு, போஷாக்கு, பொழுதுபோக்கு மற்றும் ஆண்மீகம் என்பவற்றுடன் ஒருவருக்கு ஒருவர் பின்னிப்பிணைந்து எழில் மிகு வளம் நிறைந்த கலாசாரம் எம்மிடம் இருந்ததால் சிறப்பாக வாழ்ந்தனர். அதனால் குடும்ப, சமூகம், கிராமம், பிரதேசம் நகரம் உள்ளிட்ட இவையனைத்தும் சங்கிலிக்கோவைபோன்று இன்று பின்னிப்பிணைந்து வாழ்கின்றனர். கிராமத்தில் நகரம், நகரத்தில் கிராமம் என நாம் கண்டகனவும் கூட இன்று நாம் அனுபவிக்கும் யதார்த்தமாக மாறியுள்ளது. ஒருவருக்கொருவர் சுயமாக இணைந்த சிறிய மிகச்சிறிய சமூக அமைப்புகள் கம்பனிகள் என்பன எமது நாட்டின் சமூக வாழ்வில் சமூக அரசியல் ரீதியான சுழற்சியுற்றுள்ளது. உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லாததைவிட ஒன்றிணைந்த ஒழுக்க அமைப்பு மிக்க மக்கள் இங்கு வாழ்வதாகவும் அதற்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுத்தவன் என்ற வகையிலும் நேர்மையாகக் கூறுகிறேன், நாட்டின் சமய நிறுவனங்களும், சிவில் சமூக அமைப்புகளும் உள்ளிட்ட ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் ஊடாக கிராமத்தையும் நகரத்தையும் கூட்டு ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நான் நடவடிக்கை எடுப்பேன். சமய அமைப்புகள் சமூக மற்றும் கிராமிய மட்ட சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள், சமூக நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் அரச அமைப்புக்கள் என்பவற்றின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து கிராம உத்தியோகத்தர்கள் மட்டத்தில் கிராமசபை முறையை உருவாக்குவதற்கு யாப்பு ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன். அதற்காக ஆராய்ச்சி மற்றும் அதற்குரிய ஆராய்ச்சிகளும் வேலைத்திட்டங்களும் தற்போது நிறைவடைந்துள்ளன. அந்த அறிவையும் புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டு கூட்டுரிமையை உறுதிப்படுத்தி கிராமசபை மட்டத்தில் அபிவிருத்தி குறித்த சமூக கலாசார ரீதியில் தீர்மானங்களை எடுப்பதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் மக்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றம் மாகாணசபை மற்றும் பிரதேசமட்ட நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதிநிதித்துவ ஜனநாயக செயற்பாட்டை உறுதிப்படுத்தி சமூக மற்றும் கிராம மட்டத்தில் முடிவுகளை எடுப்பதற்காக நேரடி ஜனநாயக மற்றும் பங்குபற்றுதல் ஜனநாயக முறைமையை பின்பற்றுவதற்கு ஊக்குவிப்பேன். அதன் ஊடான எனது நாட்டின் சகோதர மக்களை ஜனநாயக நல்லாட்சி செயற்பாட்டின் மையப் பங்காளர்களாக்கி இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தை வெற்றிகரமான நிலைக்குப் பொருத்தமான மட்டத்துக்கும் உயர்த்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வேன். சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டு வலையமைப்பை ஒன்றிணைத்து கூட்டுத் தேசிய பேரவையொன்றை உருவாக்கி அதனை நாட்டின் கொள்கையைத் தயாரிப்பதற்கான அனுசரணைக் கட்டமைப்பாக மேம்படுத்துவேன். அதேபோன்று

## பேச்சு சுதந்திரமும் ஊடகச் சுதந்திரமும்

பேச்சு சுதந்திரத்தை அடிப்படையாக சுதந்திரமாக விசேடமாக ஏற்றுக்கொள்ளப்படும் ஜனநாயக சமூகத்தில் வாழும் நாம் ஊடக நிறுவனங்கள் சுதந்திரமாக செயற்படுவதை நாங்கள் எப்போதும் பாதுகாப்போம். எந்நேரமும் சமூகத்தின் சகல பிரஜைகளும் பேச்சுரிமையில் குறிப்பிடப்படும் ஊடக சுதந்திரத்தை நாம் எப்போதும் பாதுகாப்பேன். அதேநேரம் வெகுஜன ஊடகத்துறை சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் இருப்பதைத் தொடர்ந்தும் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். ஊடகத்தின் அடிப்படைப் பொறுப்பு தொடர்பாடல் செயற்பாடுகளுக்கு அப்பால் சென்று அதனை தேசிய அபிவிருத்தி பங்காளராக்க முடியும் என நான் நம்புகிறேன். நாம் இன்று வாழும் டிஜிட்டல் யுகத்தில் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், இணைய ஊடகங்களின் செயற்பாடுகள் நாட்டின் அபிவிருத்திக்கும் ஜனநாயகத்துக்கும் இருப்புக்கும் அத்தியாவசியமான காரணங்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

- பாரம்பரியமாக இருந்துவரும் அச்சு வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய துறைகளுக்கு தொழில்நுட்ப பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக விசேட வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊடகவியலாளர்களை தொழில்சார் நிபுணர்களாக உருவாக்குவதற்குத் தேவையான செயற்றிட்டங்களை செயற்படுத்துவேன்.

- ஊடகவியலாளர்களை சகல வசதிகளும் குறிப்பாக அறிவு மற்றும் தொழில்நுட்ப பயிற்சியில் வலுப்படுத்துவதற்காக ஊடக பல்கலைக்கழக அறிவியல் நிலையமொன்றை ஸ்தாபிப்பேன்.

- ஊடகவியலாளர்களுக்காக கொழும்பு நகருக்கு அருகில் நவீன தனியான வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிப்பேன்.

- ஊடகம் என்கின்ற வியாபார நோக்கம் இல்லாத தேசிய அபிலாஷைகளை மையமாகக் கொண்டு செயற்படக்கூடிய தேசிய பொறுப்புக்களுடன் கூடிய துறையாகும். அதற்கான வெகுஜன ஊடக கலாசாரமொன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 நற்பண்புகள் நிறைந்த சமூகம்

நாட்டின் பௌதீக அபிவிருத்தி மூலம் பெறுகின்ற வெற்றிகளை நற்பண்புகள் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதன் ஊடாகவே அவற்றை சரியான முறையில் பாதுகாக்க முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன். நாம் உலகில் மிகப்பழமையான பாரம்பரிய விழுமியங்களின் சொத்தக்காரர்களாவோம். அது தொடர்பான பெருமை எமது நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய சகலருக்கும் அதனால் நாம் இலங்கையர் என்ற வகையில் பெற்றுள்ள பாரம்பரிய வெற்றிகளை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதன் காரணம் எங்களது ஈடுஇணையற்ற பாரம்பரிய விழுமியங்கள் மீது கால் பதித்திருப்பதே.

தேசத்தினை தொடராக மேம்படுத்தவும் முன்னேற்றவும் மாத்திரமல்லாமல் தேசிய ஒற்றுமை மற்றும் இணக்கப்பாடு தங்கியிருப்பது நாம் அந்த பாரம்பரிய மரபுரிமைகளுக்கு உயிரூட்ட எவ்வளவு தூரம் பங்காளியாகின்றோம் என்பதிலேயே தங்கியிருப்பதாக நாம் கருதுகிறோம். அந்த மரபுரிமைகளுக்கு உயிரூட்டுவதென்பது வேறொன்றுமல்ல. வரலாற்று ரீதியில் எம்மிடமுள்ள நற்பண்புகள் நிறைந்த சமூகத்தை மீளக்கட்டியெழுப்புவதேயாகும்.

## சமய அபிவிருத்தி

- சம்புத்த சாசனத்தை பிரதானமாகக் கொண்டு ஏனைய அனைத்து சமய கலாசாரங்களையும் மேம்படுத்தச் செய்வதற்கு முழுமையான அரச அனுசரணையைப் பெற்றுக்கொடுப்பேன்.

- சகல சமய அமைப்புக்களினதும் வரலாற்று சம்பிரதாயங்கள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு ஏற்ப அவற்றின் மேம்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சட்டக் கட்டமைப்பை சமய தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்று தயாரிப்பேன்.

- சம்புத்த சாசனத்தை மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடலுக்கு உள்ளாகியுள்ள புதிய விகாரைகள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் சட்டம் உட்பட ஏனைய அனைத்துச் சட்டங்களும் குறித்தும் துரிதமாகக் கலந்துரையாடி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன்.

- இலங்கையில் 2300 வருடங்கள் வரலாற்றைக் கொண்ட பௌத்த கலாசாரத்தின் பிரதான பகுதியாக விளங்கும் பௌத்த நூல் மற்றும் ஆவணங்களின் சுபீட்சத்துக்கும் பௌத்த மதம் குறித்தும் ஆர்வம் காட்டுகின்ற வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் அல்லாமல் ஏனைய சமயத்தவர்களின் பயன்பாட்டுக்கு வழங்குவதற்காக நவீன காலத்துக்கு ஏற்ற வகையில் அவற்றைப்பாதுகாக்கவென தேசிய பௌத்த நூலகமொன்றை அநுராதபுரத்தில் ஸ்தாபிப்பேன்.

- பாடசாலை பிள்ளைகளின் நற்பண்புகளை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பேன். இத்திட்டத்தை விரிவான அடிப்படையில் மாத்திரம் அல்லாமல் தரமான உயர்மட்டத்தில் சகல பாடசாலைப் பிள்ளைகளும் வழிபடுகின்ற மதத்தை அடிப்படையாகக் கொண்டு உரிவாகவேண்டுமென்பதே எமது நம்பிக்கை. இந்தத் திட்டத்துக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தலைமைத்துவத்தை வழங்க தயாராவுள்ளேன்.

## சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி

- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல் என்பவற்றிலிருந்து சிறுவர்களை விடுவிப்பதற்கு தேவையான கடுமையான சட்டக் கட்டமைப்பை தண்டனைச் சட்டக்கோவையில் உட்படுத்துவேன்.

- சகல விதத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கு துன்புறுத்தலுக்கு எதிரான மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புக்காக புதிய சட்டத்தை சமர்ப்பிப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிள்ளைகளுக்கோ பெண்களுக்கோ எதிராக நடைபெறுகின்ற துன்புறுத்தல்கள் தொடர்பில் தெரியப்படுத்தும் அடுத்த நிமிடமே உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக நடமாடும் பொலிஸ் குழுவொன்றை நிறுவுவேன்.

- சகல கிராமங்களுக்கும் **சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புக் குழுக்கள்** ஏற்படுத்துவேன்.

- கருவிலேயே குழந்தைகளை அழிப்பதைத் தடுப்பதற்கு எதிராக இவ்வாறான குழந்தைகள், தாயின் விபரங்கள் வெளிப்படுத்தப்படாமலே மாகாண சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் ஒப்படைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை அறிமுப்படுத்துவேன்.

- வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ பிள்ளைகள் தாக்கப்படுவதற்கு, அழுத்தங்களுக்கு உள்ளாவதற்கு, துஷ்பிரயோகத்துக்கு உள்ளாவது போன்றவற்றைத் தடுப்பதற்காக பெற்றோர், ஆசிரியர், மாணவர்களை உள்ளடக்கிய "குழந்தைகள் பாதுகாப்பு அரண்" வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவேன்.

- சகல அரச நிறுவனங்களிலும், பிரதேச செயலகங்களிலும் உளவியல் ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பேன்.

- குழந்தைகளைப் பாதிக்கும் மருந்து வகைகளை விற்பனை செய்யும் மருந்தக உரிமையாளர்களை, அந்த மருந்தகங்களில் பணிபுரிவோரை, சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோரை மற்றும் குழந்தைகளை தூண்டுபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கு ஏதுவாக சட்டரீதியான வழிவகைகளை செயற்படுத்தவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதாள உலகக் குழு மற்றும் போதைக்கு நிலையான தடை

பாதாள உலகத் தலைவர்களுக்கு சமாதான நீதவான் மற்றும் செயற்குழுக்களிலும் நியமனம் வழங்கிய காலத்திற்கு முற்றுப்புள்ளிவைத்து நான் அந்த பாதாள மற்றும் போதைவஸ்து ஏகாதிபத்தியத்தை ஒழித்துள்ளேன். பாதாளகுழு போதைவஸ்து பாவனையாளர், கப்பம் பெறுபவர்கள் உட்பட அனைத்து குற்றம் புரியும் கும்பல்களை முழுமையாக இல்லாதொழித்து இலங்கையை குற்ற கலாசாரம் என்னும் புத்தகத்தில் கடைசிப் பக்கத்தை எழுதுகிறேன்.

- போதைவஸ்து விற்பனை மற்றும் பாரிய குற்றச்செயல்களை தடைசெய்தல் தொடர்பாக இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் விசேட பாதுகாப்பு செயலணியொன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் அத்தகைய குற்றங்களை விசாரணை செய்து விரைவாக குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதற்காக விசேட குற்றவியல் நீதிமன்றமொன்றை ஆரம்பிப்பேன்.

- எமது நிரப்பரப்பிலும் உடற்பரப்பிலும் போதைவஸ்து வர்த்தகம் தொடர்பாக எந்தவொரு செயற்பாட்டிற்கும் இடமளிக்காத வகையில் போதைவஸ்து ஒழிப்பு கடற்படை செயலணியொன்றை ஏற்படுத்துவேன்.

- போதைவஸ்துக்களை இந்த நாட்டிற்கு கொண்டுவருதல் நாட்டிற்கூடாக விநியோகிக்கும் நடவடிக்கைகளை தடுக்கவும் பொலிஸ் போதைவஸ்து பிரிவு, சுங்கத் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனை பிரிவுகளின் அதிகாரிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் வளங்களை குறைவின்றி பெற்றுக்கொடுப்பேன்.

## ஜீவராசிகளுக்கு அன்பும் பாதுகாப்பும்

நாம் நீரில் விழுந்த எறும்பைக் கூட விரலால் தூக்கிவிட்டுக் காப்பாற்றும் பரிவுள்ள இனத்தவர். இரக்கம் எம் இனத்தின் இலட்சணமாகும். சுதந்திரமாகத் திரியும் பிராணிகளுக்குக் கூட தீங்கு செய்யாத உயர்கருணை கொண்டவர்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருக்கு மட்டுமன்றி ஜீவராசிகளுக்கும் அன்பும் பாதுகாப்பும் தொடர்ந்து விரிவாக்கும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- வழிப்பாதைகளில் குட்டி ஈனும் நாய்களையும் குட்டிகளையும் பாதுகாப்பதற்கான நிலையங்களை ஆரம்பிப்பதற்கு ஜீவராசிகள் கருணை அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். அதற்கான இடம் மற்றும் நிதி போன்றவற்றை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும்.
- தொடர்ச்சியாக ஜீவராசிகளுக்கு கருணை மற்றும் அன்பு காட்டும் பிரஜைகளைப் பாராட்டும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 நாட்டிற்காக உழைக்கின்ற தேசப்பற்றுள்ள அரச சேவை

தினமொன்றுக்கு பத்து ரூபா சம்பள உயர்வினை கோரி ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர் வர்க்கத்தினர் 24 மணித்தியாலத்துக்குள் வீட்டுக்கு அனுப்பிய, அரச சேவையை வீழ்ச்சியுறச் செய்து ஓய்வூதியத்தை இல்லாதொழிக்க முயற்சித்த வரலாற்றை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். மூலோபாய அரச தொழில் துறைகளை சீர்குலைத்து முக்கியமான அரச நிறுவனங்களை கொள்ளை இலாபத்துக்கு விற்றவர்கள் அவர்களே.

இவற்றைச் செய்வதற்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் வார்த்தைகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட சம்பள உயர்வு வாக்குறுதிகளை வழங்கியதை எளிதில் மறந்துவிடமுடியாது.

தனியார் மயப்படுத்துவதற்காக மக்கள் மயப்படுத்தல் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி அவர்கள் தமசேக் மயப்படுத்தல் பற்றி பேசி அரசசேவையை முழுமையாக அழிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். இது அவர்களின் மறைமுகமான நிகழ்ச்சிநிரலை செயற்படுத்துவதற்கே என்பதை நான் சொல்லித்தெரியவேண்டியதில்லை.

எனினும் அரச உரிமையை உறுதிப்படுத்தி அரச சேவையை மென்மேலும் பலப்படுத்தி வருடாந்த சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொடுக்க எம்மிடமுள்ள செயற்றிட்டங்களை நாம் ஒருபோதும் மாற்றம் செய்யப்போவதில்லையென உறுதியளிக்கின்றேன்.

ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான உரிமை, ஊழியர் சேமலாப நிதிக்கான உரிமை உட்பட அரச ஊழியர்களுக்கு உரித்தான சகல வரப்பிரசாதங்களையும் மேலும் பலப்படுத்தி அரச ஊழியர்களை கௌரவ பிரஜைகளாக்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

- தேவையற்ற தலையீடுகள் மற்றும் மட்டுப்படுத்தலின்றி சுயாதீனமாக தமது சேவையை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக புதிய சேவை ஒழுக்கக் கோவையை அரசசேவைக்கு அறிமுகப்படுத்துவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முறையான சம்பள திட்டம் மற்றும் பிரதான பதவிகளுக்கு பிரவேசிக்கும் முறைமையுடனான சேவையாப்பு ஆகியவற்றை பட்டதாரிகள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளுக்காக உருவாக்குவேன்.

- முகாமைத்துவ உதவி மற்றும் அதற்குச் சமமான தரத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளற்ற உத்தியோகத்தர்களுக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துடன் இணைந்ததாக பட்டமொன்றைப் பெற்றுக்கொள்ளும் செயற்றிட்டமொன்றை ஏற்படுத்துவேன்.

- தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான சேவைகளின் மேம்பாட்டுக்காக அச்சேவைகளில் நியமிக்கப்படும் அதிகாரிகளை பாராட்டும் நடைமுறையொன்றை ஏற்படுத்துவேன்.

- அரச ஊழியர்கள் தமக்கே உரித்துடைய வீடு ஒன்றை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக புதிய வீடமைப்புத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவேன்.

- சொத்துக்களின் நிரந்தரமான உரிமையைக் கொண்டிராத நகர்புறங்களில் தொழில்புரிகின்றவர்களின் வாடகை வீட்டுக்கான கேள்வி அதிகரித்துள்ளமையால் வாடகைப் பணம் சமாளிக்க முடியாத அளவில் உயர்ந்துள்ளன என்பதை நான் அறிவேன். இதனைக் கருத்தில்கொண்டு அரச மற்றும் தனியார்துறை முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் நகரங்களை அண்டிய பகுதிகளில் வாடகை மாடிக்கட்டட வீடுகள் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளேன்.

- மக்கள் எதிர்கொள்ள நேரும் நிர்வாக ரீதியான அசௌகரியங்களை இனங்கண்டு முறையானசேவையை வழங்குவதில் "நிர்வாகத்துக்கு நிகரான நடுநிலையாளர்" ஒருவரை நியமிப்பேன். சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுகளுக்கு உள்ள காணி உறுதிப்பத்திரம் எழுதும் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஆவணப்பதிவு சட்டம் திருத்தம் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமைமிகு இராணுவ வீரர்கள் மற்றும் கௌரவம் மிக்க பொலிஸார்

வீரம் நிறைந்த முப்படைகள் போன்றே பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு செயலணி இல்லாவிட்டால் எமக்கும் உங்களுக்கும் இன்று நாடொன்று இல்லாதிருந்திருக்கும் என்பதை நான் ஒருபோதும் மறப்பதில்லை.

நாட்டையும் மக்களையும் பாதுகாத்த முப்படையினர் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு செயலணி ஆகியோர் அன்று போன்றே பலப்படுத்தப்படுவர்.

- செயற்றிறன் மற்றும் குற்றப்பரிசோதனை துறையில் உலகிலுள்ள பொலிஸாருக்கு எவ்வகையிலும் எம்மவர்கள் இரண்டாம் நிலைக்குரியவர்கள் அல்லர். இது அண்மைக்கால ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குற்றப்பரிசோதனைகளை மேலும் இலகு படுத்துவதற்கு நவீன உபகரணங்கள் தொழில்நுட்ப உதவிகள் மற்றும் பயிற்சி, மனித வளங்களைப் பெற்றுக்கொடுப்போம்.

- வேறு நாடுகளில் யுத்தம் அல்லது இராணுவ நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் அதிகளவில் படைவீரர்கள் நீக்கப்பட்டு விடுவார்கள். பதவிகளிலிருந்து அவர்கள் கீழிறக்கப்பட்டு விடுவார்கள். எனினும் கடந்த காலங்களில் நான் இவ்வாறான எதுவும் செய்யவில்லை. எதிர்காலத்திலும் எந்தவொரு இராணுவ நிரந்தர சேவையிலிருந்து எந்தவொரு படைவீரரையோ மேலதிக படையணியைச் சேர்ந்த தொண்டர் படைவீரரோ சிவில் பாதுகாப்பு சேவையில் உள்ள எவருமே நீக்கப்பட மாட்டார்கள்.

- எந்தவொரு இராணுவ அதிகாரியோ அல்லது படைவீரரோ அவர் வகிக்கும் பதவியிலிருந்து நீக்கப்பட மாட்டார்.

- அங்கவீன நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சகல படை வீரர்களும் அவர்களது வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கே உரிய சகல வசதிகளையும் பெற்றுக்கொடுத்து பாதுகாப்பேன்.

- ஓய்வு பெற்ற படைவீரர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகத் தேவையான வழிவகைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொடுக்கப்படும். அவர்களுக்குரிய வைத்திய வசதிகள், ஓய்வு நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளை மென்மேலும் மேம்படுத்துவேன்.

- பொலிஸாரின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாப்பதுடன் அவர்கள் தங்களது கடமையை நிறைவேற்றும்போது அவர்களுக்குத் தேவையான தங்குமிட வசதி வாகனம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் குறைவின்றி வழங்க நடவடிக்கை எடுப்பேன்.
- இராணுவம், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர் உட்பட சகல அரச ஊழியர்களுக்கும் நேர்மையான கடமையை நிறைவாக நிறைவேற்றிக் கொண்டு செல்வதற்கு வழிசமைக்கும் வகையில் அவர்களது தனிப்பட்ட பிரச்சினைகளைக் கூட வெவ்வேறாக இனங்கண்டு உதவி புரிவதற்காகப் புதிய ஆலோசனை செயற்றிட்டமொன்றினை அறிமுகப்படுத்துவேன்.

## அரச சார்பு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் தனியார் துறையினர்

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக மேற்படி துறைகள் அளிக்கும் பங்களிப்புகளை நான் ஒருபோதும் குறைத்து மதிப்பிடப்போவதில்லை.

- ஊழியர் சேமலாப நிதியை பாதுகாப்பதுடன் அதற்காக அவர்களுக்குரிய உரிமையை எக்காரணம் கொண்டும் இல்லாதொழிக்க மாட்டேன்.
- தனியார் துறையினருக்கு வளமான சுகாதார காப்புறுதி முறைமையொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
- மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட வங்கி ஊழியர்களுக்கான ஓய்வூதிய உரிமையை இதுவரை பெற்றிராத சகல வங்கி ஊழியர்களுக்கும் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் பெற்றுக் கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊழியர் சேமலாப நிதி உரிமைக்கு மேலதிகமாக தனியார் துறையினருக்கும் மேற்படி முன்னுதாரணத்தைக் கொண்டு சுயவிருப்பத்துடன் இணைந்துகொள்ளும் வகையில் கவர்ச்சிகரமான ஓய்வூதியத் திட்டமொன்றை முன்மொழிவேன்.

## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்குச் சென்றுள்ளவர்கள்

- நீண்ட காலமாக வெளிநாடுகளில் சேவைபுரிந்து இலங்கையில் நிரந்தர வசிப்புக்காக வருபவர்களுக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவேன்.
- வெளிநாட்டில் பணிபுரியும் சமயத்தில் நிரந்தர அங்கவீனமாகி இலங்கைக்குத் திரும்புவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக மாதாந்த நிவாரணக் கொடுப்பனவொன்றை வழங்க ஏற்பாடு செய்வேன்.
- 'ரட்டவிரு' வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டுக்குச் செல்பவர்கள் அனைவரினதும் வீட்டுக் கனவை நனவாக்குவதற்காக அவர்கள் வீடொன்றைக் கட்டிக்கொள்வதற்கான வேலைத்திட்டத்தை பலப்படுத்துவேன்.
- வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் தேர்தல்களின்போது வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுப்பேன்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து 6 வருடங்களுக்கு மேல் வெளிநாட்டில் பணிபுரிந்து நாடு திரும்புபவர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை இந்த வருடம் அறிமுகப்படுத்துவேன்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள பணிப்பெண்களின் குடும்பங்களது நலன்புரி நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலக மட்டத்தில் முறையான ஆலோசனை சேவையொன்றை முன்னெடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 செல்வந்த நாடு

வளம் நிறைந்த நாடாக இருந்த இலங்கைத் தீவு மேலைத்தேய ஆக்கிரமிப்புடன் வீழ்ச்சிக்கான கதவுகள் திறக்கப்பட்டன. 1948ல் நாங்கள் சுதந்திரம் பெற்ற போது எங்களுக்கே உரிய தன்னிறைவு பெற்ற பொருளாதாரம், நல்லாட்சி முறை, உயர் பாரம்பரியத்தைக் கொண்ட துறைசார் அறிவு மற்றும் செல்வம் மிக்க சமூக கலாசாரங்கள் முழுமையாக வீழ்ச்சியடைந்திருந்தன.

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் எங்களுக்கு பின்னடைந்த பொருளாதார பாதையான பழைய பாதையிலேயே பயணிக்க மீண்டும் வழிசெய்தது. எமது அரசாங்கத்தின் காலத்தில் கூட அதிலிருந்து விடுபடுவதற்கு நாங்கள் எடுத்த முயற்சிகள் முழுமையாக பூர்த்தி செய்ய முடியாமல் போனது என்பதை நான் இதயபூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்.

1977ல் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பொருளாதாரத்தின் ஊடாக நாட்டின் கதவுகள் உலகத்திற்குத் திறந்துவைக்கப்பட்டன. இதன் ஊடாக சிலபேர் மட்டும் அதிகளவு செல்வந்தர்களாகினர். ஆனால் பெரும்பாலானோர் வறுமைக்குள் தள்ளப்பட்டனர். சமூக ஏற்றத்தாழ்வு விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையிலான வேறுபாடாக காணப்பட்டது. 1987ல் இளைஞர்களின் எழுச்சி வடக்கில் ஆயுதக் கிளர்ச்சி போன்றவை அனைத்தும் இந்த ஏற்றத்தாழ்வினால் எமது சமூக பொருளாதாரத்துக்கு பலவந்தமாக பாதிப்பை ஏற்படுத்திய மிகக் கொடூரமான நோயின் அறிகுறிகளாயின.

2005ல் நாட்டுக்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுப்பதே எனக்கு சவாலாக இருந்தது. 2010ல் நாட்டை பாரிய அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்வதே எனது அடுத்த சவாலானது. இப்போது எமக்கு இருப்பது சமாதானத்தின் தென்றலை அனுபவிக்கும் மக்களுக்கு இல்லாதவர் இருக்கின்றவர்கள் என்ற இடைவெளியை நிரப்பி அபிவிருத்தியின் பலனைக் கொண்டு சகலரையும் செல்வந்தராக்கும் அந்த பயணத்தை ஆரம்பிப்பதேயாகும். இந்த செல்வந்தர் ஆக்குவோம் என்பது எப்படியாவது எங்காவது தேடிக்கொள்ளும் பணத்தில் பொக்கட்டுக்களை நிரப்பிக் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்தன் என்பது அல்ல. உழைப்பினால் சம்பாதிக்கும் பணத்தை கைநிறைய வைத்துக்கொண்டு மனிதத்தன்மையை இதயத்தில் நிரப்பிக்கொண்ட செல்வந்தரையே குறிப்பிடுகின்றேன்.

இருப்பவர்கள் இல்லாதவர்களை கீழ்த்தரமாகப் பார்க்கக் கூடிய இல்லாதவர்கள் இருப்பவர்களைப் பார்த்து பொறாமைப்படக்கூடிய சமூக பாதையில் பயணித்துவந்த தூரம் இனி போதுமானது. உலை வைக்காத வீடொன்பது கடந்த கால நினைவுகளில் பழங்கதையாகிப்போன ஒன்று. இனிமேல் எமது நாட்டில் செல்வந்தர்கள் இடையே வேறுபாடு இருக்க வேண்டுமே தவிர ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு அல்ல. தன்னைப்பற்றி மட்டும் சிந்திக்காத சமூகத்தைப் பற்றிய எண்ணங்களைக் கொண்ட பெருமைமிகு இலங்கையர் என்பதற்காக கஷ்டப்பட்டு உழைத்து அதன் பொருளாதார பிரதிபலனைப் பெறுகின்ற ஒரு நவீன இலங்கையரை நான் உருவாக்குவேன்.

2016ஆம் ஆண்டாகும் போது தனிநபர் வருமானத்தை 4000 அமெரிக்க டொலர்களாக உயர்த்துவேன் என 2010ஆம் ஆண்டில் நான் உங்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தேன். நான் அளித்த அந்த வாக்குறுதியை 2015ஆம் ஆண்டே நிறைவேற்றுவேன். இதனை செய்ய முடிந்ததையிட்டு பெருமையடைகிறேன். இதேபோன்று 2020ஆம் ஆண்டு ஆகும்போது அபிவிருத்தி வேகத்தை தொடர்ச்சியாக 7 வீதத்தைவிட அதிகரித்து செல்வதுடன் நாட்டில் தனிநபர் வருமானத்தை 7500 அமெரிக்க டொலர்கள் வரை அல்லது 10 இலட்சத்துக்கும் அதிகமான ஒரு மட்டத்திற்கு இட்டுச்செல்வதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். இதனூடாக 20 மில்லியன் மக்களை செல்வந்தர்கள் தரத்துக்கு உயர்த்துவேன்.

## சூழலுக்கு சாதகமான உயர்தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய அணுகுமுறை

எனது தந்தையார் ஒரு விவசாயி. அவரது தந்தையும் விவசாயி. நான் தெரிவு செய்த விளை நிலம் அவர்கள் விளைச்சல் செய்த வயல்வெளியைவிட சேற்றுக் குழியாகவிருந்தது. எனினும் நான் அதில் விளைச்சலை செய்தேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நீங்கள் அனுபவிப்பது எனது விளைச்சலிருந்து பெற்ற அறுவடையிலிருந்தே. வயல்வெளி, களம், வரப்புகளின் சேற்றின் நறுமணத்தை நான் நன்றாக அறிவேன். வயல்வெளியில் நெற்கதிர்கள் மத்தியில் வீசிவரும் தென்றல் காற்றின் சுகத்திற்கு ஈடாக வேறு எதுவும் இல்லை. எனவே கமத் தொழில் என்பது அன்றுபோல் இன்றும் நாளையும் எங்களது பொருளாதார ஜீவநாடி என்பதை நான் நம்புகிறேன்.

பசுமைப்புரட்சி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதை வகைகளில், இரசாயன உரவகைகள் மற்றும் இரசாயன பதார்த்தங்கள் என்பன கலந்திருப்பதால் எங்களது நிலங்கள் மனிதப் பாவனைக்கு உகந்ததல்லாத நச்சுத்தன்மை கொண்ட இரசாயன பதாத்தங்கள் அற்ற விவசாயத்துறையை படிப்படியாக அபிவிருத்தி செய்வதன் ஊடாக சூழலுக்கு சாதகமான விவசாயத்தை கட்டியெழுப்புவதற்கு புதிய பயணமொன்றுக்கு நாட்டை இட்டுச்செல்வேன். விளைச்சலுக்காக காணி, நேரகாலத்துக்குத் தண்ணீர், விளைச்சலுக்கு உரம் அறுவடையின் பின் சரியான விலையைப் பெறக்கூடிய சந்தைவாய்ப்பு இருக்குமானால் விளைநிலத்தில் நின்றாலும் சகல விவசாயிகளும் ஒரு அரசனைப் போல இருப்பார்கள் என்பதை நான் காண்கிறேன்.

## விளைச்சலுக்கு காணிகள்

- சரியான முறையில் பயன்படுத்தப்படாத காணிகளை உணவு உற்பத்திக்காகப் பயன்படுத்துவதற்கு மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவென காணி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்துவேன்.

- இவ்வாறான காணிகளை இனங்கண்டு அவற்றை பதிவு செய்வதற்காகவும் காணி ஒன்றை எதிர்பார்த்து இருப்பவர்கள் பதிவு செய்வதற்கும் என காணி வங்கியொன்றை உருவாக்குவேன். இங்கு சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு காணிகள் குத்தகைள் அடிப்படையில் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரஞ்செடி கொடிகள் மற்றும் வனஜீவராசிகளுக்கு தண்ணீர்

நீர் என்பது எமது தாய்நாட்டில் புனிதமாகக் கருதப்படுகிறது. சிவனொலிபாத மலையின் உச்சியிலிருந்து பாய்ந்துவரும் தண்ணீர் மகாவலி, களுகங்களை, களனி போன்ற கங்கைகளாக நாட்டின் நாலாபுறமும் பிரவாகம் எடுத்து அந்த புனிதத்துவத்தின் யதார்த்தத்தை வெளிப்படுத்துகிறது. எனவே மஹா பராக்கிரமபாகு அரசன் கூறியதைப்போல ஒவ்வொரு நீர்த்துளியும் வீணாகக் கூடாது என நானும் நம்புகிறேன். மனிதர்களுக்கு மட்டுமல்ல மரஞ்செடி கொடிகள் உயிரினங்கள் அனைத்தும் தண்ணீர் தொடர்பாகக் கொண்டிருக்கும் உரிமையை உறுதிப்படுத்துகிறேன்.

## யாழ்ப்பாணத்துக்கு ஆறு – ஆனையிறவுக்குக் குளம்

தென்பகுதியிலுள்ள விவசாயிகள் மிளகாய், வெங்காயம் என்பவற்றின் விளைச்சல் தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளிடமிருந்தே கற்றுக் கொண்டார்கள். அப்படியொரு யுகம் இருந்தது. யாழ்ப்பாண விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீர் தேவையை முழுமைப்படுத்த வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது என்பதை நான் அறிவேன். 1970 களில் கனகராயன் ஆறு ஊடாக ஆனையிறவு களப்புக்கு சென்ற நீரை சேமித்து நன்னீர் குளமொன்றை உருவாக்க முன்பு திட்டமொன்று இருந்தது. இத் திட்டத்தை ஆராய்ந்து அதன் உண்மை நிலையை அறிந்து கொண்டேன்.

- சுமார் 19 ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ஆனையிறவு களப்பின் கிழக்குப் பகுதியில் நீண்ட மண் அணையொன்று மூடியிருப்பதால் சுண்டிக்குளத்தின் அருகே களப்புக்குள் வரும் கடல்நீரை தடுக்க முடிகிறது. கடல்நீர் உட்புகாதவாறு ஆனையிறவு குளம் கட்டும் திட்டத்தை நான் ஆரம்பிப்பேன். இதற்காக உள்நாட்டு நிபுணத்துவத்தை பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்ள எமது நீர்ப்பாசன நிபுணர்களைப் பயன்படுத்துவேன்.

- வவுனியாவிலிருந்து ஆனையிறவு குளத்துக்கு சுமார் 90 கிலோமீற்றர் தூரத்துக்கு மழைநீரை கொண்டுசென்று பாரிய நீர்பாசனத்தின் ஊடாக கனகராயன் ஆற்றை விஸ்தரித்து யாழ்ப்பாண ஆற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிப்பேன். இதனூடாக தண்ணீர் பற்றாக்குறையில் வாடும் வடபகுதி மக்களின் விளைச்சலுக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொடுப்பேன்.

## நாடு முழுவதற்கும் தண்ணீர்

- மொரகஹாகந்த களுகங்கை நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வடமத்திய நீரோடைத்திட்டத்தை 2015ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதன் மூலம் அந்த நீர்வளத்தை வடமத்திய மாகாணத்துக்குக் கொண்டு செல்வேன்.

- கீழ் மல்வத்து ஓயா நீரை திசைதிருப்பும் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்துக்கு நீரை வழங்குவேன்.

- இலங்கையில் முதலாவது குழாய் மூலம் நீர்வழங்கும் திட்டத்தின் கீழ் திருகோணமலையிலிருந்து வீணாக கடலுக்குச் செல்லும் தண்ணீரை மீண்டும் நீர்ப்பாய்ச்சல் முறையூடாக காலிங்கநுவர, அங்கமடில்ல, மின்னேரியா ஆகிய பகுதிக்கு நீர் வழங்குவேன். இதனூடாக வடமத்திய மாகாணத்துக்குத் தேவையான தண்ணீரை வழங்குவேன்.

- 2014ஆம் ஆண்டில் மக்களிடம் கையளிக்கப்பட்ட தெதுறுஓய நீர்ப்பாசனத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வடமேல் மாகாண மக்களின் தண்ணீர் தேவையை முழுமைப்படுத்த முடியும்.

- உமா ஓயா திட்டத்தின் ஊடாக மொனறாகலை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற மாவட்ட மக்கள் மீண்டும் தண்ணீர் பஞ்சத்திற்கு முகங்கொடுக்காத நிலையை ஏற்படுத்துவேன்.

- ஜின்கங்கை திட்டத்தின் ஊடாக தென் மாகாண தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்துவைப்பேன்.

- எமது நாட்டின் நிலக்கீழ் தண்ணீர் தொடர்பாக இதுவரையும் ஒரு மதிப்பீடு செய்யப்படவில்லை. அதனால் முதல்முறையாக நிலக்கீழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் தொடர்பாக முறையான வரைபடமொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். நீர்வளத்தையோ அல்லது சூழலையோ சேதப்படுத்தாதவாறு மேற்கூறப்பட்ட திட்டத்தின் ஊடாக தண்ணீர் தட்டுப்பாடான பகுதிகளுக்கும் நிலக்கீழ் தண்ணீரை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

- சகல பிரதான ஆறுகள் மற்றும் அவற்றின் இரு புறங்களிலுமுள்ள அணைகளை சுத்தப்படுத்தி செப்பனிடும் வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பேன்.
- நாடு முழுவதும் உள்ள குளங்கள், ஓடைகள், நீர்ப்பாசன ஓடைகள் அந்தந்த கிராமங்களில் வசிக்கும் மக்களின் பங்களிப்புடன் புனரமைத்து பாதுகாப்பதற்கு அதிகாரிகளிடமல்லாது அவற்றின் பெறுமதிகளை நன்கு உணர்ந்த விவசாய அமைப்புகளிடம் ஒப்படைப்பேன். அந்த நீர்ப்பாசனக் கட்டமைப்பை ஒழுங்கான முறையில் பராமரிக்கும் வேலைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக தேசிய குளங்கள் நிதியத்தை உருவாக்குவேன்.
- திவிநெகும திட்டத்தின் ஊடாக 30 ஆயிரத்துக்கும் அதிகமான சிறிய குளங்கள் மற்றும் கால்வாய்களை ஒன்று விடாமல் புனரமைப்பதன் மூலம் கிராமங்களின் கமத்தொழிலுக்குத் தேவையான தண்ணீர் தேவையை நீக்குவேன்.
- இதனூடாக வரண்ட பிரதேசங்களுக்கு நிலக்கீழ் நீர் பயன்பாட்டை மேம்படுத்தி மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் ஏனைய உயிரனங்களுக்கும் மரஞ்செடி கொடிகளுக்கும் நீர் கிடைக்கும் ஒரு சூழலை உருவாக்குவேன்.

## விளைச்சலுக்குத் தேவையான விதை மற்றும் உர வகைகள்

- விவசாயிகளுக்குத் தேவையான விதை உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விதை உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாக அரசின் பொறுப்பு மென்மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தப்படும் வகையில் புதிய சட்ட வரையறையுடன் கூடிய தேசிய வேலைத்திட்டமொன்றை முன்வைப்பேன்.

- உண்மையான இலங்கை சுவையுடன் கூடிய கலப்பு விதை வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக் கூடியவாறு விதை ஆராய்ச்சி மத்திய நிலையமொன்றை நவீன தொழில்நுட்பத்துடன் முழுமைப்படுத்துவேன்.

- இரசாயன உரவகைகளின் பாவனையைக் குறைத்து இயற்கை விவசாய முறையின் ஊடாக தேசிய விதை வகைகளை ஊக்குவிக்கவென தலைமைத்துவம் வழங்குவேன்.

- உரமானியத்தின் கீழ் 50 கிலோ உரத்தை 350 ரூபாவுக்குத் தொடர்ந்தும் வழங்குவேன். அத்துடன் இயற்கை உர உற்பத்தி மற்றும் அதன் பாவனையை ஊக்குவிப்பேன். அதற்கான வேலைத்திட்டத்தையும் முன்னெடுப்பேன்.

## விவசாயிகளுக்கு மூலதனம்

- விவசாயிகள் கடனில் மூழ்கிவிடாமல் இருப்பதற்காக அவர்களை அதிலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டு விவசாயக் கடனுக்கான வங்கி திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவேன். கமநல சேவை திணைக்களத்தின் வளங்களைக் கொண்டு மிகக் குறைந்த செலவின் கீழ் துரிதமாக கடன்வழங்குவதற்காக வங்கி பொறிமுறையை ஏற்படுத்துவேன்.

## விளைச்சல் மற்றும் சந்தை வாய்ப்பு

- எமது விவசாயத்துறை தற்போது அதிக தொழில்நுட்ப இயந்திரமயமாக மாறி வருகிறது. இதனால் இயந்திரங்களைப் பாவித்து நடுகை, களை பிடுங்குதல், அறுவடை, சூடுமிதித்தல் போன்ற உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் இயந்திர உபகரண உற்பத்திகளை மேற்கொள்ளும் மற்றும் அவற்றை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்தும் தொழில் முயற்சியாளர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு வரி நிவாரணம் வழங்கப்படும்.

- இயற்கை விவசாய முறையை இயந்திர உபகரணங்களின் மூலம் மேம்படுத்தி விவசாயத்தில் ஈடுபட விரும்பும் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் 25 இலட்சம் ரூபாவை முதலீட்டுக் கடனாகப் பெற்றுக் கொடுப்பேன்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை மேம்படுத்தும் நோக்கில் நிலையான தேசிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவேன்.
- உயர் தரத்திலான அரிசிமா உற்பத்திக்காகவும் அதன் பாவனையை அதிகரிக்கச் செய்வதற்காகவும் அந்தத் தொழில்துறையை நவீனமயப்படுத்துவதற்காக குறைந்த வட்டி வீதத்தில் கடன்வழங்க நடவடிக்கை எடுப்பேன்.
- விவசாயத்துக்கு இரசாயன வகைகளின் பாவனையைக் குறைப்பதற்காக இயற்கை உரத்தை உபயோகித்து உற்பத்தி செய்யப்படும் நெல்லை அதிக விலைக்கு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுப்பேன்.
- நச்சுப்பொருட்கள் அற்ற உணவுப் பொருட்களை மக்களுக்கு விநியோகிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக விவசாய அமைச்சின் கீழ் தனியான ஒரு பிரிவை ஆரம்பிப்பேன்.
- அரிசி மற்றும் சோளம் உற்பத்தியில் தன்னிறைவைப் பெற்றதைப்பேல 2020ஆம் ஆண்டு ஆகும்போது பயறு, கௌப்பி, சோயா, குரக்கன், மிளகாய் மற்றும் உழுந்து உள்ளிட்ட உற்பத்திப்பொருட்களில் தன்னிறைவை அடையச் செய்வேன்.

## பழங்கள் மற்றும் மரக்கறி உற்பத்தி

- இலங்கையில் விவசாயத்துறையை 46 வலயங்களாகப் பிரித்து ஒவ்வொரு வலயத்திலும் ஒரு பழவகை ஒரு மரக்கறி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய வகையில் கால அட்டவணையொன்றைத் தயாரிப்பேன்.

- இக்கால அட்டவணையின் படி விவசாயம் மேற்கொள்வதற்கு விவசாயிகளுக்கு வழிகாட்டுவதற்கும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தையை இலக்குவைத்து மரக்கறி மற்றும் பழவகைகளின் உற்பத்தி வருடம் முழுவதும் கிடைக்கும் வகையில் விளைச்சலில் ஈடுபடுவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பேன்.

- இதற்குத் தேவையான விதை வகைகள் உற்பத்தி அல்லது நாற்றுமேடை போன்றவற்றை முன்னெடுத்துச் செல்ல விவசாயிகளுக்கு சகல வசதிகளையும் நிவாரணங்களையும் பெற்றுக் கொடுப்பேன்.

- பல்வேறு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் இதுவரை காலமும் பிற்போடப்பட்டு வந்த மலையக மரக்கறி உற்பத்தியாளர்களின் மரக்கறி வகைகளை பாதுகாப்பாக வைக்கக் கூடிய விதத்தில் குளிரூட்டி கட்டமைப்பை 2016ஆம் ஆண்டளவில் முழுமையாக செய்து முடிப்பேன்.

- மரக்கறி வகைகளை குறைந்த செலவில் எடுத்துச் செல்வதற்கு வசதியாகப் பொறிமுறையொன்றை உருவாக்குவதற்காக நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்குரிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

## கால்நடை அபிவிருத்தி வேலைத்திட்டம்

- கால்நடை அபிவிருத்தி சபையின் தொழில்நுட்ப வழிகாட்டலுடனும் உதவியுடனும் நாடு தழுவிய கால்நடை உற்பத்தி பண்ணைகளின் கட்டமைப்பை உருவாக்குவேன். இதற்கு மேலதிகமாக கால்நடை உற்பத்தி பண்ணைகளை உருவாக்குவதற்கு இளம் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விசேட நிவாரண பொதியொன்றை அறிமுகப்படுத்தி உள்நாட்டில் பசுக்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கையை விருத்தி செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மிருகவைத்திய பட்டப்படிப்புக்காக பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் ஊடாக இத்தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கான தொழில்சார் வல்லுனர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பேன். இதனூடாக கால்நடை பண்ணைகளின் விருத்தி செய்யவும், பசுக்களுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து அவற்றைக் காக்கவும் நடவடிக்கை எடுப்பேன்.

- பால் உற்பத்தியாளர்களுக்கென கல்வி பயிற்சி வேலைத்திட்டமொன்றையும் ஆய்வு ரீதியான திட்டமொன்றையும் முன்னெடுத்துத் தெளிவுபடுத்துவதன் ஊடாக பசும் பால் தொடர்பான இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்க தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பேன்.

- கால்நடை உணவுகளுக்குத் தேவையான மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்படும் புண்ணாக்கு, தவிடு மற்றும் சோளம் ஆகியவற்றை போட்டி விலையின் அடிப்படையில் உள்நாட்டிலேயே கொள்வனவு செய்வதை ஊக்குவிக்கத் தேவையான நிவாரணத்தை அரசு மூலம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- இன்று எமது நாட்டுக்குத் தேவையான கோழி உற்பத்தியின் அளவு உள்நாட்டுக்குத் தேவையான அளவு முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் எமது உற்பத்திகளுக்கு இந்தியா தென்னாபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நல்ல சந்தைவாய்ப்பு கிடைத்துள்ளது அதனால் குறிப்பிட்ட வர்த்தகர்களுக்கு இச்சந்தையை வெற்றிக்கொள்வதற்குத் தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப்பேன்.

- வடக்கு, கிழக்கு மக்களின் பாரம்பரிய கால்நடை வளர்ப்பு ஆடுவளர்ப்பு போன்ற தொழில்துறையை ஊக்குவிப்பதற்குத் தேவையான ஆட்டுக்குட்டிகளை சகல குடும்பங்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான வேலைத்திட்டமொன்று வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மொனறாகலை, அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அந்தப் பகுதிகளில் இறப்பர் நாற்று மேடைகளை அரசு நிறுவியுள்ளது. அத்துடன் அவற்றுக்குத் தேவையான புதிய உரக் கலவையொன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

- இறப்பர் உற்பத்தியை சிறிய விவசாயிகள் மத்தியில் விரிவுபடுத்துவதற்காக அதற்குத் தேவையான நிவாரணப் பொதியொன்றை அறிமுகம் செய்வேன்.

- பிரதேச மட்டத்தில் இறப்பர் பதனிடும் நிலையம் ஆரம்பிக்கப்படுவதுடன் தொழில்நுட்பத்தை விரிவுபடுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பர் உற்பத்திகளை மேம்படுத்த உதவி புரிவேன்.

## தெங்கு உற்பத்தி

- ஒரு மரத்திலிருந்து கிடைக்கும் தேங்காய்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக உயர்ரக கன்றுகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ப தெங்கு ஆராய்ச்சி நிலையத்தை பலப்படுத்துவேன்.

- தெற்கு உற்பத்தித் துறையினுள் உற்பத்தித் திறனை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரும் வர்த்தகர்களுக்குத் தேவையான அறிவு மற்றும் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

- தேயிலை இறப்பர் தெங்கு செய்கைகளுக்குரிய சகல சட்டங்களும் நவீன யுகத்திற்கு ஏற்ற வகையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இறப்பர் பால் வெட்டுதல் தேயிலை கொழுந்து பறித்தல் மற்றும் தேங்காய் பறித்தல் போன்றவற்றுக்கென புதிய நடைமுறையை அறிமுகப்படுத்துவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகத் தகவல்களின் அடிப்படையில் தேயிலை இறப்பர் மற்றும் தென்னங் காணிகளை வரைபடத்துக்குட்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

## பெருந்தோட்ட பொருளாதார தொழில்நுட்பத் துறை

### தேயிலை செய்கை

இலங்கைத் தேயிலை என்பதன் ஊடாகவே ஆரம்பகாலம் முதல் இலங்கை உலக அரங்கில் பெயர் பெற்றிருந்தது. தேயிலை உற்பத்தியே இதில் பிரதான பங்கை வகித்தது. எனவே தேயிலை உற்பத்தியை மேலும் மேம்படுத்தி எதிர்காலத்திலும் சர்வதேச சந்தையில் இலங்கையின் நற்பெயரை முதலிடத்தில் தக்கவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன்.

- தேயிலை செய்கைக்கு விஞ்ஞான ரீதியான அறிவும் உயர்தொழில்நுட்பமும் பெற்றுக்கொடுப்பதற்காக பெருந்தோட்ட தேயிலை உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு அரசின் பங்களிப்பைப் பெற்றுக் கொடுப்பேன்.

- உற்பத்தி செலவை குறைத்துக் கொள்வதற்காக இயந்திரங்களின் பாவனையை சிறு தேயிலை தோட்ட சொந்தக்காரர்களின் மத்தியில் விரிவுபடுத்துவதற்கு அரசின் அனுசரணையைப் பெற்றுக் கொடுப்பேன்.

- அதிக விளைச்சலைப் தரக்கூடிய தரமான ஒட்டுக் கன்றுகளைப் பெற்றுக் கொடுக்க ஏதுவான வகையில் நாற்று மேடைகளை அபிவிருத்தி செய்வதுடன் அவற்றின் ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

- சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் அமைப்பை பலப்படுத்தும் நோக்கில் சங்கத்துக்குரிய அதிகாரப் பிரதேசத்துக்குள் கொழுந்து சேகரிக்கும் மத்திய நிலையமொன்றை அமைப்பதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பர் செய்கை

- இறப்பர் விலை வீழ்ச்சியடைவதற்கு மாற்றீடாக செஸ் வரியில் திருத்தம் செய்து நிர்ணய விலை முறையை ஸ்திரப்படுத்தி தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வேன்.
- வெளிநாடுகளின் பங்களிப்புடன் தேயிலை தேங்காய் மற்றும் இறப்பர் தொடர்பான சகல ஆராய்ச்சி நிலையங்களையும் நவீன தொழில்நுட்பத்துடன் முழுமைப்படுத்துவேன்.

## ஏற்றுமதி பயிர்ச்செய்கை

- சர்வதேச சந்தைக்கு உயர்தரத்திலான கறுவாவை வழங்கும் நாடு இலங்கை என பெயர் பெற்றுள்ளது. எனவே கறுவா செய்கையை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பேன். இதன்கீழ் கறுவா பதப்படுத்தல் தொடர்பான ஆளனிப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் நோக்கில் உயர்தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய உபகரணங்களைத் தேடிச் செல்லும் தேசிய ஆய்வாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவேன்.
- கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் கிராம மக்களின் பிரதான வருவாயாக விளங்கும் சாதிக்காய் செய்கையை மென்மேலும் விரிவுபடுத்துவதற்கும் அதன் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் தேவையான வசதிகளை வழங்குவேன்.
- கராம்பு, கொக்கோ மற்றும் பாக்கு செய்கையை மேம்படுத்துவதற்கா விவசாயிகளுக்குத் தேவையான விசேட நிவாரணக் கடன் திட்டமொன்றைப் பெற்றுக் கொடுப்பேன்.
- தேங்காய் மற்றும் இறப்பர் காணிகளில் வெளிநாட்டு சந்தைவாய்ப்பை டிப்படையாகக் கொண்டு தூதுவளை, சேப்பங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு போன்ற பயிர் செய்கைகளை மேம்படுத்துவதற்கு வரவுசெலவுத்திட்ட நிவாரணத்துக்கு மேலதிகமாக முதலீட்டு நிவாரணக் கடன் திட்டமொன்று பெற்றுக்கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுத்திர பொருளாதாரம் கரையோர மக்களின் வாழ்க்கை

சிப்பிக்குரிய பெரிய சொத்து அதன் உள்ளே இருக்கும் முத்து. அதேபோன்று தான் எமது தீவுக்கு உள்ள ஒரே சொத்து கடல்வளம். என்றாலும் இந்து சமுத்திரத்தின் முத்தாக இன்னமும் அதன் பயனை சரிவர பெற்றுக் கொள்ளவில்லையென்பதே எனது நம்பிக்கை. 2020ஆம் ஆண்டு ஆகும்போது இலங்கையை ஒரு சமுத்திர பொருளாதாரத்தைக் கொண்டதொரு நாடாக ஆக்கவேண்டும் என்ற இலக்கைக் கொண்டு பயணிக்கிறேன்.

- 2007 இலேயே இலங்கைக்குரிய கடற்பகுதியை அளந்து முடிப்பதற்கு கிடைத்தமை யுத்தம் முடிவடைவதற்கு முன்னரே நாம் பெற்றுக்கொண்ட பாரிய வெற்றியாகும்.

- இலங்கைக்குச் சொந்தமான கடற்பகுதியை விரிவுபடுத்துவதற்கு என்னால் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு விடுத்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டதையிட்டு நான் பெருமையடைகிறேன். அதனூடாக எதிர்காலத்தில் எமக்குரிய கடல் எல்லை எமது இலங்கையைவிட 23 பங்கு அதிகமாகக் கிடைக்கம்.

- இந்தக் கடற்பகுதியினுள் இருக்கும் எண்ணெய் வளம் இயற்கை எரிவாயு கனிம மணல்கள் போன்ற வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எங்களுக்குக் கிடைக்கும் பொருளாதார பெறுமதி அமெரிக்க டொலர் ட்ரில்லியனைவிட அதிகமாக இருக்கும்.

- மன்னார் கடற்படுகையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை எரிவாயு வர்த்தக ரீதியாக கணிக்கப்பட்டு அதன் பிரதிபலன்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

- கடல் சார்ந்த மருந்து உற்பத்தி மற்றும் மீன், கடல்வாழ் தாவரங்கள் உற்பத்தி பெறுமதி சேர்க்கப்பட்டு துறைமுக சேவை மற்றும் அனல் வலுசக்தி தொழில்நுட்ப உற்பத்திக்கு அரசின் பங்களின்பின் ஊடாக முன்னுரிமை பெற்றுக்கொடுப்பேன்.

- மூலோபாய கைத்தொழிலாக ரின்மீன் தொழிற்சாலை அபிவிருத்தி செய்வேன். இதற்காக தகுந்த மீன் உற்பத்தி கிடைக்கும் ஐந்து பிரதேசங்களில் ஐந்து தொழிற்சாலைகளை ஆரம்பிப்பேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நனவான பட்டுப்பாதை கனவு

- கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டையை அண்மித்த பகுதிகளில் முழுமையாக துறைமுக நகரங்கள் இரண்டு உருவாக்குவேன். அதனூடாக நாட்டினுள் வர்த்தக கப்பற்துறையுடன் தொடர்புடைய பாரிய முதலீட்டாளர்களுக்கு அலுவலக தொகுதியை ஏற்படுத்துவேன்.

- சுற்றுலா ஹோட்டல்கள், கடைத்தொகுதிகள், பொதுபோக்கு நிலையங்கள், கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபங்கள் போன்ற வசதிகளுடன் கூடிய வர்த்தக வலயக் கேந்திரங்கள் இரண்டு, துறைமுக நகரத்தை அண்டிய பகுதியில் ஏற்படுத்துவேன்.

- சுதந்திரமான துறைமுக எண்ணக்கரு என்பதை நான் யதார்த்தபூர்வமாக்குவேன். கொழும்பு ஹம்பாந்தோட்டை என்பன சுதந்திரமான துறைமுகமாக ஏற்படுத்தியதைப் போன்றே திருகோணமலை துறைமுகத்தை மேலும் அபிவிருத்தி செய்து மேலும் சுதந்திரமான துறைமாக மாற்றி உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன். இதனூடாக பொருட்களின் உற்பத்தி, மீளுருவாக்கம் மற்றும் பெறுமதிசேர் பிராந்தியமாக இலங்கையை மாற்றியமைப்பேன்.

- பாரியளவிலான கப்பல் மற்றும் துறைமுக தொழில்துறைக்குத் தேவையான கப்பல் மற்றும் துறைமுக தொழில்துறையைச் சார்ந்தவர்களுக்கு உதவிச்சேவை வழங்குவதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- எமது தேசிய உணவுகள் தொடர்பாக வெளிநாட்டு கப்பல் ஆளனியினர் அதிக ஆர்வம் காட்டுவதால் பலாக்காய், கிழங்கு, வற்றாளை கிழங்கு, ஈரப்பலக்காய் போன்ற தேசிய உணவு வகைகளைத் தயாரித்து பெறுமதி சேர்க்கும் முறையின் ஊடாக கப்பல்களுக்கு வழங்குவதற்கும், இதனூடாக விவசாயிகளுக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய தெளிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திட்டமொன்றை தற்போதே ஆரம்பித்துள்ளேன். இதன்படி தயாரிக்கப்பட்ட உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ளும் 10 மத்திய நிலையங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுப்பேன்.

- தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ள காலி துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக உல்லாச பயணிகளை கவர்ந்திழுக்கக் கூடிய பிரதேசமாக காலி துறைமுக பிரதேசத்தை ஏற்படுத்துவேன். அதன் ஊடாக வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட தென்பகுதியில் உள்ள அனேகமானோரின் வருவாயை அதிகரிப்பேன்.

- புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் துறைமுகம், நவீன மயப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகம் ஆகியவற்றை பயன்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் உற்பத்திகளை கொழும்பு பிரதான வணிக கேந்திர நிலையத்துக்கு இலகுவாக மற்றும் குறைந்த செலவில் கொண்டு செல்வதற்கு வழி ஏற்படும் வகையில் 'கடல் போக்குவரத்து சேவையை' ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

- துறைமுக துறைக்கு அண்மித்ததாக இந்த அபிவிருத்திகள் ஊடாக "உயர்ந்த சம்பளத்துடன் 3 இலட்சம் நேரடி வேலைவாய்ப்புகளை" மற்றும் "2 இலட்சம் மறைமுகமான வேலைவாய்ப்புகள்" எதிர்வரும் 6 வருடத்துக்குள் ஏற்படுத்திக்கொடுப்பேன்.

- இந்த அனைத்து அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் ஊடாக எதிர்வரும் 6 வருட காலத்துக்குள் எமது பொருளாதாரத்துக்குப் புதிதாக இணைக்கும் வகையில் வெளிநாட்டு முதலீடுகளின் அளவை 10 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமாக்க நடவடிக்கை எடுப்பேன்.

- துறைமுகம் மற்றும் கடற்படை துறையை அண்மித்ததாக கடல்சார் விஞ்ஞானிகளின் அறிவை மேம்படுத்தல் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கிடையில் அதனை பகிர்ந்தளித்தல் மற்றும் அந்தத் துறைகளுக்குள் ஆய்வுகள் மற்றும் பரிசோதனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதற்கு ஏற்ற விதத்தில் கடல்சார் பல்கலைக்கழகத்தை வலுப்படுத்துவேன்.

- கொழும்பு துறைமுகத்தை அதிகமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற துறைமுகமாக்குவதுடன் அதனால் ஏற்படுகின்ற சேவைகளின் பரம்பலுக்கு ஏற்ப வெளியில் கொண்டு செல்லப்படும்போது ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதன் மூலம் சாரதிகளின் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவையாளர்களின் நேரமும் காலமும் எமது மனநிலையையும் அதிருப்தி தன்மையையும் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- கொழும்பு மற்றும் ஹம்பாந்தோட்டை பிரதான சர்வதேச துறைமுகங்கள் இரண்டிலும் பௌதீக வளங்களையும் வசதிகளையும் சர்வதேச துறைமுகங்களின் தேவைகளுக்கு ஏற்ப அந்த அளவிற்கு தொடர்ந்து நவீன மயப்படுத்துவதன் ஊடாக இலங்கையை உலகத்தின் கடற்படைத் துறையில் பிரதான கேந்திர நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

## மீனவ சமூகத்துக்கு புதிய வாழ்க்கை

நானும் பல வருடங்களாக இந்த நாட்டில் மீன்பிடி அமைச்சராக இருந்திருக்கின்றேன். அதனால் கடல்சார் வாழ்க்கையைக் கொண்ட குறைந்த வருமானத்தின் கீழ் வாழுகின்ற மீனவ மக்களின், மீனவ சமூகத்தின் பெறுமதி உணர்ந்து அதனூடாக புதிய வாழ்க்கையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக அவர்களைப் பொருளாதார ரீதியாக உயர்த்தி புதிதாகக் கட்டியெழுப்பப்படுகின்ற இலங்கையில் அனைத்துக் கதவுகளையும் அவர்களுக்காகத் திறந்துவைப்பேன்.

- மீனவர்களின் மனைவிமார்கள் தமது கணவர் கடலுக்குச் சென்ற வேளையிலிருந்து மழை மற்றும் பெருங்காற்று ஆகியவற்றின் பயத்திலேயே வாழ்கின்றனர். அன்றாட மீனவத்தொழிலில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுகின்ற எங்களது மீனவர்களின் படகுகள் மற்றும் சிறிய கலங்களில் உள்ள பாதுகாப்பினாலேயே ஆகும். அதனால் அவ்வாறான மீனவர்களின் வசதிக்காக தொடர்பு மற்றும் களஞ்சியப் படுத்தல் வசதியுடன் கூடிய சிறிய கலங்களை தயாரிப்பதற்கு ஏற்ப ஊக்கப்படுத்தல். அடிப்படைக் கட்டணத்துடன் இலகு தவணையில் செலுத்தக்கூடிய விதத்தில் மீனவர்களுக்கு இந்த சிறிய படகுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- இளம் சமுதாயத்துக்கு சர்வதேச தரத்துக்கு ஏற்ப மீனவத் தொழிலை மேற்கொள்வதற்குத் தேவையான நூதனமான முறைகள் தொடர்பாக அறிவையும் மற்றும் பயிற்சியையும் புதிதாக அபிவிருத்தி செய்யப்படுகின்ற கடல்சார் வளங்களையும் மற்றும் கடற்படை பல்கலைக்கழகத்தில் உரிய பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- கருவாடு, மாசி மற்றும் ஜாடி போன்றவற்றின் உற்பத்தி தொழிலுக்காக மகளிர் துறைசார்பான பயிற்சியொன்றை ஏற்படுத்துவதற்கு திவிநெகும வங்கியின் கீழ் வேறாக நிவாரண கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவேன். அந்த உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு கொண்டு செல்வதற்கு ஏற்ப அதன் பெறுமதியை அதிகரித்து அதில் நுழைவதற்கு மீனவ இளம் சமூகத்திற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுப்பேன்.

- கடல்வழி மற்றும் மீன் தொடர்பாக ஆய்வுசெய்து மீன்வளத்தை, கடல்வளம் தொடர்பாக வரைபடமொன்றை தயாரிப்பேன்.

- அகில இலங்கை ரீதியான சந்தைவாய்ப்பை ஏற்படுத்துவதன் ஊடாக மீன் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பில் ஏற்படுகின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பது தொடர்பாக புதிய சந்தை வாய்ப்புக்களை தேடி முன்னேற்றுவதற்கு வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவேன்.

- நன்னீர் மீன்வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக உள்ளக தடாகங்களைப் பயன்படுத்தி தேசிய மட்டத்தில் விரிவான நீர்வாழ் அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 தேசிய தொழில் நிகழ்ச்சி நிரல்

விவசாயத்தைப்போன்று கைத்தொழில் துறையிலும் நாட்டை முன்னேற்றுவதே எதிர்வரும் வருடங்களில் எனது இலக்காகும். அதற்காக நாட்டின் பொருளாதாரத்துக்கு வழிகாட்டியாக முக்கியமான கைத்தொழில் துறைகளை இனங்கண்டு அந்த கைத்தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்ட தடைகளை நீக்கி அவர்களை ஊக்கப்படுத்துதல். 3 இலட்சம் தொழில்வாய்ப்புக்களையும் ஜீவனோபாய வாய்ப்புக்கள் 5 இலட்சத்தையும் ஏற்படுத்துதல். தேசிய கைத்தொழில் நிழ்ச்சி நிரலை தயாரித்தல். அதற்கு ஏற்ற வகையில் புதிய சட்டதிட்டங்களைக் கொண்ட கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல். அது தொடர்பாக முழுமையான அதிகாரங்களைக் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி சட்டமூலமொன்றைக் கொண்டுவருவேன்.

- வரியை மேலும் இலகு படுத்துவதற்காக அரசால் பெற்றுக்கொடுக்கக் கூடிய அனைத்து அனுமதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொடுப்பதற்கு அது தொடர்பாக ஏற்படுகின்ற கால நிர்ணயத்தை நிர்ணயித்தல். மூல பொருட்களை வழங்கி இலகு படுத்தல். மனித வளங்களை முகாமைத்துவப்படுத்தல். சூழலை பாதுகாத்தல். புதிய அறிவை மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இறக்குமதி சந்தை வாய்ப்பின் வசதிகளை ஏற்படுத்தும் முகமாக இந்த சட்டமூலத்தை தயாரிப்பேன்.

- அரச நிறுவனங்களின் கணக்காய்வு முதலாவது மூலதாரமாக வேண்டியது. நிறுவனங்களின் சேவைகள் அல்லது நிதி வளங்கள் எவ்வளவு துரிதமாக தேசிய நோக்கங்களுக்காக பயன்பாடுள்ளதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதேயாகும். அதனால் இந்த நோக்கங்களின் அடிப்படையில் அனைத்து நிறுவனங்களையும் திட்டங்களை 2015இல் புதிதாகத் தயாரிப்பதற்கு ஆலோசித்துள்ளேன்.

- பாரிய கைத்தொழில் மற்றும் உபாய மார்க்கங்களை கைத்தொழில்துறைகளுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிகளின் நிதி மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதற்குக் கூடிய வகையில் பாதுகாப்பு பொறுப்பு மற்றும் ஈடுபாடுகளை வழங்குவதற்காக ஏற்றுமதி வங்கி முறையை நடைமுறைப்படுத்துவேன்.

- கைத்தொழில்துறைக்குத் தேவையான கட்டமைப்பை முன்னேற்றுவதற்கு உரிய நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களை மாற்றுவேன்.

- கைத்தொழில்துறையில் ஈடுபட்டுள்ள அனேகர் அரசதுறையில் எந்தவிதமான வசதிகள் பெற்றுக்கொடுக்கின்றதோ அந்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு செல்கையில் மாதக்கணக்கில் தாமதங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. அதனால் ஒரே கூரையின் கீழ் அனைத்து அனுமதிகளையும் பெற்றுக்கொள்வதற்கு உரிய முறைகளை இலகுபடுத்துவதற்குத் தேவையான நடைமுறைகளை தாமதப்படுத்தாமல் எடுத்துள்ளேன்.

## பாரிய கைத்தொழில்துறைக்கு உதவுதல்

### சுற்றுலாத்தொழில்துறை

உலகததில் அநேக நாடுகளில் இன்னும் கொடிய பயங்கரவாதம் உள்ளபோதும் அநேகமான நாடுகள் பொருளாதார ரீதியாக வீழ்ந்துள்ள வேளையில் இயற்கை வளங்களினால் புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு பிரயத்தனமான முன்னேற்றத்தால் சுற்றுலாத்துறை தேசிய பொருளாதாரத்தில் உயர்ந்த மட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது.

- விரிவடைகின்ற சுற்றுலாத்துறைக்கேற்ப ஹோட்டல் அறைகள் 80,000 அமைப்பதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொடுத்து இலங்கையில் ஹோட்டல் தொழில்துறையை சர்வதேச மட்டத்துக்கு முன்னேற்றுவேன். உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் வழங்குவதன் ஊடாக ஒரு இலட்சம் ஜீவனோபாய வாய்ப்புக்களைக் கட்டியெழுப்புவேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்பிட்டி, குச்சவெளி, யால மற்றும் பாசிக்குடா ஆகிய பிரதேசங்களிலுள்ள கடல்விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட கடற்கரை உல்லாசத்தொழில்துறைக்கு ஏற்றவிதத்தில் வசதிகளை வழங்கி முன்னேற்றுவேன்.

- விவசாய சுற்றுலா தொழில்துறையை சூழல் சுற்றுலாத்தொழில்துறைக்கு வனாந்தரம் சார்பான சுற்றுலாத்தொழில்துறையை மேம்படுத்துவதற்கும் இளம் சக்திகளை மற்றும் வேலையாளர்களையும் ஊக்கப்படுத்துவேன்.

- இளம் உல்லாசப் பயணிகளின் மனதைக் கவர்ந்திழுக்கும் விதத்தில் விளையாட்டுக்களை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- எங்களது நாட்டுக்கு வருகின்ற உல்லாசப் பயணிகளுக்கு எங்களது உறவுகளை உபசரிக்கின்ற விதத்தில் இலங்கையில் கீர்த்திக்கு ஏற்ப அவற்றை உலகில் விரிவடையச் செய்யும் வேலைத்திட்டங்களைக் கட்டியெழுப்புவேன்.

- காபன் உணவுகளை உள்ளூர் உணவுகளையும் மற்றும் குளிர்பான வகைகளையும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குகின்ற சிறு வியாபாரிகளுக்கு 5 இலசட்ம் ரூபாவரை நிவாரணக் கடன்வழங்கி ஊக்கப்படுத்துவேன்.

- சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்குவதற்கு முறையான பயிற்சியை வழங்குவேன்.

- உள்ளூர் தேசிய வைத்திய சேவையை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறையை விசேடமாக நாடு முழுவதிலும் விரிவுபடுத்துவதற்காக உள்ளூர் வைத்தியர்களை ஊக்கப்படுத்துவேன். அதற்காக நிவாரணங்களை வழங்குவதற்கு கட்டளைகளை இடுவதற்கு பொறிமுறையொன்றை தயாரிப்பேன்.

## நிர்மாண தொழில்துறை நடவடிக்கை முறை

- தேசிய நிர்மாணிப்பு தொழில்துறை தற்போது அடைந்துள்ள வெற்றிகளுக்கு ஏற்ப முன்னேற்றுவதற்கு புதிய நிர்மாணிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி சட்டமொன்றின் கீழ் அனைத்து சேவையாளர்களையும் நிர்மாணிப்பாளர்களையும் கட்டட கலைஞர்களையும் முழுமையான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய நிர்மாணிப்பு வேலைத்திட்டமொன்றை நிர்மாணிப்பேன்.

- பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளை முந்திக் கொண்டு முன்னோக்கிச் செல்லத் தேவையான சவால்களை வெற்றி கொள்ளவென உள்ளூர் நிர்மாணக் கைத்தொழில் கொள்கையொன்றை வெளியிடுவேன்.
- இக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள சுமார் 6 இலட்சம் துறைசார்ந்தோருக்கு முறையான பயிற்சியை வழங்கவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அவர்களுக்கு ஒழுங்கு முறையான சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கவும் மகாபிமாணி தேசிய ஓய்வூதிய நலன்புரி மற்றும் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகம் செய்ய எதிர்பார்க்கிறேன்.
- நிர்மாணத்துறையினருக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கவென விசேட திட்டமொன்றை முன்னெடுப்பேன்.
- நிர்மாணக் கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருட்களை உயர்தரத்துடன் உற்பத்தி செய்வதற்குரிய தரத்தினை அறிமுகப்படுத்துவேன்.
- தேசிய நிர்மாண தகவல் வலையமைப்பை உருவாக்குவேன்.

## ஆடைக் கைத்தொழிலில் திருப்புமுனை

- உயர்தரத்திலான ஆடைகளை மேல்மட்ட பாவனையாளர் சந்தைக்கு ஏற்ப தயாரிக்கவும், புதிய சர்வதேச சந்தை வாய்ப்பை தேடிச் செல்லவும் என ஆடை கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அரசாங்கத்தில் பூரண அனுசரணை வழங்குவேன்.
- சுகாதாரத் துறையில் பயன்படுத்தப்படும் சகல புடவை (Medical Textiles) உற்பத்தி மற்றும் பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தும் விசேட புடவைகள் (Geo Textiles) உற்பத்திக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலை இலங்கை ஆடைக் கைத்தொழில் துறையில் அறிமுகப்படுத்துவேன். இக்கைத்தொழில் துறையின் மேம்பாட்டுக்குத் தேவையான வசதிகளையும் அரசாங்கத்தின் ஊடாக வழங்க உறுதியளிக்கிறேன்.

- மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் ஆடை உற்பத்தி கைத்தொழில் துறையை நவீன தொழில்நுட்பத்துடன் கூடியதாக முன்னேற்றுவதற்கு இளம் தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான மூலதனம் மற்றும் அறிவை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

## மூலோபாய கைத்தொழில் கட்டமைப்பு

- வருடாந்தம் வெளிநாடுகளுக்கு செல்லும் ஆனால், எம்மால் உற்பத்தி செய்யக்கூடிய உள்நாட்டு உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் கட்டமைப்பொன்றை உருவாக்குவேன். அவ்வாறான கைத்தொழில்களுக்கு அரச அனுசரணையையும் நாட்டின் உயர் தனியார் கைத்தொழிலாளர்களின் பங்களிப்பையும் அளிப்பேன்.

- சகல பிரதேச செயலாளர் பிரிவிலும் தலா ஒரு பெறுமதி சேர் கைத்தொழில் மற்றும் உள்நாட்டு மூலப் பொருள்சார் கைத்தொழில் அடங்களாக 325 கைத்தொழில் நிலையங்களை ஆரம்பிப்பதற்காக பங்குச் சந்தையில் முன்னணியில் உள்ள 200 கம்பனிகள் அடங்களாக எமது நாட்டின் சிறந்த வியாபாரிகளுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

- இதற்கென அவர்களுக்குத் தேவையான வசதிகளையும், சகல வித ஊக்குவிப்பு கொடுப்பனவையும் வழங்குவேன்.

- இத் திட்டத்தின் கீழ் தாம் வாழும் பகுதிகளில் இருந்தே மேற்கொள்ளக்கூடிய 100,000 தொழில்வாய்ப்புகளை உருவாக்குவேன்.

- தேசிய கைத்தொழில் கட்டமைப்பிற்குள் நவீன அறிவையும் உள்ளூரின் புதிய கண்டு பிடிப்புகளையும் மென்மேலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்கவும், தொழில்நுட்ப ஆய்வுக்கான ஆய்வுகூடத் தொகுதியொன்றை நாடு பூராகவும் உள்ள பல்கலைக்கழகங்களுடன் இணைந்ததாக ஸ்தாபிப்பேன்.

- விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வாளரின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகளை அபிவிருத்தி நடவடிக்கைகளின்பால் ஈர்ப்பதற்காக தேசிய ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிதியமொன்றை ஆரம்பிப்பேன். இந்த நிதியத்தின் ஊடாகக் கைத்தொழிலாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு தேவையான நிதி உதவிகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

## சீனிக் கைத்தொழில்

- புதிய மூலோபாய சட்டத்தின் கீழ் அரச மற்றும் தனியார் கூட்டு முதலீட்டு கைத்தொழிலாக சீனிக் கைத்தொழில் துறையை முன்னேற்றுவேன். 2020ஆகும் போது இலங்கைக்கு தேவையான சீனியை உள்ளூரிலேயே முழுமையாகப் பெறத் தேவையான திட்டத்தை ஏற்கனவே தயாரித்துள்ளேன்.
- பெல்வத்தை, செவனகல மற்றும் ஹிங்குரான சீனித்தொழிற்சாலைகளை முழுமையாக நவீனமயப்படுத்துவேன். இப்பகுதிகளில் ஒரு ஹெக்டேயருக்கு கிடைக்கும் அறுவடையை 100 மெற்றிக்தொன் வரையில் உயர்த்த தேவையான அதிக விளைச்சலை தரும் விதை வகைகளையும் நவீன பயிரிடல் முறையையும் அறிமுகப்படுத்துவேன்.
- அநுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் பிபிலை ஆகிய பிரதேசங்களில் 120,000 ஹெக்டேயரில் புதிதாக கரும்பு செய்கையை மேற்கொள்வேன். இந்த சகல பிரதேசங்களிலும் அதி நவீன கைத் தொழில்சாலை கட்டமைப்பை ஆரம்பிப்பேன்.
- இப் புதிய கைத்தொழில் துறையின் ஊடாக 25,000 நேரடி தொழில் வாய்ப்பையும் உருவாக்குவேன். இது தவிர தற்பொழுது மேற்கொள்ளப்படும் விவசாயத்தின் ஊடாக உரிய பலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காத பகுதி விவசாயிகளின் ஊடாக புதிய கரும்பு பயிர்ச்செய்கையை மேற்கொள்வேன்.

- குறைந்தபட்சம் 100,000 விவசாய குடும்பங்களுக்கு மேலதிக வாழ்வாதார வழி உருவாக்கப்படும்.
- சீனி உற்பத்தியின் ஊடாக கிடைக்கும் மேலதிக உற்பத்திகளான எதனோல், போதைப்பொருள் என்பவற்றுக்காக அன்றி எரிபொருள் கலவை ஒன்றை உற்பத்தி செய்யப் பயன்படுத்த தேவையான மூலோபாயத்தை தயாரிப்பேன்.
- கடதாசி அட்டைகள், கடதாசி மற்றும் பிளாஸ்டிக் ஊடாக இடை உற்பத்திகள் பலவற்றை நாட்டினுள் ஏற்படுத்துவேன்.
- சீனிக் கைத்தொழில் தொழிற்சாலையூடாக புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியை மேற்கொண்டு தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பேன்.

## பால் உற்பத்தி - வெண்மைப் புரட்சி

- நீண்டகாலமாக உள்நாட்டு பால் உற்பத்திக்கு மாற்றாந்தாய் கவனிப்பே கிடைத்ததால் பின்னடவை சந்தித்திருந்த உள்நாட்டு பசும்பால் கைத்தொழிலில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளூர் பால் உற்பத்தியை 13வீதத்தில் இருந்து 40 வீதம் வரை மேம்படுத்த முடிந்தது நாம் அடைந்த பெரு வெற்றியாகும். இதனூடாக கிடைத்த மன ரீதியிலான தைரியத்தோடு 2020இல் இலங்கையில் பால் உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்துவேன்.
- தற்போது இலங்கையில் 12இலட்சம் கறவைப் பசுக்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டாலும் அதற்கேற்றவாறு பால் உற்பத்தி நடைபெறுவதாக எனக்குத் தெரியவில்லை. பசும்பால் சேகரித்தல், விநியோகித்தல் உரிய முறைப்படி நாடுபூராவும் மேற்கொள்ளப்படாத நிலையில் நாடு பூராவும் பால் சேரிக்கும் வலையமைப்பு ஒன்றையும் களஞ்சிய நிலைய கட்டமைப்பொன்றையும் ஸ்தாபிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு மாகாணத்திலும் தலா ஒரு பசும்பால் சார்ந்த 9 கைத்தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பேன்.

- இந்த தொழிற்சாலையின் பால் உற்பத்திகளை குறித்த மாகாணத்தின் பேரிலேயே விநியோகிக்கும் முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவேன். அதனூடாக உற்பத்திகளின் விநியோகிப்பதை மேம்படுத்துவேன்.

- நான்கு பிரதான பால்மா தொழிற்சாலைகளை உருவாக்குவேன். இதனூடாக இறக்குமதி செய்யப்படும் பால்மாவுடன் போட்டியிடுவதற்கு நச்சுத் தன்மையற்ற உள்ளூர் பால்மா கைத்தொழில் துறைக்கு வாய்ப்பு ஏற்படும்.

## நடுத்தர அளவான கனிப்பொருள் கைத்தொழில் தொகுதி

- பெரும்பாலனவர்கள் உலகில் மிகவும் பெறுமதி வாய்ந்த நிலத்தடி வளமாக தங்கம், மாணிக்கக்கல் மற்றும் எரிபொருள் என்பவற்றை மாத்திரம் என்று நம்புகின்றனர். எமக்குச் சொந்தமான மாணிக்ககக்கல், இல்மனைட், காரீயம், சிலிக்கன், சுண்ணாம்புக்கல் போன்ற நிலத்தடி வளங்களை நாம் இன்னும் உரிய முறையில் பயன்படுத்தாதுள்ளோம். அதனால், சுற்றுச்சூலலையும் பாதுகாக்கும் வகையில் கடும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக தேசிய கனிப்பொருள் கைத்தொழில் அபிவிருத்தி திட்டமொன்றை ஆரம்பிப்பேன்.

## மாணிக் கல் கைத்தொழில்

- நீல மாணிக்கக் கல்லுக்கு சர்வதேச சந்தையில் நாம் பெற்றுள்ள கீர்த்தியை அடிப்படையாகக் கொண்டு இலங்கையை உலகில் முதற்தர நீல மாணிக்கக்கல் சந்தை மத்திய நிலையமாக மேம்படுத்துவேன்.

- உலகின் முதற்தர மாணிக்ககக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதியாளர்களை ஈர்க்கும் வகையில் இலங்கையை மாணிக்கக் கைத் தொழிலில் முதற்தர நாடாக மாற்றுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நவீன இலத்திரணியல் அனல் பூச்சு தொழில்நுட்பத்தை எமது நாட்டில் அறிமுகப்படுத்தி கெவுடா மற்றும் மாணிக்கக் கற்களுக்கான பெறுமதியை அதிகரித்து இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு புதிய வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்துவேன்.

- இன்னும் எமது நாட்டில் பயன்படுத்தப்படாத அதிநவீன துல்லிய பட்டைதீட்டுதல் (Precision Cutting) தொழில்நுட்பத்தை எமது நாட்டில் அறிமுகப்படுத்தி மாணிக்கக் கல் அரிவட்டியில் அதிகமாக உள்ள பெறுமதி குறைந்த சிறிய மாணிக்கக் கற்களுக்கு பெறுமதியை வழங்கி அதிக வருமானம் ஈட்டுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பேன்.

- மாணிக்கக் கல் கைத்தொழிலுடன் தொடர்புடைய சிறிய தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக பட்டைதீட்டப்படாத மாணிக்கக் கல் உற்பத்தியை அதிகரித்து அதற்காக வெளிநாட்டு சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பேன்.

## முன்னேற்றம் காணாத வளம்

- எமக்கு சொந்தமான, பொஸ்பேற், இரும்பு, எரிபொருள், இயற்கைவாயு மற்றும் கனிய மணல் போன்ற வளங்களை உரிய முறையில் அகழ்வதற்காகத் தேசிய நிரந்தர எரிபொருள் வள கைத்தொழில் கொள்கையொன்றைத் தயாரிப்பேன்.

- எப்பாவெல பொஸ்பேற் படிமம் போன்ற வளங்களின் ஊடாக உள்நாட்டு விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழிலுக்கு தேவையானவற்றை நிறைவேற்றும் வகையில் ரொக் பொஸ்பேற், சிங்கல் சுப்பர் பொஸ்பேற் மற்றும் ரிபல் சுப்பர் பொஸ்பேற் தயாரிப்பை நவீன தொழில்நுட்பம் கலந்த கைத்தொழிலாக அபிவிருத்தி செய்வேன்.

- இந்தக் கைத்தொழிலுக்காக உயிரியல் தொழில் நுட்பம், நனோ தொழில்நுட்பம், இலத்திரனியல் தொழில்நுட்பம், ரோபோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பம், தகவல் மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் என்பவற்றின் பயன்பாட்டின் ஊடாக உற்பத்தி அளவை மேம்படுத்துவதற்காக ஆய்வு நடவடிக்கைகளை ஊக்குவிப்பேன்.

- இலங்கை கடற்பரப்பில் பரவிக் கிடக்கும் கனிய வளங்களை சேகரிப்பவர்களை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களாக முன்னேற்ற நடவடிக்கை எடுப்பேன்.
- ஆபத்துக்கு மத்தியில் சுரங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களின் உயிர்பாதுகாப்பிற்காக விசேட செயற்திட்டமொன்றை தயாரித்து அவர்களுக்கென ஆயுள் காப்புறுதி முறையொன்றை அறிமுகப்படுத்துவேன்.

## சிறு வியாபார அபிவிருத்தி செயற்திட்டம்

- மனை, சிறு மற்றும் நடுத்தர உற்பத்திகளை வெளிநாட்டு சந்தைக்கு கொண்டு செல்வதை நோக்காகக் கொண்டு "ஜயபிம லங்கா" செயற்திட்டத்தை முன்னெடுப்பேன்.
- கைத்தொழில் அபிவிருத்தி சபை பலப்படுத்தி இந்த வியாபாரிகளுக்கு தேவையான பயிற்சி, தொழில்நுட்பம், சந்தை தகவல்களை இலகுவாக பெறுவதற்காக செயற்திட்டமொன்றை மேற்கொள்வேன்.
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையை முழுமையாக மீளமைத்து சிறிய மற்றும் மத்தியதர தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு முறையாக கொண்டு செல்வதற்கான செயற்திட்டமொன்று ஆரம்பிப்பேன்.
- சகல அரசாங்க வங்கிகள் ஊடாக சலுகை வட்டியுடன் முதல் இரு வருடங்களிலும் தவணைக் கடனை அறவிடாத விசேட அபிவிருத்தி கடன் திட்டமொன்றை இந்தத் துறையின் மேம்பாட்டுக்காக செயற்படுத்துவேன்.
- சிறு வியாபாரிகளின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டுள்ள சகல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் குறித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் முயற்சியாளர்களின் பிரதிநிதித்துவம் அடங்கிய தேசிய சபையொன்றை உருவாக்குவேன்.

## பாரம்பரிய உரிமைகளின் ஊடாக நவீன சந்தையை வெற்றி கொள்ளல்

சர்வதேச சந்தையை இலக்கு வைத்து பாரம்பரிய கைத்தொழில் உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டமொன்றை முன்னெடுப்பேன்.

- சர்வதேச வடிவமைப்பு மத்திய நிலையத்தின் கட்டமைப்பையும் செயற்திறனையும் மாற்றி பழைய பாரம்பரிய பொருட்கள் தயாரிக்கும் கிராமத்துடன் நேரடித் தொடர்பினை ஏற்படுத்துவேன்.
- தும்புக் கைத்தொழில் துறையில் அரசாங்கம் நேரடி தலையீடு செய்யும் பிரதான நிறுவனமாக லக்சல ஊடாக வழங்குவதன் ஊடாக உள்நாட்டு சந்தையை பலப்படுத்துவேன்.
- அதற்காக நிதியம் ஒன்றை ஆரம்பித்து இந்தத் துறை குறித்து ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளை சர்வதேச சந்தைத் தேவையான உயர்தரமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமான நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுப்பேன்.
- கிராமிய விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிறு விவசாயிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை சேகரிக்கவும் விநியோகிக்கவும் என 35 வயதுக்கு குறைவான 25,000 தொழில் முயற்சியாளர்களுக்கு சிறிய ரக லொறியொன்றை கொள்வனவு செய்வதற்கு சலுகை வட்டியுடன் கூடிய கடன் உதவி வழங்குவேன்.
- இந்த தொழில்துறையில் ஈடுபட்டுள்ள வயோதிபர்களுக்கு உதவுவதற்காக வாழ்க்கை கொடுப்பனவு ஒன்றை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 அபிவிருத்தியின் சிறந்த பலன்கள் கிராமங்களுக்கு கொண்டு செல்லும் திவிநெகும

## திவிநெகுமவின் மூலம் அழகான நகரம் தரமான கிராமம்

பழமையான சுதந்தரத்துடன் தரமான கிராமம் பொதுவசதிகளுடன் கூடிய சொத்துக்கள் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையங்களாக ஏற்படுத்துவதற்காக கமநெகும வேலைத்திட்டத்தில் இருந்து திவிநெகும வரை நடவடிக்கை எடுப்பது நானும் கிராமவாசி என்ற ரீதியிலாகும். நகரத்தை அலகாரப்படுத்தக்கூடிய இடமென்று குறிப்பிடுவது அது இலகுவாக அழங்காரப்படுத்தக்கூடியதாக இருப்பதால் தான். இன்று எமது கிராமத்தில் உள்ளவர்கள் வேண்டுவது நகரத்துக்கு சமமாக வசதிகளால் கூடிய தூய்மையான கிராமத்தையாகும்.

- கமநெகும வேலைத்திட்டத்தின் இலக்காவது அபிவிருத்தி மற்றும் அலங்காரத்தால் நுழைப்பாதைகள் சுத்தமான நீர்ப்பாசன திட்டங்கள் வசதிகளுடன் கூடிய சுகாதார நிலையங்கள், நவீன கூட்டுறவு சங்கங்கள், சிறுவர் பூங்காக்கள், முன்பள்ளிகள், அலங்காரமா பாடசாலைகள் உட்பட பொதுவசதிகளால் நிறைந்த அனைத்து கிராமங்களுக்கும் பெற்றுக் கொடுப்பதாகும்.
- திவிநெகும மூலம் மேற்கொள்ளப்படுகின்ற 25 ஆயிரம் கிராமங்களின் வேலைத்திட்டத்தின் நோக்கமானது கிராம எழுச்சியை முன்னேற்றி பொது வசதிகளுடன் கூடிய கிராமங்களை வாழ்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து குடும்பங்களையும் வளப்படுத்துவேன்.
- அனைத்துக் குடும்பங்களுக்கும் நிரந்தரமான வீடுகளை வழங்குவதுடன் அனைத்து வீடுகளுக்கும் குறைந்தது மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட பொதுவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முன்னேற்றப்பட்ட சுகாதார நிலையங்களில் சுகாதார பாதுகாப்புக்காக அந்த கிராமத்தில் வாழுகின்ற அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் சுகாதாரத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன் பொது போக்குவரத்து சேவையை நனசல ஆகிய வசதிகளைக் கொண்ட நிலையங்களை அனைத்துக் குடும்பங்களிலுமுள்ள அங்கத்தவர்கள் குறைவின்றி பெற்றுக்கொள்வது கட்டாயமாக்குவேன்.

- 18 வயதுக்குப் பின் அடையாள அட்டை மட்டுமல்ல பரீட்சை சான்றிதழ் உட்பட பொதுவாக அரசால் வழங்கப்படுகின்ற அனைத்து வீடுகளுக்கும் பெற்றுக்கொள்வதற்கான முறையை தயாரிப்பேன்.

- அனைத்து கிராமத்திலுள்ள பிள்ளைகளுக்கும் விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதற்கு முழுமையான சிறுவர் பூங்காக்களை நிர்மாணிப்பேன்.

- எந்தவொரு வீட்டிலும் உலை வைக்காத நாள் இருக்க நான் இடமளிக்க மாட்டேன். அதற்காக குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு வேலை அல்லது நிரந்தர வருமானம் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவேன். அதனை உறுதிப்படுத்துவதற்காக சட்டரீதியான கட்டமைப்பை தயாரிப்பேன்.

- அந்தந்த கிராமங்களுக்கு உரிய சம்பிரதாயபூர்வ கைத்தொழில்துறையை புனரமைப்பதுடன் அந்தத் தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரிய நிதியை திவிநெகும வங்கியில் வட்டியின்றி அல்லது குறைந்த வட்டியில் பெற்றுக்கொடுப்பேன்.

- மகளீர் தொழில்துறையினருக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு வீட்டிலேயே செய்யக்கூடிய பூ மரம் வளர்த்தல், மரம் நடுதல், மரக்கறி பழங்களை உற்பத்தி செய்தல், தேசிய உற்பத்திகள் மற்றும் கால்நடை வளர்த்தல் மற்றும் வேறு சுயவேலை வாய்ப்புகளை மேற்கொள்வதற்கு தேவையான அறிவையும் பயிற்சியையும் திவிநெகும அதிகாரிகளின் வழிகாட்டல்களின் கீழ் பெற்றுக்கொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும் வீட்டிலிருந்துகொண்டே உரிய முறையில் பணத்தை உழைப்பதற்கு ஜன ஜனனி என்ற இணையத்தள வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துவேன். இணையத்தின் ஊடாக பல்வேறு சேவைகளை வழங்கக் கூடியவர்களை பதிவுசெய்து அந்த சேவைகளின் தேவைகளை ஏற்படுத்துவதற்கு உரிய சேவைகளை வீட்டிலிருந்தே வழங்குவதற்கு குறைந்தது மாதத்திற்கு 25ஆயிரத்துக்கு மேல் உழைக்கக் கூடிய வகையில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பேன்.

- வெளிநாட்டிலுள்ள தாய்மார்களின் பிள்ளைகளுக்கு விசேடமாக தேவையுள்ள பிள்ளைகளின் வீழ்ச்சியுற்றுள்ள குடும்பங்களின் பெரியவர்களின் உரிய பாதுகாப்பு இன்றித் தவிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பை அந்தப் பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு ஏற்ற விதத்தில் கிராமங்களில் பிள்ளை பராமரிப்பு வள நிலையங்களை ஆரம்பிப்பேன்.

- ஓய்வுபெற்றுள்ள பிரஜைகளுக்கு மற்றும் பாதுகாப்பு இன்றியிருக்கும் பெரியவர்களுக்கும் அந்த நிலையங்களில் சுகாதார பிரதேசமொன்றை ஏற்படுத்துவேன். தினந்தோறும் பத்திரிகைகள், சமய நூல்கள், இலகுவான விளையாட்டுக்கேற்ற உபகரணங்கள், கரம், தாம், சதுரங்கம் போன்ற உள்ள விளையாட்டு உபகரணங்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்களை அந்த நிலையங்களுக்கு வழங்குவேன். இவ்வாறான இடங்களை கட்டியெழுப்பும்போது சமய நிலையங்களை அடிப்படையாகக் கொள்வதற்கு ஆலோசனை வழங்குவேன்.

- சமய மற்றும் சகவாழ்வை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் ஊடாக புகைப்பிடிக்காத கிராமமொன்றை சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகமற்ற கிராமமொன்றை, குற்றச்செயல்கள் அற்ற கிராமமொன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- சுத்தமான சூழலை, பாதுகாப்பான காணி மற்றும் வனரோக பாதுகாத்தல், காபன் இரசாயன உர பாவனை, குப்பை முகாமைத்துவம், மரம் வளர்த்தல், மனித வாழ்வின் கட்டாயமான ஒரு பகுதியாக்குவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஜாதி மற்றும் குல பேதங்களால் வேறு சமூக விடயங்களால் ஒருவருக்குரிய பயன் கிடைக்காமல் போவதாயிருப்பின் அதற்கு இடமளிக்க மாட்டேன்.

## நிறைவான வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்

நாட்டின் பொருளாதாரத்துக்காக பாரிய பங்களிப்பை வழங்குகின்ற மேசன்மார், தச்சன்மார், சுற்றுலா வர்த்தகர்கள், தென்னைமரம் ஏறுவோர் போன்ற பல்வேறு சேவையாளர்கள் மற்றும் நாளாந்த கூலிக்கு வேலை செய்வோர் ஆகிய பாரிய குழுவினர் இன்னும் எமது சமூகத்தில் சமமான அங்கீகரிப்பின்றி இருப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்களுக்கு சமமான சமூக அந்தஸ்தை பெற்றுக் கொடுக்கின்ற நிறைவான வாழ்வதார அபிவிருத்தி வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- முறையற்ற வேலைசெய்வோர் பற்றி தேடிப்பார்ப்பதற்காக முறையற்ற வேலை பணியகம் ஒன்றை ஏற்படுத்துவேன். அதன் கீழ் உரிய வேலைகளில் ஈடுபடுவோரை பதிவு செய்து அடையாள அட்டை வழங்குவேன்.

- அவர்களுக்கு தொழில்பயிற்சி தகவல் தொழில்நுட்ப பாவனையை முன்னேற்றுதல், கணக்காய்வு மற்றும் வங்கி தொடர்பான உரிய பயிற்சியை வழங்குவதுடன் சமூகத்தின் அறிவை முன்னேற்றிக் கொள்வதற்காக தேவையான வாய்ப்புகளை விரிவுபடுத்துவேன்.

- சிறிய லொறி வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தொழிலுக்கு தேவையான உபகரணங்கள் நிவாரண விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- வீடொன்றை அல்லது அலுவலகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு தேவையேற்படின் இணையத்தளத்தின் ஊடாக உரிய சேவையை வழங்குநர்களை இனங்கண்டு வேலையின் தன்மைக்கு ஏற்ப கொடுப்பனவுகளில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு மற்றும் முற்பணம் கொடுப்பதற்கு இணையத்தளத்தின் ஊடாக வசதிகள் வழங்கப்படும். அதன் பின்னத மது லொறி மூலம் மூலப்பொருட்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகரணங்கள் மற்றும் சேவையாளர்களுடன் உரிய இடத்துக்குச் சென்று நிர்மாணிப்பு வேலைகளை முழுமையாக செய்வதற்கு கலைஞருக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதன் மூலம் சேவை பெறுநருக்கு தமது காலம், மிகுதியாவதுடன் சேவை வழங்குனருக்கு சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து கிடைக்கும்.

- இந்தப் புதிய துறையினருக்கு உபகரணங்கள் மற்றும் இவற்றை கொண்டு செல்வதற்கு போக்குவரத்துக்கு தேவையான சிறிய லொறி, நிவாரண விலைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

## சுயவேலைவாய்ப்பு பாதுகாப்பு வேலைத்திட்டம்

- நாடு முழுவதிலும் வாழ்கின்ற அனைத்து சுய வேலைவாய்ப்பாளர்களின் பாதுகாப்புக்காக "சுயவேலை வாய்ப்பு பணியகம்" ஒன்று திவிநெகும திணைக்களத்தின் கீழ் அமைக்கப்படும்.

- கிராமிய மற்றும் நகர சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் ஏற்படுகின்ற அன்றாட கைமாறல்கள் மற்றும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக புதிய வங்கி முறையொன்றை அறிமுகப்படுத்துவேன். அதற்கமைய ஒருவருடத்துக்கு மேல் 20 ரூபா முதல் 500 ரூபா வரை முதலீட்டுக் கணக்கொன்றை வைத்திருப்பவருக்கு பிணை மற்றும் வட்டியின்றி ஒரு மாத காலத்துக்கு கணக்கில் உள்ள பணத்தொகையில் மூன்று பங்கு முதலீட்டுக் கடன் பெற்றுக் கொடுப்பேன்.

- நூதன அறிவூடாக தமது தொழிலை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக ஊக்குவிப்பாக நனசல ஊடாக இலவசமாக கணனி பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பேன்.

- நகரில் உள்ள சுயவேலைவாய்ப்பாளர்களுக்கு தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு தேவையான இடமொன்றை அனைத்து நகரங்களிலும் உருவாக்குவேன். அது தொடர்பில் அசாதாரண வரிப்பணம் அறிவிடாமல் இருப்பதற்கு மாகாணசபை நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முச்சக்கர வண்டி, பட்ஜட் டெக்ஸி, பாடசாலை வேன், சுற்றுலா போக்குவரத்து வாகனம் உட்பட அனைத்து தனியார் போக்குவரத்து வாகனங்களும் போக்குவரத்து அமைச்சின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படும். போக்குவரத்து துறையில் ஏழைகளின் நண்பன் முச்சக்கர வண்டியாகும். நான் தவறாமல் அதை தெரிந்து கொண்டுள்ளேன். மனிதாபிமான நடவடிக்கைகளில் நாட்டைப் பாதுகாக்கின்ற போது முச்சக்கர வண்டி சாரதியாளர்கள் நகரத்தைப் பாதுகாப்பதற்கு இரவு பகல் பாராது தம்மை அர்ப்பணித்தார்கள். இதனை நான் மறக்க மாட்டேன். அதனால், அவர்கள் அன்றாடம் முகம் கொடுக்கின்ற அவசர பணத்தேவைகளை ஈட்டிக் கொள்வதற்கு அரச ஈட்டு முதலீட்டு வங்கியூடாக "திவிதிரிய" என்ற பெயரில் புதிய சேமிப்பு முறையொன்று 50,000 ரூபா வரை பிணையற்ற 6 வீத வட்டிக்கு கடன் முறையொன்றை அறிமுகப்படுத்துவேன். அதே போன்று 20 வருடங்களில் கட்டிமுடிக்கக்கூடிய 50 இலட்சம் வரை வீடமைப்பு கடனை குறைந்த வட்டி விகிதத்துக்கு பெற்றுக் கொடுப்பேன்.

- காலாவதியான வரிமுறைக்கு முச்சக்கரவண்டிகளை பெற்றுக் கொண்டு பின்பு தவணையை மிகுதி வைப்பதால் அதற்குரிய காரணங்களை பொருட்படுத்தாது உரிய நேரத்தில் அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற நடைமுறைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- சுற்றுலா வலயங்களில் சேவையில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு மொழி ஆற்றல்களை மற்றும் ஏனைய தொழில் ஆற்றல்களை ஏற்படுத்திக் கொடுத்து முன்னேற்றுவதற்கு இலவசமான முறையான பயிற்சி பெற்றுக் கொடுத்து அவர்களது சமூக அந்தஸ்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- திவிநெகு திணைக்களத்தின் சமூகப் பாதுகாப்பு பிரிவின் ஊடாக தனியார் பஸ் லொறி, முச்சக்கரவண்டி, பட்ஜட் டெக்ஸி, பாடசாலை வேன், சுற்றுலா போக்குவரத்து போன்ற அனைத்து துறைகளிலும் உள்ள சாரதிகளுக்கு சுகாதார காப்புறுதி முறையொன்றையும் ஓய்வூதிய முறையொன்றையும் ஏற்படுத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 தேசிய ஆளுமை மிக்க கல்வி

நாடொன்றின் ஆளுமை என்பது அந்நாட்டின் மொழியை அடிப்படையாகக் கொண்ட விழுமியக் கட்டமைப்பை உள்வாங்கிய தேசிய வேலைத்திட்டமாகும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற நாடுகள் பூகோள ரீதியாக அல்லது இன ரீதியாக அவற்றுக்கு அப்பால் சென்று அந்நாடுகளின் தேசிய ஆளுமை அடிப்படையிலேயேதான் தம்மை அடையாளப்படுத்துகின்றன. 30 வருட யுத்தம் காரணமாக எம்மிடமிருந்து இந்த தேசிய ஆளுமைதான் பிடுங்கி எடுக்கப்பட்டிருகின்றது என நான் நம்புகிறேன். பூகோள மயமாக்கல் செயற்பாட்டில் வீழ்ச்சியடைந்திருந்த இந்த தேசிய ஆளுமையை ஒரே வீச்சில் முன்னோக்கி கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதனால், இன்று எமக்கு மிகப் பாரிய ஆளுமைமிக்க தேசியத்துவமே தேவைப்படுகின்றது. அதனால், இன்று பிறக்கின்ற பிள்ளைகளுக்கு வரலாற்று மரபுரிமை மற்றும் பெறுமதிகள் நிறைந்த நவீனத்துவத்தின் மூலம் சர்வதேசத்தை வெற்றிக் கொள்ளக்கூடிய கல்விமுறைமை அத்தியாவசிமானது என நான் தீவிரமாக நம்புகிறேன்.

- அனைத்துகட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கும் "புதிய கல்விச்சட்டத்தை" இவ்வருடம் முதல் நடைமுறைப்படுத்துவேன்.
- எதிர்காலத்தில் நாட்டில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதை இலக்காகக் கொண்டுள்ள இச்சட்டத்தின் மூலம் அறிவு மற்றும் பயிற்சி நிறைந்த கற்றறிந்த பரம்பரை உருவாக்கப்படும்.

## முன்பள்ளி புரட்சி

தேசிய ஆளுமை வளர்ச்சியின் சுபவேளை முன்பள்ளியில் இருந்தே ஆரம்பமாகின்றது. அதனால், நான் முன்பள்ளி கல்வி குறித்து மிகவும் கவனம் செலுத்துகின்றேன்.

- அனைத்து பிள்ளைகளுக்கும் முன்பள்ளி கல்வியை கட்டாயப்படுத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ''முன்பள்ளி தேசியக் கல்விக் கொள்கையை'' மீண்டும் நுணுக்கமாக ஆய்வு செய்து தாமதமின்றி செயற்படுத்துவேன்.
- ''பாடசாலைக்கு முன்பள்ளி'' என்ற எண்ணக்கருவின் கீழ் ஒவ்வொரு பாடசாலையுடனும் இணைந்ததாக முன்பள்ளியொன்று அப்பாடசாலைக்கு அருகிலேயே ஆரம்பிப்பேன். அதன் மூலம் சகல முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் தேவையான நவீன முன்பள்ளி கல்வி பயிற்சியை பெற்றுக் கொடுப்பேன்.

## சகலருக்கும் சமமான அறிவுப் பாக்கியம்

- இலங்கையில் ஆரம்ப வகுப்புகள் நடத்தப்படுகின்ற மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கையை 10,000 வரை அதிகரிப்பேன்.
- கிராமிய பிள்ளைகளுக்கு சகல வசதிகளையும் கொண்ட 1000 மஹிந்தோதய இரண்டாம் நிலை பாடசாலைகளை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை 2016இல் முழுமைப்படுத்துவேன்.
- ''மஹிந்தோதய வளமான பாடசாலை எண்ணக்கருவின்'' கீழ் 5000 பாடசாலைகளை சகல வசதிகளையும் கொண்ட பாடசாலையாக மேம்படுத்துவேன்.
- கைவிடப்பட்டுள்ள கிராமிய பாடசாலைக் கட்டமைப்பு, மின்சாரம், அடிப்படை சுகாதார வசதி உள்ளிட்ட அனைத்து பௌதீக வசதிகளையும் உள்ளடக்கி பிள்ளைநேய பாடசாலையை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 2016 சகல ஆரம்பப் பாடசாலைகளையும் பிள்ளைநேய பாடசாலைகளாக மாற்றியமைப்பேன்.
- சாதாரண தரம் வரை வகுப்புகளைக் கொண்ட அனைத்து பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுக்கூடங்களை பெற்றுக் கொடுப்பதுடன் விஞ்ஞான கற்கை நெறி கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 வரை அதிகரிப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் விஞ்ஞானம், வர்த்தகம், கலை மற்றும் தொழில்நுட்ப கற்கைநெறிகளுடனான சகல வசதிகளையும் கொண்ட மஹிந்தோய இரண்டாம் நிலை பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தற்போது 100 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2016ஆம் ஆண்டாகும் போது அந்நோக்கம் முழுமைப்படுத்தப்படும்.

- 2020ஆம் ஆண்டாகும் போது மாவட்டத்துக்கு ஒரு பாடசாலை என சகல வசதிகளையும் கொண்ட 25 பாடசாலைகளை ஆரம்பிப்பேன். 2015 இவ்வேலைத்திட்டம் நுவரெலியாவில் ஆரம்பிக்கப்படும்.

## கணிதத் தடையை உடைத்தெறிதல்

- ஏதோ ஒரு காரணத்தினால் எவ்வளவோ உபாய மார்க்கங்களை மேற்கொண்டும் எமது பிள்ளைகளில் அரைவாசிப்பேர் இன்னும் கணித பாடத்தில் தேர்ச்சி பெறுகிறார்கள் இல்லை. அவ்வாறான பிள்ளைகளின் வாழ்வு மேம்பாட்டுக்கு எவ்வித தடையும் ஏற்படாத வகையில் தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்துவேன்.

- பாடவழிகாட்டி, கற்பிக்கும் விதிமுறை, ஆசிரியர்களின் மனப்பான்மை மற்றும் நவீன கற்பிக்கும் முறை என்பன குறித்து பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற சமூக உளவியல் ரீதியான காரணங்கள் போன்ற விடயங்கள் குறித்து நீண்ட விரிவான அடிப்படையில் ஆய்வு செய்து இப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பேன்.

- உயர்தரத்தில் கற்பதற்கு தகுதி பெற்றிருந்தும், கணித பாடத்தில் சித்தி பெறாத மாணவர்களுக்கு தொழிநுட்ப கற்கைநெறியோ அல்லது கலை கற்கைநெறியோ கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவேன்.

- ஆறு பாடங்களில் சித்தி பெற்று கணிதத்தில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் இரண்டு வருட காலப்பகுதியினுள் அப்பாடத்தில் சித்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் உயர்தரத்தில் கற்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன், அந்த இரண்டு வருடத்தினுள் கணித பாடத்தில் தேர்ச்சி பெறுவதற்காக விசேட வகுப்புக்களை நடத்துவதற்காக நடவடிக்கை எடுப்பேன்.

## வரலாற்று அறிவுப் புரட்சி

- தொழிநுட்ப கற்கையை உயர்தரபாடத் திட்டத்தில் உள்ளடக்கியமை எதிர்காலத்தை கருத்தில் கொண்டு எமது அரசாங்கம் மேற்கொண்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க நடவடிக்கை என்பது ஒரு நாள் வரலாற்றில் பொன் எழுத்தால் பதியப்படும் என நான் உறுதியாக நம்புகிறேன். மேலும் இதன் மூலம் பல்கலைக்கழகத்துக்கு செல்ல முடியாது உயர்கல்வியை இழந்து பெரு மூச்சு விடும் பிள்ளைகளுக்கு உயர் கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் முழுமைப்படுத்தப்படும்.

- தொழிநுட்ப கற்கையை மேற்கொள்ளும் ஒவ்வொரு மாணவனுக்கும் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் (ஏஞு) வழங்கப்படும். அந்தச் சான்றிதழ் உயர்கல்வியை கற்பதற்கு விருப்பம் அற்ற ஒவ்வொரு மாணவனுக்கும் தொழிலை பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப்பத்திரமாகும்.

- மாவட்டத்திற்கு ஒரு பல்கலைக்கழக கல்லூரி என்ற அடிப்படையில் 25 பல்கலைக்கழக கல்லூரிகளை ஆரம்பிப்பேன். 2015ல் உயர்தரத்தில் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழக நுழைவைப் பெறாத 7500 மாணவர்கள் 2016ல் அவ்வாறான கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

- தொழிநுட்ப கல்வி கற்கையை கற்கும் பொருளாதார கஷ்டத்திற்கு முகம் கொடுத்துள்ள பிள்ளைகளுக்கு மஹிந்தோதய தொழிநுட்ப புலமைப்பரிசில் நிதியத்தின் மூலம் மாதாமாதம் 1,000 ரூபா படி புலமைப்பரிசில் வழங்குவேன்.

- நாட்டில் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட தேவை உடைய பிள்ளைகளுக்கு சிறப்பாக

- விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதற்காக சகல வசதிகளையும் கொண்ட வள மத்திய நிலையம் ஒன்றை கொழும்பில் ஸ்தாபிப்பேன்.
- அப்பிள்ளைகளுக்காக ஒவ்வொரு கல்வி வலயப் பிரிவிலும் ஒரு விசேட போதனா மத்திய நிலையத்தை ஆரம்பிப்பேன்.
- அடுத்து வரும் 6 வருடங்களில் 500 அரசாங்க பாடசாலைகளில் விசேட தேவை உடைய பிள்ளைகளுக்கான வள மத்திய நிலையங்களை ஸ்தாபிப்பேன்.
- சகல பாடபுத்தகங்களையும் பிரைல் மொழிக்கு மொழி பெயர்த்து பார்வை மற்றும் செவிப்புலன் அற்ற பிள்ளைகளுக்காக பார்வை மற்றும் செவிப்புலன் உபகரணங்கள் அனைத்தையும் இலவசமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.
- அவ்வாறான பாடசாலைகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை 500 ரூபா வரை அதிகரிப்பேன்.

## நீண்ட காலம் தங்கியிருந்து சிகிச்சை பெறும் பிள்ளைகளுக்கு கல்வி

- கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரியிலும் மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியிலும் நீண்ட காலமாக சிகிச்சை பெற்று வரும் பிள்ளைகளுக்கு தொடராக கல்வியை வழங்கவென சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு ஏற்ப, அப்பிள்ளைகள் சிகிச்சை பெறுகின்ற வெளி மாகாண ஆஸ்பத்திரிகளில் பாடசாலை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பேன்.
- வீதிச் சிறுவர்களுக்கு கற்பிப்பதற்காக நடமாடும் பஸ் பாடசாலை ஒன்றை அறிமுகப்படுத்துவேன். அவர்கள் வசிக்கும் பிரதேசங்களுக்குச் சென்று பஸ் பாடசாலையினுள் அவர்களை வரவேற்று குறிக்கப்பட்ட நேரத்திற்கு அடிப்படைக் கல்வி, கணனி அறிவு மற்றும் உள்நாட்டுக் கைத்தொழில் என்பன தொடர்பான அறிவை பெற்றுக் கொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நடமாட முடியாது ஒரே இடத்தில் இருக்கும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்லவென அவரது பெற்றோர் அனுபவிக்கும் துன்பங்களை நான் அறிவேன். அவர்களது வேதனைகளை குறைப்பதற்காக அவ்வாறான பிள்ளைகள் இருக்கும் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு கல்வியை வழங்கவென 5 கிராமங்களுக்கு ஒரு யுவதி படி தெரிவு செய்து தேவையான பயிற்சியை வழங்குவேன். குறித்த தகுதியை பெற்றுக் கொடுத்ததன் பின்னர் அந்த யுவதிகளும் ஆசிரிய உதவியாளர் பதவியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

## சமய நெறியைப் பாதுகாக்கும் கல்வி

- முழு ஆசியாவுக்கு அறிவைப் பரப்பிய மகா விகாரையின் மரபு உரிமையின் எதிர்கால சங்க பரம்பரையினருக்காக அர்ப்பணித்த பிரிவேனாதிபதி மகா சங்கத்தினால் நடத்தப்பட்ட மாநாட்டில் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய பிரிவென் கொள்கையை நான் தயாரிப்பேன்.
- இதன்படி பிரிவெனாக்களை அபிவிருத்தி செய்வதற்கென சபை ஒன்றையும் அதன் அபிவிருத்திகளுக்காக நிதியம் ஒன்றையும் நிறுவுவேன்.
- பிரிவெனாக்களில் மற்றும் உயர்கல்வி பெறும் இளம் பிக்குமார்களுக்காக மாதாந்தம் 2,500 ரூபாவை சமய நெறியைக் காக்கும் மாணவர்கள் நிதியாக பெற்றுக் கொடுப்பேன். இதற்காக மகாபொல நிதியத்துக்கு சமமான ஒரு தொகை வழங்கப்படும்.

## விண்ணையும் கடலையும் வெற்றிகொள்ளும் உத்தம பரம்பரை

பாரம்பரிய மேலைத்தேய முறையிலான பல்கலைக்கழக கல்வியிலேயே எமது பல்கலைக்கழக கல்வி முறைமையிலேயே பெரும்பாலானோர் கற்றுத் தேறியுள்ளனர் என்பதை நான் அறிவேன். இன்று எமது நாடு பெற்றுள்ள அபிவிருத்தி அதனால் வெவ்வேறு துறைகளில் ஏற்பட்டிருக்கும் பட்டதாரிகளின் பற்றாக்குறை, துறைசார் தொழில் நிபுணர்களின் குறைபாடு என்பன நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்கொடுத்துள்ள பிரதான பிரச்சினையாகும். அதன் காரணத்தினால் எமது நாட்டின் அபிவிருத்தியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கென அவ்வாறான புத்தி ஜீவிகளை இந்நாட்டிலேயே உருவாக்குவதற்காக பல்கலைக்கழக கல்வி முறைமையில் விரிவான கல்வி முறையை ஏற்படுத்துவதற்கான யோசனையை நான் முன்வைக்கின்றேன்.

- இந்நோக்கத்தின் கீழ் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களை விரிவுபடுத்தி 2020 ஆகும் போது வருடம் ஒன்றுக்கு 1,00,000 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவைப் பெற நடவடிக்கை எடுப்பேன்.
- உயர்தரத்தில் சித்தி அடைந்த சகல மாணவர்களுக்கும் உயர் கல்வி வாய்ப்பு கிடைக்கப்பெறும் வகையில் அரசாங்க பல்கலைக்கழக கல்லூரி முறைமையை நாட்டில் ஸ்தாபிப்பேன்.
- பகிடிவதையை கடந்த காலத்தோடு மாத்திரம் வரையறுத்து மாணவர்கள் சுதந்திரமாக கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைப் பாதுகாப்பேன்.
- பல்கலைக்கழக நுழைவைப் பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் விடுதி வசதி, புலமைப்பரிசில் அல்லது நிதி உதவியை பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துவேன்.
- தெரிவு செய்யப்பட்ட 7 பல்கலைக்கழகங்களை ஆசியாவில் முன்னணியில் உள்ள 20 பல்கலைக்கழகங்களினுள் கொண்டுவருவதற்கு தேவையான வேலைத் திட்டம் ஒன்றை தயாரிப்பேன்.
- பல்கலைக்கழக சேவைக்காக தனியான சேவை யாப்பு ஒன்றை ஏற்படுத்துவேன்.
- பல்கலைக்கழக கிராம முறைமையின் ஊடாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளர் பல்கலைக்கழகம் காணப்படும் பிரதேசத்தில் உள்ள இல்லத்தில் வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேசிய அபிவிருத்திக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் நேரடிப் பங்காளிப்பை பெற்றுக் கொள்வதற்காக அவர்களது ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குரிய பாராட்டுக்களை அங்குள்ள விரிவுரையாளர்களால் பெற்றுக் கொடுப்பேன்.

- தேசிய பட்டப் பின் படிப்பு பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து புதிதாக சேவையில் சேர்கின்ற விரிவுரையாளர்களுக்கு சர்வதேச கௌரவத்துடன் கூடிய பட்டத்தை பெறுவதற்காக வாய்ப்பை பெற்றுக் கொடுப்பேன்.

## உத்தம ஆசிரியப் பரம்பரைக்கு

- இலங்கை ஆசிரியர் சேவை யாப்பை 2015ல் நடைமுறைப்படுத்துவேன். அதன்மூலம் ஆசிரியர்களுக்குரிய பதவி உயர்வு மற்றும் சம்பள அதிகரிப்பு போன்றன தொடர்பாக இற்றைவரையும் நிலவிவரும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன்.

- தொழிநுட்ப பாடத்தை கற்பிப்பதற்காக தேசிய கல்வி பீடம் ஒன்றை தாமதம் இன்றி ஆரம்பித்து அதனூடாக 2,000 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பேன்.

- சகல ஆசிரியர்களுக்கும் குறைந்த விலையில் மடிக்கணினியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

- சகல ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் கைநூல்களை தொடர்பாடல் தொழிநுட்பத்தின் மூலம் இலகுவாக பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

- ஜப்பான், மலேசியா, கொரியா போன்ற நாடுகளில் பயிற்சி பெறுவதற்காக வருடாந்தம் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் புலமைப்பரிசில்களை வழங்குவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 நோயற்ற வாழ்வு குறையற்ற செல்வம்

சௌபாக்கியத்தின் அடிப்படையே நோயற்ற சமூகம். 2006ஆம் ஆண்டிலிருந்து சுகாதாரத்துறைக்கு அரசாங்கம் பெருந்தொகையான முதலீடுகளைச் செய்துள்ளது. இதனால் கிராமிய பிரதேசங்களில்கூட சுகாதார சேவை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று எஞ்சிய 6 வருடங்களுக்குள் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு ஈடான சுகாதார சேவையொன்றை உங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நான் கட்டுப்பட்டுள்ளேன்.

- வைத்தியசாலைகளை நோக்கிவரும் மக்களுக்குப் பதிலாக வைத்தியசாலைகளில் தங்கியிருக்க அவசியமில்லாத ஒரு மக்களை உருவாக்குவதன் மூலம் 2020ஆம் ஆண்டாகும் போது பிறக்கும்போதே ஆயுட்காலம் 80 வயதுவரை கொண்டு செல்வதற்குத் தேவையான வசதிகளை வழங்கக் கூடிய சுகாதார சேவை கட்டமைப்பை நான் ஏற்படுத்துவேன்.

- 2020ஆம் ஆண்டாகும் போது தாய் சேய் மரணங்கள் அற்ற ஒரு நாடாக இலங்கையை மாற்றியமைப்பேன் என்பதை பெருமையுடன் தெரிவிக்கிறேன்.

- திவிநெகும திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு 9 மாதங்கள்வரை நாங்கள் இப்போது வழங்கிக்கொண்டிருக்கும் சத்துணவுப் பொதியின் பெறுமதி சுமார் 40000 ரூபா ஆகும். இந்தப் பெறுமதியின் 50 வீதத்தை பணமாகக் கொடுப்பதாயின் அரசுக்கு இலாபமாக இருக்கும். என்றாலும் எமது நாட்டில் உள்ள தாய்மாருக்கும் பிறக்கவிருக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்புத் தேவையையே நான் பெறுமதியாகக் கருதுகிறேன். எனவே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுத் திட்டமொன்றும் புதிதாகப் பிறக்கவிருக்கும் குழந்தைகளுக்கு ஒரு வருடம் வரை பெற்றுக்கொடுக்கப்படும் சத்துணவு வேலைத்திட்டமும் மென்மேலும் பலப்படுத்தப்படும்.

- பெண்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளைக்போல சிறந்த சுகாதார சேவையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான வைத்தியர்களுக்கு விசேட பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக விசேட மூன்று வருட பயிற்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பேன்.

- மேற்படி புதிய அறிவை பயன்படுத்துவதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை தகுந்த செயற்றிட்டத்தின் ஊடாக கிராமிய வைத்தியசாலைகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- திருமணத்திற்கு ஆயத்தமாகும் தினம் முதல் சகல பெண்களுக்கும் ஆரோக்கியமான குழந்தைப் பேறுக்காகவும், கர்ப்பிணித் தாய்மார்களின் மரணவீதம் ஏற்படாதளவுக்கும் எவ்வாறு அவர்கள் முகங்கொடுக்க வேண்டும் என்பது தொடர்பாக அறிவூட்டுவதற்கு ஏற்ற வகையில் பட்டம் பெற்ற சேவையை சரிவர செய்யக் கூடிய சகல அறிவையும் கொண்ட குடும்ப சுகாதார சேவையை விரிவுபடுத்தி பலப்படுத்துவேன்.

- சகல பிரதேசங்களிலும் ஒவ்வொரு குழந்தைகள் வைத்தியசாலைகளை நிறுவுவேன். இதன்கீழ் பிறந்து மூன்று மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மனோ ரீதியான குறைபாடுகள் மற்றும் செவிட்டுத்தன்மை போன்ற 30 நோய்கள் அடையாளம் காணப்படுவதற்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் தற்போது செய்யப்பட்டுள்ள ஆய்வு முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வளங்கள் மற்றும் உபகரணங்களை மேற்படி குழந்தைகள் வைத்தியசாலைக்கு வழங்குவேன்.

- புற்றுநோய், சிறுநீரகநோய் மற்றும் டெங்கு போன்ற விசேட நோய்கள் தொடர்பாக சிறப்பான ஒரு பிரிவுடன் கூடிய வைத்தியசாலைக் கட்டமைப்பொன்றை சகல பிரதேசங்களிலுமுள்ள போதனா வைத்தியசாலைகளை மாற்றியமைப்பேன்.

- மலேரியா, விசர்நாய்கடி, கூவக்கட்டு, றுபெல்லா, குஷ்டம், காசநோய் மற்றும் ஆணைக்கால் நோய் போன்ற 7 நோய்களையும் இந்த மண்ணிலிருந்து முற்றாக இல்லாதொழிப்பதற்கு சுகாதார





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பை விருத்திசெய்வதற்காக விசேட கவனத்தைச் செலுத்துவேன்.

- டெங்கு நோயை முழுமையாக இல்லாதொழிப்பதற்குத் தேவையான தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.
- இதற்கு முன்னர் இருந்த சுகாதார அமைச்சருக்குக் கூட தமது கணினிக்குள்ளிருந்து பாதுகாக்க முடியாது போன தேசிய ஔடதக் கொள்கை மற்றும் சட்டத்தை சேனக்கபிபிலே கொள்கைக்கு ஏற்றாற்போல மீண்டும் மீளாய்வு செய்து விரைவில் அனுமதியைப் பெறுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.
- அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சிறுநீரக நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டு தங்கியிருக்கும் நோயாளிகளின் உறவினர்களுக்கும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சகல வசதிகளுடன் கூடிய நிவாரண இல்லமொன்று ஏற்படுத்தப்படும்.
- சகல சிறுநீரக நோயாளர்களுக்கும் மாதாந்தம் 3000 ரூபா சிகிச்சை நிவாரணக் கொடுப்பனவாக வழங்கப்படும்.
- கண்டி, யாழ்ப்பாணம், பதுளை, அம்பாறை, கராப்பிட்டிய, இரத்தினபுரி மற்றும் குருணாகல் போன்ற வைத்தியசாலைகளில் நவீன வசதிகளைக் கொண்ட முழுமையான புற்றுநோய் தடுப்பு பிரிவொன்றை ஏற்படுத்துவேன்.
- நோயாளர்களுக்காகவும் அவர்களது வேதனை மிக்க மனோநிலையையும் கருத்தில் கொண்டு அந்த நோயாளர்களின் உறவினர்கள் வந்து தங்குவதற்காக மேற்கூறப்பட்ட வைத்தியசாலைகளிலும், மஹரகம வைத்தியசாலையிலும் நிவாரண இல்லங்களை அமைப்பேன்.
- நவீன வைத்திய வசதிகளைக் கொண்ட பக்கவாத நோய் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை நிலையம் என்பவற்றை 9 மாகாணங்களிலும் நிறுவப்படும். இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மேலைத்தேய மற்றும் சுதோச வைத்தியமுறையை ஒன்றிணைத்த சிகிச்சை முறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்துவதற்கு ஆய்வுகள் மற்றும் முன்னோடித் திட்டங்களை முன்வைப்பேன்.

- சகல கிராம அலுவலகர்கள் பிரிவுக்கும் ஒன்று வீதம் கிராமங்களிலுள்ள வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்டு சமூக சுகாதார மத்திய நிலையமொன்றை ஏற்படுத்துவேன்.

- வைத்திய பட்டதாரிகளுக்கு பட்டம் பெற்றதன் பின்னர் பட்டப்பின்படிப்பு அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக பேராதனை, யாழ்ப்பாணம் மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்களில் புதிய நிபுணத்து பயிற்சியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

- துரித பதவியுயர்வுகள் விசேட கொடுப்பனவு கஷ்டப்பிரதேசங்களில் வேலைசெய்யும் வைத்தியர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- தாதியர் மற்றும் சுகாதார சேவை பட்டதாரிகளுக்காக பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவதற்கான வேலைத்திட்டம் மென்மேலும் விரிவுபடுத்தப்பட்டு அவர்களுக்காக பட்டப்பின்படிப்பு சேவையொன்றைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பேன்.

## எமது சுதேச வைத்தியத்துறையின் மீள் எழுச்சி

சுதேச வைத்திய பரம்பரையினர் இன்றும் உலகத்தை ஆச்சர்யத்தில் ஆற்றும் விதத்தில் சிகிச்சை முறையில் ஈடுபடுகின்றனர். இன்று முழு உலகமுமே சுதேச வைத்தியத்துறை தொடர்பாக தனது கனவத்தை செலுத்தி வருகிறது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் எமது சுதேச வைத்தியத்துறையை உலகளவில் காண்பிப்பதற்கான காலம் உதயமாகியுள்ளது.

- வெளிவாரிப் பயிற்சியை முடித்துக்கொண்ட சகல சுதேச வைத்தியர்களும் சுதேச வைத்திய சேவையாளர்களையும் இணைத்துக்கொள்வேன். சுதேச வைத்திய சிகிச்சை முறை மற்றும் சுதேச மருந்துகள் தொடர்பான ஆய்வு போன்றவற்றை விரிவுபடுத்துவது தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள தேசிய ஆய்வு நிலையம் உயர்தரத்தில் மேம்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தற்போது நடைமுறையிலுள்ள சுதேச வைத்திய சமூக சுகாதார சேவை தரமானதாகவும் போதுமானதாகவும் அபிவிருத்தி செய்வது தொடர்பாக சுதேச வைத்திய அறிவுக் கட்டமைப்புக்கு ஏற்றவாறு அடிமட்டத்திலிருந்து ஆய்வு வேலைகளுக்காக தலைமைத்துவம் பெற்றுக்கொடுப்பதற்காக பிரதேச செயலக மட்டத்தில் சுதேச வைத்தியர்கள் மூவரைக் கொண்ட குழு நியமிக்கப்படும். இதற்காக படிப்படியாக பட்டம் பெற்ற சுதேச வைத்தியர்கள் ஆயிரம் பேர் வரை சேர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்குவேன்.

- வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக தரமான இலகுவாக உபயோகிக்கக் கூடிய சுதேச மருந்து வகைகளை பாரியளவிலான மற்றும் நடுத்தர மட்டத்தில் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்காக குறைந்த வட்டிவீதத்தில் சுமார் 5 மில்லியன் வரை உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.

- சுதேச வைத்திய முறையை விரும்பும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டினருக்கு ஏற்ற நவீன வசதிகளைக் கொண்ட தனியார் வைத்தியசாலைகளை உருவாக்க விரும்பும் சுதேச வைத்தியர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்காக மேலைத்தேய வைத்திய நிலையங்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும் சகல வரி நிவாரணங்களையும் பெற்றுக்கொடுப்பேன்.

- பாரம்பரிய சுதேச வைத்தியர்களின் ஓய்வு காலத்தை பாதுகாக்கும் நோக்குடன் நிரந்தரமான ஓய்வூதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- பாரம்பரிய சுதேச வைத்தியர்களாக கிராம மட்டத்தில் சேவைசெய்கின்ற வைத்தியர்களுக்கு மேலதிக கல்வி மற்றும் பதிவுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வசதியான முறையொன்றை அறிமுகம் செய்வேன்.

- அரச சேவைக்குள் மேலைத்தேய வைத்தியர்கள் மற்றும் சுதேச வைத்தியர்களிடையே சலுகைகளிலுள்ள ஏற்றத்தாழ்வை களைவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெருந்தோட்டப் பகுதி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் ஒரு ஆயர்வேத வைத்தியசாலை வீதம் அமைப்பேன்.

## பெருந்தோட்டத்துறையின் ஆரோக்கியம்

- குறைந்த வயதில் திருமணம் முடித்தல் மற்றும் கருவுற்றல், போசாக்கின்மை என்பன தொடர்ந்தும் பெருந்தோட்டத்துறையின் அடிப்படை சுகாதார பிரச்சினை என்பதை நான் அறிவேன். எனவே இதனை முழுமையாகத் தடுப்பதற்காக தமிழ் பேசும் பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் 500 பேரை புதிதாக சேர்த்துக்கொள்வேன்.

- இந்த மக்களின் சுகாதார பிரச்சினைகளை நன்கு அறிந்து அவர்களுக்குரிய உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான விசேட பயிற்சிகளை அந்தந்த பகுதிகளில் கடமையாற்றும் சமூக சுகாதார அதிகாரிகளுக்கும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

- பெருந்தோட்டப் பகுதி வைத்தியசாலைகளுக்குத் தேவையான அம்பியூலன்ஸ் வண்டிகள், நவீன வைத்திய உபகரணங்கள், மருந்து வகைகள் போன்றவற்றை தேவையான அளவு பெற்றுக்கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 நீண்ட ஆயுளைத் தரும் விளையாட்டு

நீண்ட ஆயுளன் கூடிய எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்காக இதுவரை இளம் பராயத்தினருக்கு மட்டுமே என எண்ணிக்கொண்டிருந்த விளையாட்டு இன்று சகலருக்கும் அவசியமான ஒன்றாக கவரக்கூடிய விதத்தில் அதனை மேம்படுத்துவதன் மூலம் சிறந்த எதிர்கால முதலீடு என நான் நம்புகிறேன்.

- ஆசியாவில் விளையாட்டை முதன்மைப்படுத்திய நாடாக எம்மை ஆக்கிக் கொள்வதை இலக்காகக் கொண்டு பதக்கங்களை வெற்றியீட்டக் கூடிய 6 துறைகளை பிரதானமாகக் கொண்ட 46 விளையாட்டு பிரிவுகளின் கீழ் குறுகிய மத்திய மற்றும் நீண்டகால அபிவிருத்தி வேலைத்திட்டத்துடன் தேசிய விளையாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவேன்.

- சகல பிள்ளைகளுக்கும் விளையாட்டு கட்டாயமாக்கப்படுவதுடன் சகலரையும் கவரக்கூடிய பாடமாக அதனை ஆக்குவதுடன் விளையாட்டுத் திடல் ஒன்று இல்லாத சகல பாடசாலைகளுக்கும் தரமான விளையாட்டுத் திடல் ஒன்றைப் பெற்றுக்கொடுப்பேன்.

- சர்வதேச தரத்தில் விளையாட்டு பாடசாலையொன்றை ஆரம்பிப்பதுடன் 2005ல் களனி பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டு பட்டப்படிப்பு கற்கை முறையை மேம்படுத்துவதுடன் விளையாட்டுத் துறைக்காக தனியானதொரு கற்கைப் பிரிவொன்றையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பேன்.

- தேசிய ரீதியில் சாதனைகளைப் படைத்து சர்வதேச மட்டத்துக்குச் சென்றுள்ள சகல விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு மாதாந்தம் 25,000 ரூபாவை கொடுப்பனவாக வழங்குவேன்.

- பிரதேச செயலகங்கள் தோறும் நியமிக்கப்பட்டிருக்கும் விளையாட்டு அதிகாரிகளின் சேவையை சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்காக நிவாரண விலையில் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறைந்த வசதிகளைக் கொண்ட சகல விளையாட்டரங்குகளும் நவீனமயப்படுத்தப்படுவதுடன் சகல மாவட்டங்களுக்கும் உள்ளக விளையாட்டரங்கும் நீச்சல் தடாகமொன்றும் கூடிய முழுமையான விளையாட்டரங்கைப் பெற்றுக்கொடுப்பேன்.

- தேசிய பயிற்சியாளர்களுக்கு விளையாட்டுத்துறை சார் மருத்துவம், விளையாட்டு தொழில்நுட்பம், விளையாட்டு முகாமைத்துவம் தொடர்பாக உயர் அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்காக வெளிநாட்டு பயிற்றுவிப்பாளர்களின், வெளிநாட்டு விளையாட்டு பயிற்றுவிப்பு நிலையங்களின் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வாய்புக்களைப் ஏற்படுத்திக்கொடுப்பதுடன், தான் சார்ந்த விளையாட்டுத் துறைக்கு ஏற்றால்போல உயர்கல்வி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- விளையாட்டுத் துறையை இலக்காகக் கொண்ட ஒழுக்கநெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

- விளையாட்டு உபகரணங்கள் விளையாட்டுத் துறையுடன் கூடிய உடைகளைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக அவர்களுக்காக அரச அனுசரணையைப் பெற்றுக்கொடுப்பேன்.

- பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 331 உடற்பயிற்சி நிலையங்களை ஆரம்பிப்பதற்கும் நகர மற்றும் நகர்சார்ந்த பிரதேசங்களிலும் அரச சேவையாளர்களுக்காக உடற்பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பூப்பந்து, டெனிஸ், கரப்பந்து மற்றும் உதைபந்து விளையாட்டுகளுக்கான வசதிகள் செய்துகொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 பெண்களுக்கு வளமான எதிர்காலம்

எமது நாகரீகம் தொடர்வதற்கும் வரலாற்று ரீதியாக அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் உறுதுணையாக இருந்தது யசோதரா தேவியின் முன்னுதாரணத்துடன் கூடிய உத்தம பெண்கள் பரம்பரையே என நான் திடமாக நம்புகிறேன். பிள்ளைகள் பிறந்த நாள் முதல் நித்திரையின்றி அந்தக் குழந்தைகள் நோய்வாய் படாமல் பாதுகாத்து, விளை நிலங்களிலும் வயல் வெளிகளிலும் வேலைசெய்து பெருந்தோட்டப் பகுதியில் தேயிலை கொழுந்து பறித்தும், ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளில், மத்திய கிழக்கு நாடுகளில் சேவைசெய்துவரும் தமிழ், முஸ்லிம், சிங்கள, பறங்கியர், மலோ இனங்களைச் சேர்ந்த உத்தம பெண்கள் சமூகத்தினாலேயே மனிதத்துவமும் எமது நாகரீகமும் பாதுகாக்கப்படுகிறது. யசோதரா தேவியின் பரம்பரையில் உதித்த தாய்மார் இல்லையானால் எமது தாய்நாட்டைக் காக்கக்கூடிய மனத்திடம் உள்ள படையினர் கிடைத்திருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

- விறகுக்காக, தண்ணீருக்காக, சமயல் வேலைகளுக்காக செலவு செய்த தமது நேரத்தை பணமாக மாற்றும் விதத்தில் மனைப் பொருளாதார வேலைத்திட்டமொன்றை அடிமட்டத்தில் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். யுத்தத்தின் பிரதிபலனாக இந்த நன்மையை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்வேன்.

- மகளிர் தொழில்முயற்சியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேச வங்கிகளின் ஊடாக வருடாந்தம் 50,000 பெண்கள் தங்களது தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக குறைந்த வட்டியில் கடன் பெற்றுக்கொடுப்பேன்.

- இளம் தாய்மார் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிள்ளை பராமரிப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான முதலீடுகளை தகுந்த பயிற்சிகளையும் அறிவுகளையும் பெற்றுக்கொடுப்பேன்.

- சகல முதலீட்டு வலயங்களிலும் பெண்களுக்கான ஆலோசனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நிலையங்கள் வீதம் ஆரம்பிக்கப்பட்டு அவற்றின் ஊடாக அந்த வலயங்களில் சேவை செய்யும் பெண்களுக்குத் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் பாதுகாப்பைப் பெற்றுக்கொடுப்பேன்.

- பயிற்றப்பட்ட பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதை நிறுத்தி பயிற்றப்பட்ட ஆண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதற்கு ஊக்குவிப்பதன் ஊடாக பெண்கள் வெளிநாடு செல்வதால் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகளை இல்லாதொழிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 இளைஞர் சக்தியால் நிறைந்த நாடு

ஒரு காலத்தில் இந்த நாட்டிலே இளைஞர்கள் முழுமையாக கைவிடப்பட்டிருந்தார்கள். இதன் பலனாக அவர்கள் வன்முறை அரசியலில் ஈடுபட்டதால் லட்சக்கணக்கானோர் மரணமடைந்தனர். அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள், இன்னும் அந்த கவலையில் இருப்பதை நான் அறிவேன்.

2005ம் ஆண்டிலிருந்து தமக்கு எதிர்காலம் ஒன்று வேண்டுமென்று இருபது இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர் பரம்பரை ஒன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அமைப்பான நீலப்படையணியில் சேர்ந்திருப்பது அந்த இருண்ட கடந்த காலத்தை விரும்பாததன் காரணத்தால்தான் என்பதை நான் அறிவேன். அந்த இளம் பரம்பரைக்கு தேசிய அபிமானத்தின் மனதில் நினைத்துக்கொண்டு மன நிறைவு மிக்கதாக எழுப்பக்கூடிய நாடொன்றை நான் உங்களுக்கு உரிமையாக்கிக் கொடுப்பேன்.

## ஆற்றல் மற்றும் தொழில்

- பாடசாலைக்கு வருடாந்தம் பிரவேசிக்கின்ற பிள்ளைகளின் 3,40,000 பேர்களுக்குள் நுழைவதற்காக தகைமை பெறுவோர் 25,000 பேர் மட்டுமே ஆகும். மூன்று இலட்சத்துக்கும் அதிமான எஞ்சிய பிள்ளைகளின் எதிர்காலத்தை தந்தை அல்லது தாய் போன்று பாரமெடுப்பேன். தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஊடாக பட்டதாரி ஆகும் வரை கல்வியின் ஏணி ஒன்றை அவர்களுக்கு அமைத்துக்கொடுப்பேன்.
- அதற்கமைய அரச சார்பில்லாத பிரிவுகளுடன் இணைந்து வருடத்திற்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பிள்ளைகளுக்கு தொழிற் கல்வி பெற்றுக்கொடுப்பதற்காக தேசிய வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவேன்.
- ஏதாவதொரு பொருளாதார பிரச்சினைக்குட்பட்டு கல்வியுடன் போராடுகின்ற பிள்ளைகளுக்காக இளைஞர் அபிவிருத்தி நிதியத்தை அமைப்பதற்காக நிர்மாணிப்பு அபிவிருத்தி நிதியத்தை வலுப்படுத்துவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தற்போது மத்திய கிழக்கு வலயத்தை கேந்திரமாக கொண்டு உள்ள வெளிநாட்டு தொழில் சந்தை வாய்ப்பை ஐரோப்பா வட அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பரப்புவதற்கு 20 விசேட கல்வி நிலையங்களை நிபுணத்துவ அபிவிருத்தி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி அமைச்சினூடாக அமைப்பேன்.

- தற்போது சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டிருக்கின்ற மேசன்மார், தச்சன்மார் ஒப்பனைக் கலைஞர்கள் போன்ற முறையான துறகளுக்கு கைத்தொழில் துறையில் தொழில் வான்மையை பெற்றுக்கொடுப்பதற்காக முன்கூட்டிய அறிவை வழங்கும் முறை இலங்கை தகைமை கட்டமைப்புக்குள் நிறுவி தொழில் கல்வியை வெற்றியை நோக்கி கொண்டு செல்வேன்.

- கோடிக்கணக்கான ரூபாய்களை செலவளித்து வெளிநாட்டு கல்விக்காக போகின்ற ஆயிரக்கணக்கான இலங்கையைச் சேர்ந்த புத்திரிகளுக்கும், புத்திரர்களுக்கும் இலங்கைக்குள்ளேயே சர்வதேச பட்டங்களை பெற்றுக்கொள்வதற்காக தெற்காசியாவில் முதலாவது பசுமை பல்கலைக்கழகமாகிய என்.எஸ்.பி.எம். பல்கலைக்கழகத்தை மிகவும் விரிவுபடுத்தி உலகின் கௌரவ பல்கலைக்கழகத்துடன் இணைப்பேன்.

- 2005ல் நான் பதவிக்கு வந்தபோது ஐந்து வீதம் கணனி மயம் இன்று 42 வீதம் வரை உயர்ந்திருக்கிறது. ரத்துக்கல ஆகிய ஆதிவாசிகளுக்கும் தகவல் தொழில்நுட்ப கூடமொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். 2020ல் கணனி தொழில்நுட்பத்தை நூற்றுக்கு தொன்னூறு வீதம் அதிகரிப்பதற்கு நான் திட்டமிட்டுள்ளேன். அதேபோன்று அதன் உயர்ந்த தொழில்நுட்பத்தை நகரத்திற்கு மாத்திரம் வரையறுக்காமல் இளைஞர் சமுதாயத்தை முன்னிலைப்படுத்தி அனைத்துப் பிரஜைகளுக்கும் உரிமையாக சுதந்திரமாக இணையத்தளத்தை கையாள்வதற்கு அவகாசத்தைப் பெற்றுக்கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்குள் பௌதீகம் சம்பந்தமின்றி பறவியிருக்கின்ற அலைவரிசைகள் ஊடாக இணையத்தளத்திற்குள் நுழைவதற்கு முழு நாட்டையும் கொரியாவைப் போன்று ஒட் ஸ்போட்டாக மாற்றுவதே எனது நோக்கமாகும்.

- இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தை இலங்கையின் அரசியல் அமைப்பின் விசேடமாகா முன்மாதிரியான நிர்வணமாக கட்டியெழுப்புவதற்கு அதற்கு தேவையான வரவேற்பையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுப்பேன்.

## இளைஞர்களுக்கு ஐந்து இலட்சம் தொழில் வாய்ப்புகள்

- அரச சேவையை விரிவுபடுத்தல் அரச கைத்தொழில் துறையை விரிவுபடுத்தல் வங்கித்துறை, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை ஊடாக எதிர்வரும் ஐந்து வருடங்களுள் இளைஞர்களுக்கு ஐந்து இலட்சம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பேன்.

- தொழில் வெற்றிடங்கள் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளை இனம் கண்டு வேலை வாய்ப்புகளை எதிர்பார்த்திருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவாக "உரிய பிரதேச செயலாளர் அலுவலகங்களில் தொழில் வங்கி" அமைப்பேன்.

- உயர் தரத்தில் உயிரியல் விஞ்ஞானப்பாடத்தில் ஈடுபட்டுள்ள 15,000 இளைஞர், யுவதிகளுக்கு மனோ தத்துவம் தொடர்பாக முதலுதவி சேவை சுகாதார முன்னேற்றம், நோய் நிவாரணம் தொடர்பாக உரிய பயிற்சியை பெற்றுக்கொடுப்பதன் மூலம் "சமூக சுகாதார உதவியாளர்" பதவிகள் பெற்றுக்கொடுப்பேன்.

## இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு கைகொடுத்தல்

- இளம் தொழில் முயற்சியாளர்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக தொழில்நுட்ப அபிவிருத்தி சபையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு "இளம் தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி சபையொன்றை" அமைப்பேன்.

- 18 – 32 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களுக்காக இளைஞர்களுக்கே வரையறுக்கப்பட்ட "இளைஞர் வங்கி முறையொன்றை ஆரம்பிப்பேன். அதன் கீழ் தொழில் முயற்சியாளர்களின் கல்விக்கு மற்றும் தொழில் பயிற்சி துறையில் ஊக்கப்படுத்துவதற்காக பத்த இலட்சம் ரூபா வரை குறைந்த வட்டிக்கு கடன் வசதிகளை பெற்றுக்கொடுப்பேன்.

- இறக்குமதி செய்யப்படுகின்ற உற்பத்திகள் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட விரும்புகின்ற நீண்டகால வரிமுறையின் கீழ் காணிகளை பெற்றுக்கொடுத்து 15,000 மத்திய தர தொழில் முயற்சியாளர்களை தோற்றுவிக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன். அதன் கீழ் விவசாய சுற்றுலாத்துறைக்கு இணையாக முதலீடுகளை செய்வதற்கு ஊக்கப்படுத்துவேன்.

- அதற்காக தேவைப்படுகின்ற இருபத்தைந்து இலட்சம் கடன் தொகையை மூன்று வருட காலம் செலுத்தாத குறைந்த வட்டிக்கு பெற்றுக்கொடுப்பேன். அது தொடர்பாக தேவையான அறிவையும் பயிற்சியையும் மற்றும் தொடர்பையும் அரச பங்களிப்புடன் பெற்றுக்கொடுப்பேன்.

- கிராமிய உற்பத்திகளை சேர்த்து அனுப்புவதற்கு மற்றும் பகிர்ந்தளிப்பதற்காக அனைத்து கிராமங்களிலும் ஒரு இளம் வழங்குனரை அமைப்பதற்காக சிறிய அளவான லொறி ஒன்றை வாங்குவற்கு குறைந்த வட்டிக்கு இளைஞர் வங்கி ஊடாக பெற்றுக்கொடுப்பேன். அவர்களது பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அந்த பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களை மற்றும் ஆஸ்பத்திரி போன்ற நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு ஒப்பந்தங்களை பெற்றுக்கொடுக்கும் முறை ஒன்றை தயாரிப்பேன்.

- பால் உற்பத்தித்துறைக்கு முறையான தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு இளம் முயற்சியாளர்களுக்கு அனுசரணை பெற்றுக்கொடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொருள் உற்பத்தி ஒருங்கிணைப்பது மற்றும் மதிப்பை சேர்த்தல் கைத்தொழில் துறையை தேர்ந்தெடுக்கின்ற இளம் முயற்சியாளர்களுக்கு இளைஞர் விவகார அமைச்சில் பதிவு செய்து அவர்களது உற்பத்தியை அரச நிறுவனங்களுக்காக கொள்வனவு செய்யும் முறையொன்றை தயாரிப்பேன்.

- களிமண், பித்தளை, ஆபரணம் உட்பட கைப்பணித்தொழிற்துறையில் தேவைகளுக்கு பொருத்தமான புதிய நிர்மாணிப்புகளுக்கு மதிப்பை சேர்ப்பதன் ஊடாக சந்தையில் உற்பத்திகளை கொண்டு செல்வதற்கு இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான நூதன முறைகளை நவீன தொழில்நுட்பங்களையும் மற்றும் ஏனைய வசதிகளையும் பெற்றுக்கொடுப்பேன்.

- புதிய நிர்மாணங்களை சுற்றுலாத்துறை வளர்சியூடாக இளம் முயற்சியாளர்களுக்கு சுற்றுலா தொழிற்துறையில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவேன். விசேடமாக விவசாய சுற்றுலா கைத்தொழில் துறைக்குள் சிறிய மற்றும் மத்திய அளவிலான முதலீடுகளை செய்வதற்காக இளைஞர்களை ஊக்கப்படுத்துவேன்.

- இசைத்துறையில் ஈடுபட்டுள்ள இளம் கலைஞர்கள், சினிமா கலைஞர்கள் மற்றும் மேடை நாடக தயாரிப்பாளர்களுக்காக புதிய படைப்புக்களை வெளியிடுவதற்கு இளைஞர் வங்கியூடாக ஒரு மில்லியன் ரூபா வரையிலான கடன் பெற்றுக்கொடுப்பேன். அதேபோன்று அவர்களுக்கு மாகாண சபையிலுள்ள நிர்வணங்கள் மற்றும் அரச சார்பான அரங்கங்களை நிவாரண விலைக்கு பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுப்பேன்.

- இளம் சினிமா கலைஞர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக புதிய சினிமா கண்காட்சி சபை ஒன்றை நிறுவுவேன்.

- தகவல் தொழில்நுட்ப நகரம் ஒன்றை முல்லைத்தீவில் அமைப்பதன் ஊடாக வடக்கு இளைஞர்களின் தொழில்நுட்ப அறிவை முன்னேற்றுவதுடன் இளம் முயற்சியாளர்கள் சங்கங்களின் வேண்டுகளுக்கமைய வேறு பிரதேசங்களில் அவ்வாறான நகரங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள்ளூர் உணவு உற்பத்திக்கொள்கையை நடவடிக்கை எடுப்பதன் ஊடாக புதிய உணவு சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும் அந்தவாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கும் அந்த வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு இளைஞர், யுவதிகளை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். அனைத்த பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களில் உணவு வழங்கள் ஒப்பந்தங்களை சிறிய அளவில் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக சட்டதிட்டங்களையும் முறைகளையும் அறிமுகப்படுத்துவேன்.
- திறந்த பொருளாதாரம் மூலம் கைவிடப்பட்ட இளைஞர்களின் அநேகமானவை நிறுத்தப்பட்டது போதைப்பொருளுக்கு அடிமையானதாலாகும். அவ்வாறான இளைஞர்களுக்கு புனருத்தாபனம் அளிப்பதற்காக சமய நிலையங்களை கேந்திரமாகக் கொண்டு கல்வி மற்றும் ஆலோசனை நிலையங்களை நிறுவுவேன்.
- சிறுவர் குற்றவாளிகளாக சிறை தண்டனை பெற்று நீண்டகாலமக இருக்கின்ற இளைஞர்களை சமூகத்திற்கு வைராக்கியம் செலுத்துகின்ற குழுவாக சமூகத்திலிருந்து விலக்கி வைப்பதற்காக உரிய ஒழுக்காற்று முறை ஒன்றுடன் புனருத்தாபன நிலையமொன்றை நிறுவுவேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 வசதியான போக்குவரத்து

பொது போக்குவரத்தை தான் எப்போதும் ஒரு பயணியாகவே பார்க்கின்றேன். பயங்கரவாதிகளினால் குண்டு வைக்கப்பட்டு, தண்டவாளங்கள் கழற்றப்பட்ட பின்னர் 30 வருடங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த யாழ் தேவி தனது பயணத்தை மிகவும் பெருமையுடன் ஆரம்பித்தது. நான் அதில் பயணம் செய்தேன். இரு புறமும் குழுமியிருந்த அந்த மக்களின் முகங்களில் நான் மகிழ்ச்சியைக் கண்டேன். அவர்களின் உள்ளங்கள் பூரித்து நின்றதை அவர்களின் முகங்களில் இருந்த மலர்ச்சியின் ஊடாக நான் கண்டேன். சொகுசு வாகனங்களில் பயணம் செய்யும் ஒரு நபரும், சாதாரண பொது போக்குவரத்தில் ஈடுபடும் ஒரு நபரும் சமமான ஒரு சொகுசுப் பயணத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒரு போக்குவரத்து சேவையை நான் உருவாக்குவேன்.

- 2018 ஆகும்போது கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு வசதியாக சென்றுவரக்கூடிய விதத்தில் குளிரூட்டப்பட்ட இலங்கையின் முதலாவது மின்சார ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படும்.
- யாழ்ப்பாணத்தின் நல்லூர் கந்தசாமி கோவில், திருகோணமலை திருக்கோணஸ்வரம் ஆலயம், சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயம் மற்றும் தேவேந்திரமுனை உள்புள்வன் கோவில் போன்ற நாலா புறத்திலுமுள்ள ஆலயங்களுக்குச் சென்று தரிசிப்பதற்கு வசதியாக கதிர்காமம் செல்லும் அந்த ரயில் திருகோணமலை வரை கொண்டு செல்லப்படும்.
- குருநாகலிலிருந்து சிலாபத்துக்கும் மற்றுமொரு ரயில் பாதை அமைக்கப்படும்.
- மட்டக்களப்பிலிருந்து பொத்துவில்வரையும் ரயில் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பேன்.
- கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு உள்ளேயே செல்லக்கூடிய விதத்திலும், மாத்தறையிலிருந்து மத்தள விமான நிலையத்துக்குள் செல்லக் கூடிய விதத்திலும் ரயில் பாதையொன்றை நிறுவுவேன்.
- பாடசாலை மாணவர்களின் வசதிக்காக சிப் சரிய என்ற பெயரில் பாடசாலை ரயில் சேவையொன்றை ஆரம்பிப்பேன். காலை மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல ரயில்களிலும் பாடசாலை மாணவர்களுக்கென தனியானதொரு பெட்டியும் அல்லது இரண்டு பெட்டிகள் தேவைக்கேற்றவாறு ஒதுக்கிக் கொடுப்பேன்.

- எமக்குத் தேவையான சொகுசான பஸ் வண்டிகளை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்காக அந்த தொழில்துறையில் ஈடுபட விரும்பும் தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான காணி, வரி நிவாரணம், முதலீட்டு வசதிகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான நடவடிக்கை எடுப்பேன்.

- பிரதான நகரத்தை அண்டிய பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல், பொது போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தி வேலைக்குச் சென்று வருபவர்களுக்கு மன அழுத்தத்தை அதிகரிக்கச் செய்வதுடன், இந்த நிலைமை நட்புரீதியான ஒரு போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு ஒரு தடையாக இருக்கிறது என்பதை நான் அறிவேன். எனவே நகர் மத்தியில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- இதன் கீழ் கொட்டாஞ்சேனை மட்டக்குளி ஊடாக மாலபேயிலிருந்து களனிக்கும் மொனோ ரயில் சேவையை இன்னும் மூன்று வருடங்களுக்குள் ஆரம்பிப்பேன்.

- மொரட்டுவையிலிருந்து கொழும்புவரையில் பஸ் போக்குவரத்துக்கென தனியான இரண்டு வழித்தடங்களை ஒதுக்குவேன்.

- கொழும்பு கண்டி அதிவேக நெடுஞ்சாலையில் கண்டியில் குகாகொட என்ற பகுதியிலிருந்து தன்கும்புற வரை பிரதான நகரத்தின் நெரிசலில் அகப்படாமல் செல்வதற்கு ஏதுவாக 6.6 கிலோமீற்றர் தூரத்தில் இலங்கையின் முதலாவது சுரங்கப் பாதை 2018ஆம் ஆண்டாகும் போது செய்து முடிப்பேன்.

- வளிமண்டலம் மாசடைவதைக் குறைப்பதற்காக மின்சார மோட்டார் வாகனங்களின் பாவனையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், அவற்றுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய மின் இணைப்பு மத்திய நிலையங்களை நாடு முழுவதிலும் நிறுவ நடவடிக்கை எடுப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொழும்பு கோட்டை, கொட்டாவ அதிவேக நெடுஞ்சாலை சந்தி, கண்டி குருநாகல் மற்றும் அநுராதபுரம் உட்பட 50 நகரங்களின் நவீன போக்குவரத்து கேந்திர முறைமை ஒன்றை ஏற்படுத்துவேன். இதன் மூலம் ரயில் நிலையம் அரச மற்றும் தனியார் பஸ் நிலையம் முச்சக்கர வண்டிகள் நிறுத்தும் இடம் வாடகை வாகனங்கள் நிறுத்தும் இடம், தனியார் வாகனங்கள் நிறுத்தும் இடம் போன்ற அனைத்தும் ஒரே இடத்தின் அமையப்பெறுவதுடன், அலைச்சல் இன்றி மிகவும் இலகுவாக துரிதமான சேவையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

- நவீன கடைத்தொகுதி, உணவகங்கள், பலநோக்கு விற்பனை நிலையங்கள், சிறிய சினிமா அரங்குகள், நீச்சல் தடாகங்கள், சிறுவர் விளையாட்டுத் திடல் போன்றவற்றை உள்ளடக்கிய ஸ்மார்ட் ஆர்க்கேட்டுக்களை அமைப்பேன். இவ்வாறான 50 ஸ்மார்ட் ஆர்க்கேட்டுக்களை கேந்திர நிலையங்களுக்கு அருகில் அமைப்பேன்.

## வீதி விபத்துக்கள் அற்ற நாடு

- ஒருவரின் அகால மரணத்தின் பின்னர் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கு அந்த இழப்பு வேதனை வாழ் நாள் முழுவதும் இருக்கும். அவர்களது குடும்பத்தார் எந்த அளவுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். 2020ஆம் ஆண்டாகும் போது வீதி விபத்து என்பது அபூர்வமாக நடைபெறும் ஒரு சம்பவமாக மாற்றும் ஒரு இலக்கைக் கொண்டிருக்கிறேன்.

- சாரதிகள் வீதி ஒழுங்குகளை சரியான முறையில் கடைப்பிடிப்பதற்கும், ஒழுங்கு விதிகளை சரியாகக் கடைப்பிடித்து நேர்மையான சாரதியென்ற சமூகப்பொறுப்புடன் செயற்படுவதற்கு பயிற்சியளிக்கும் நோக்கில் தேசிய போக்குவரத்து கேந்திர நிலையம் என்ற பெயரில் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- சாரதித் தொழில் சமூகத்தில் ஒரு கீழ்த்தரமான தொழில் என்ற சமூக பார்வையை மாற்றுவதற்கும் அந்தத் தொழிலுக்குத் தேவையான சமூக அந்தஸ்தை மேம்படுத்துவதற்குமான பொறுப்பு அந்த கேந்திர நிலையத்துக்கு வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதுடன், பார ஊர்தி சாரதிகளுக்கு பெரும் கிராக்கி எழுந்துள்ளது. இதன் அடிப்படையில் திடகாத்திரமான பார ஊர்தி சாரதிகளாக இளைஞர்களை இந்தத் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக தொழில்சார் பார ஊர்தி சாரதிகளுக்கான பாடநெறியொன்றை ஆரம்பிப்பேன்.

- அரச அல்லது தனியார்துறை தொழிலுக்காக சாரதிகள் சேர்த்துக்கொள்ளப்படும் போது தேசிய போக்குவரத்து அதிகார சபையின் தரப் பரீட்சைக்குத் தோற்றுதல் கட்டாயமாக்கப்படும்.

- புதிய சாரதிகளினால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காக சர்வதேச தரத்திலான புதிதாக விநியோகிக்கப்படும் சகல சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கும் ஒரு வருடத்தை நன்னடத்தைக் காலமாக உட்படுத்துவேன்.

- வீதி விபத்துகளில் குடும்பத் தலைவர் இறந்துவிடுவதனால் நிர்க்கதியாகி நிற்கும் அந்தக் குடும்பங்களுக்கு, அந்தக் குடும்பத் தலைவரினால் பெறப்பட்ட திரும்பிச் செலுத்த முடியாமல் உள்ள வீட்டுக்கடன், வட்டி என்பவற்றை முற்றாக இரத்துச் செய்வேன். எஞ்சிய பணத்தை புதிய கடனாக அவரது குடும்பத்தில் ஒருவரின் பெயரில் மாற்றுவதற்கு சகல அரச வர்த்தக வங்கிகளுக்கும் உத்தரவிடுவேன்.

- வீதி விபத்துகளினால் நிரந்தரமாக அங்கவீனமாக்கப்பட்ட நிலைக்குச் செல்பவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபாவை கொடுப்பனவாக வழங்குவேன். இந்தக் குடும்பங்களில் கல்வி பயிலும் குழந்தைகள் இருக்குமாயின் அவர்களுக்கு மாணவர் நிதி வழங்கவும் கல்வி அமைச்சுக்கு உத்தரவிடுவேன்.

## அலைச்சலைத் தடுப்போம்

- போக்குவரத்து விதிகளை மீறிய ஒருவருக்கு நீதிமன்றம் செல்வதற்கு வழிவகை செய்வதால் தான் வந்த கடமையைவிட்டு பல மணி நேரங்கள் நீதிமன்றத்துக்கு அலையவேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதையும் நான் அறிவேன். இதனால் குறித்த தண்டப் பணத்தை செலுத்துவதற்கு தமது செல்லிடம் தொலைபேசியைப் குறுஞ்செய்தியொன்றின் மூலம் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துவதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வேன்.

- மரணத்தையோ அல்லது காயத்தையோ ஏற்படுத்தாத வீதி விபத்துக்காக காப்புறுதிப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் நீதி மன்றங்களுக்குச் சென்று அலைச்சல் ஏற்படுவதைத் தடுப்பதற்காக சிறிய வழக்குகளை விசாரிப்பதற்கென சமூக நீதிமன்ற முறைமையொன்றை ஏற்படுத்துவேன். எவராவது சமூக நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதைவிட மேல் நீதிமன்றத்துக்குச் செல்லும் சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொடுப்பேன்.

- வாகனப் பதிவுகள், அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொடுத்தல். சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றுக்காக கொழும்புக்கே வரவேண்டிய தேவை ஏற்படுகிறது என்பதை நான் அறிவேன். நாட்டுக்காக கடமை செய்யும் ஒரு பெறுமதியான நேரத்தை செலவுசெய்தே இவ்வாறு வரவேண்டியுள்ளது என்பதையும் நான் அறிவேன். எனவே மேல் குறிப்பிடப்பட்ட சேவைகளை முதலாவதாக மாவட்ட செயலகங்கள் ஊடாகவும் பின்னர் சகல பிரதேச செயலகங்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்வதற்குமான நிலைமையை உருவாக்குவேன்.

- மாகாண சபைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் உட்பட சகல கொடுப்பனவுகளும் இணையத்தளத்தின் ஊடாக செலுத்துவதற்கான வசதி ஏற்படுத்தக் கூடிய வகையில் போக்குவரத்து அமைச்சின் நடவடிக்கைகள் கணனி மயப்படுத்தப்படும்.

- பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் அரச சேவையாளர்களுக்கு தங்களுக்குரிய ரயில் மற்றும் பஸ் பருவச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக டிப்போக்களுக்கும் ரயில் நிலையங்களுக்கும் அலைய வேண்டிய தேவைக்குப் பதிலாக ஸ்மார்ட் கார்ட் முறைமையை அறிமுகப்படுத்தி அவற்றை குறுந்தகவல் ஊடாக மீள்நிரப்பு செய்வதற்கு வசதி செய்துகொடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 உயிரிலும் மேலாக பாதுகாக்கப்படும் சுற்றாடல்

மனிதன் சுற்றாடலை சீரழிப்பதற்காக மேற்கொள்கின்ற செயற்பாடுகளின் விளைவுகளை எதிர்காலப் பரம்பரையினர் தான் செலுத்த வேண்டும். ஆனால் அச் சூழலை எமது எதிர்கால பரம்பரையினரும் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனால் மனிதனுக்கும் இயற்கைக்குமிடையில் நிலவ வேண்டிய நெருங்கிய தொடர்பு வீழ்ச்சி அடையாத வகையில் 2005ல் மஹிந்த சிந்தனையில் வழங்கிய உறுதிமொழிக்கேற்ப எதிர்காலத்திலும் நாம் சுற்றுச் சூழலின் பாதுகாவலான செயற்பாடுவேன்.

## எம்மைக் காக்கும் வனாந்தரங்கள்

- இலங்கையில் காணப்படும் அனைத்து வனாந்தரங்களையும் அளந்து எல்லையிடுவதற்காக வனாந்தர அளவை ஆணைக்குழுவை நியமிப்பேன்.

- அரச மற்றும் தனியார் துறை காணிகளைப் பயன்படுத்தி மூன்று இலட்சத்து ஐம்பதினாயிரம் ஹெக்டேயர்களில் புதிதாக காடு வளர்ப்பை மேற்கொண்டு அழிவுறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இயற்கை வனாந்தரங்களை மீளமைப்பேன்.

- வல்லப்பட்டை, வெண் சந்தனம் மற்றும் பட்டுப்புளி போன்ற நிதிப் பெறுமதிகொண்ட 15 வகை மரங்களை வர்த்தக மற்றும் வீட்டுத் தோட்ட செய்கையாகவும் விரிவுபடுத்துவதற்கும் அதன் அறுவடையை தடைகளின்றி பெற்றுக்கொள்வதற்கு தேவையான வகையில் சட்டத்தில் திருத்தத்தை செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.

- மரக்கைத்தொழிலுக்கு தேவையான காட்டுக் தேக்கு உள்ளிட்ட மர வகைகளைக் கொண்டு மனை வனாந்தரச் செய்கையை விரிவுபடுத்துவேன்.

- சாதாரண மரமொன்றை விட 50 மடங்குக்கு மேல் காபனை அகத்துறுஞ்சும் ஆற்றல் கொண்ட கண்டல் தாவர அபிவிருத்திக்காக சுற்றுலாத்துறை கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் பெரிய தொழில் முயற்சியாளர்களையும் இணைத்துக்கொள்வேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காடு வளர்ப்பு மூலம் புதிதாக ஏற்படுகின்ற காபன் இருப்பின் அதிகரிப்பை வருடாந்தம் அளவிட்டு ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவை சுற்றாடலை அழிக்கின்ற நாடுகளிலிருந்து எமது நாட்டுக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் குற்றச் செயல்களை தவிர்ப்பதற்காக தற்போதுள்ள சட்டத்தில் கவனம் செலுத்தி எதிர்காலத்திற்கு பொருத்தமான வகையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக சுற்றாடல் சட்ட தயாரிப்பு கமிட்டி ஒன்றை நியமிப்பேன்.

## பஞ்சகேந்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரகடனம்

சுதந்திரமாக சுவாசிக்கும் காற்றில்கூட விசம் கலந்திருக்குமானாலும் நிலத்தில் ஊற்றெடுக்கின்ற நீரிலும் மண்ணிலும் விசம் கலந்திருக்குமானாலும் மென்மையாக எமக்குக் கேட்கக்கூடிய சத்தம் எம்மை அச்சுறுத்துமானாலும் நாலாபுறமும் எமது கண்கள் சுற்றிப் பார்க்கும் போது களைப்படையுமானாலும் பூமியில் வாழும் மனிதனுக்கு வசந்தம் இல்லையென நான் கருதுகிறேன். அதனால் காற்று, நீர், மண், சத்தம் மற்றும் பார்வை போன்ற ஐந்து வகையாக சூழல் மாசடைதல் வழிகளை முடிவுக்குக்கொண்டுவருவதற்காக 'பஞ்சகேந்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரகடனத்தை' தயாரிப்பேன்

- ஓசோன் படையை பாதிக்கின்ற அனைத்து வகையான வாயுக்களை வெளியிடக்கூடிய அனைத்து வகையான பாவனைகளையும் 2020 ஆம் ஆண்டாகும் போது முழுமையாக நிறுத்துவேன். அவற்றுக்குப் பதிலாக குளிரூட்டி, குளிர்ச்சாதனப்பெட்டி, மின்விசிறி, மோட்டர்கள் போன்றவற்றை உள்நாட்டிலே உற்பத்தி செய்யும் போது உகப்பற்ற வாயுகளின் பாவனையைத் தவிர்ப்பதற்காக நட்சத்திர அடையாளச் சான்றிதழ் முறையை அறிமுகப்படுத்துவேன்.

- மின் விளக்குகளிலுள்ள பாதரசம் மற்றும் வர்ணப்பூச்சுகளில் உள்ள ஈயம் என்பன மனித உடலுக்கு உகப்பற்றவை. அதனால் சுற்றுச் சூழலுக்கு பொருத்தமான மின்சாரத்தின் உற்பத்தியை நாட்டில் பரவலாக்குவதற்காக கவர்ச்சிகரமாக வரிச் சலுகை முறையொன்றை அறிமுகப்படுத்துவேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலத்தடி மற்றும் பாவிக்கப்படும் நீரில் சேர்கின்ற கைத்தொழில் மற்றும் விவசாய இரசாயனங்கள் காரணமாக ஏற்படுகின்ற நீர் மாசடைதலை தவிர்க்கவென ஒழுங்குமுறையான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவேன்.

- இரத்தினக் கல் அகழ்வு கைத்தொழில் மூலம் நிலத்தடி நீருக்கு மாத்திரமல்லாமல் நீர் ஊற்றுக்களுக்கும் ஏற்படுகின்ற பாதிப்பை குறைப்பதற்காக ஒழுங்குமுறையான முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல். அக்கைத்தொழில் தொடர்பான கண்காணிப்பை விரிவுபடுத்துவதற்காக இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையை வலுப்படுத்துவேன்.

- பீடைக்கொல்லிகள் மற்றும் இரசாயன பசளை என்பவற்றின் மூலம் நச்சுத்தன்மைமிக்க பாரஉலோகங்கள் சுற்றுச் சூழலில் சேர்வதை தவிர்ப்பதற்காக அது தொடர்பான சட்ட ஏற்பாடுகளை தாமதமின்றி வலுப்படுத்துவேன்.

- சிறுநீரக நோய்களுக்கு காரணமென உலக சுகாதார ஸ்தபானத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள பீடைக்கொல்லிகளின் இறக்குமதி மற்றும் பாவனையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வேன்.

- கழிவுப்பொருட்களை வளமாக பயன்படுத்தக்கூடிய வகையில் கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்றை எதிர்வரும் வருடத்தில் கட்டாய அபிவிருத்திப் பணியாக செயற்படுத்துவேன்.

- ஒலிமாசடைதலை தவிர்ப்பதற்காக குறிக்கப்பட்ட அளவை விடவும் வாகனங்களில் ஒலி எழுப்புவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- நகர மற்றும் மக்கள் நெரிசல் மிக்க பிரதேசங்களில் நடாத்தப்படுகின்ற அதிக ஒலி எழுப்பும் அனைத்துச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய ஒலி அளவை அறிமுகப்படுத்துவேன்.

- பிரச்சாரம் மென்மேலும் பரவுவதைத் தொடர்ந்து நாம் பார்க்கக் கூடிய பலவிதக் காட்சிகளும் வர்ணங்களும் பார்வையைப் பாதிப்பதற்கு செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது.. அவ்வாறு கண்களுக்கு உகப்பற்ற வர்ணங்களை தொடராகப் பார்ப்பது கூடாது. அதனால் பார்வைக்கு உகப்பற்ற இடங்களைப் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காக வழிகாட்டல் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- இம்மாசடையும் ஐந்து துறைகள் குறித்தும் ஆய்வு செய்வதற்கு முன்வருகின்ற ஆராய்ச்சியாளர்களுக்கு அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையைப் பெற்றுக் கொடுப்பேன்.

- உலகிலேயே அதி கவர்ச்சிமிகு கரையோரங்களில் சிலவான பாசிக்குடா, நிலாவெளி, உனவடுன போன்ற மரபுரிமை மிக்க பாக்கியத்தை எதிர்காலத்திற்கும் கொண்டு செல்வதற்காக கரையோரம் சார்ந்த சட்டங்களை வலுப்படுத்துவதுடன் பொது மக்களையும் சுற்றுச் சூழல் தொடர்பான புத்திஜீவிகள் அமைப்புக்களையும் ஒன்றிணைத்து சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார மையமொன்றைக் கட்டியெழுப்புவேன்.

## யானை மனிதன் முரண்பாடு

- பாதுகாப்பற்ற நிலைக்கு முகம் கொடுத்துள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் துரித கெதியில் யானைத் தடுப்பு வேலிகளை அமைப்பதற்குத் தேவையான பொருட்கள், வாகனங்கள் மற்றும் ஏனைய வளங்களையும் குறித்த பிரிவுகளுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

- கிராமங்களுக்குள் காட்டு விலங்குகள் பிரவேசிப்பதை 24 மணி நேரமும் தடுப்பதற்காக பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் குறித்த அரச பிரிவு, கிராமிய தொண்டர் சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கி சமூக வனப்பாதுகாப்புப் படையணி ஒன்றை ஸ்தாபிப்பேன். மனிதர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்கு மாத்திரமல்லாமல் மிருகங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை தவிர்ப்பதையும் இப்படையணியின் பொறுப்பாக்குவேன்.

- இவ்வாறான விபத்துக்களில் வீட்டுத்தலைவர் உயிரிழந்துள்ள குடும்பங்களுக்கு மாதா மாதம் கொடுப்பனவொன்றை பெற்றுக் கொடுப்பதற்கும் அப்பிரதேசங்களில் வாழும் சகல தனி நபருக்கும் ஆயுள் காப்புறுதியை இலவசமாகக் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 நிலையான மக்கள் இல்லம்

இலங்கையில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் வீட்டு உரிமையைக் கொண்ட குடும்பமாகத் திகழ வேண்டும். என்ற அடிப்படையில் தேசிய வீடமைப்பு கொள்கையை வெளியிடக் கிடைத்தமை வீடமைப்பு மற்றும் குடியிருப்பு துறை தொடர்பாக நாம் பெற்றிருக்கும் பாரிய வெற்றியாகும். இதன் கீழ் வீடற்ற குடும்பங்களுக்காகவும் எதிர்காலப் பரம்பரையினருக்காகவும் வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டத்தை முழு நாட்டிலும் ஒன்றிணைந்த வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்துவேன்.

- சகல நகரங்களிலுமுள்ள சேரிக்குடியிருப்பாளர்களுக்கும் அனைத்து உள்ளக வசதிகளையும் பொதுவசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுரிமையை உத்தரவாதப்படுத்தும் நகர மீள் கட்டுமாண வேலைத்திட்டத்தின் கீழ் அடுத்துவரும் ஆறு வருடங்களுக்குள் 60,000 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- பேருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 07 பேர்ச்சஸ் காணியையும் அவர்களுக்கென வீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கவும் என நகர அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் தற்போது ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அத்திட்டத்தின் கீழ் 2015/2016 காலப்பகுதியில் 50,000 வீடுகளை நிர்மாணிப்பேன்.

- அடையாளம் காணப்பட்டுள்ள ஆபத்துமிக்க பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு தாமதமின்றி பாதுகாப்பான பிரதேசங்களில் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- நிரந்தர வருமானமும் உரிய பாதுகாப்பும் இல்லாத குறைந்த வருமானம் பெறுவோருக்கு ஜனசெவன திட்டத்தின் கீழ் வீட்டுக்கடன் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்தும் வலுப்படுத்துவேன். நிதி வசதிகளுக்கு மேலதிகமாக குறைந்த செலவில் வீட்டை நிர்மாணிப்பதற்குரிய தொழில்நுட்ப வசதியையும் வழங்குவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுத்தர வர்க்கத்தினருக்கு மாடி வீட்டு உரிமை

- நகர பிரதேசங்களில் வாழ்வதற்கு விருப்பம் கொண்ட உயர் நடுத்தர வருமானம் பெறும் குழுவைச் சேர்ந்த மக்களுக்கு நவீனமயமான அலங்கார வீட்டுத் திட்டத்தை அரச வங்கிகளின் முதலீட்டின் மூலம் செயற்படுத்துவேன். அந்த வீடுகளுக்காக 90% வரை 30 வருட காலத்திற்குரிய வங்கி கடன் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவேன்

- அரச வங்கிகளின் ஊடாக வீட்டுக்கடன் பெற்றுக்கொடுக்கும் போது தற்போது நடைமுறையிலுள்ள சிக்கல்மிக்கதும் காலம் கடந்ததுமான முறைமைகளுக்கு பதிலாக குறைந்த ஆவணங்களையும் வங்கியின் ஆவணங்களையும் தயாரித்து வழங்கும் சேவையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 உட்கட்டமைப்பு வசதிகள் புரட்சி தொடர்ந்தும் முன்னோக்கி

பயங்கரவாதம் காரணமாக வடக்கு கிழக்கில் மாத்திரமல்லாமல் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தடைப்பட்டிருந்தது. அதனால் நாளாந்தம் எமது கண்கள், தீமூட்டி எரிக்கப்பட்ட கட்டடங்களையும் குண்டு வைத்து தகர்க்கப்பட்ட பாதைகளையும் உடைத்து வீழ்த்தப்பட்ட மின்கம்பங்களையும் பார்த்தன. ஊருக்கு எநதவிதமான வசதியும் கிடைக்காததுடன் நகரம் குப்பைகளாலும் தூசிகளாலும் சுத்தமற்றதாக நிரம்பியிருந்தது. நான் அடிப்படை பொது வசதிகள் துறையில் குறிப்பிடத்தக்க புரட்சியை ஏற்படுத்தினேன். நான் இந்த கண்களால் நம்பமுடியாத புரட்சியை முன்னோக்கியே கொண்டுசெல்வேன்.

## அழகான நகரம்

கொழும்பு நகரத்தில் வீழ்த்தப்பட்டிருந்தவற்றை நான் உங்களது கண்கள் பார்ப்பதற்கு திறந்துவைத்தேன். கொழும்பு நகரம் தியவன்ன பிரதேசம் பெல்லன்வில மற்றும் நுகேகொட ஆகிய நகர அபிவிருத்தி திட்டங்கள் உங்களுடைய எல்லையற்ற மகிழ்ச்சிக்கு காரணமாகியது என்பதை நான் அறிவேன்.

- 2020 ஆம் ஆண்டாகும் போது கொழும்பு நகரம் தெற்காசியாவியால் மிகவும் அலங்காரமான நகரமாவதுடன் ஸ்ரீஜயவர்தனபுர பிரதேசம் மனம்கவரும் மற்றும் முறையான நிர்வாகத்தின் தலைநகராமாகவும் விளங்கும்.

- அதற்கு ஈடாக நாட்டிலுள்ள அனைத்து நகரப் பிரதேசங்களிலும் நிர்வாகக் கட்டடங்கள் ஹோட்டல்கள், வீடமைப்புத் திட்டங்கள், நகரப் பூங்காக்கள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நகர அலங்காரத் திட்டங்கள் அல்லது கலப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கொண்ட சூழலை நேசிக்கின்ற மற்றும் வாழ்வதற்குரிய மனப்பான்மையை ஏற்படுத்துகின்ற சிறந்த நகரமாக ஏற்படுத்துவேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடிப்படை வசதிகளே இல்லாத எனினும் பல்வேறு கிராமியப் பிரதேசங்களை ஒன்றிணைத்து மக்களின் சேவை வசதிகளை வழங்குவதற்குரிய நிலையமாக மாற்றுவேன். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 100 நகரங்களை அபிவிருத்திசெய்யும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

- தற்போது நடைமுறையிலுள்ள வர்த்தகர்களுக்கு மற்றும் பாவனையாளர்களுக்கு தேவையான வசதிகள் அனைத்தையும் கொண்ட நகர சந்தை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் முழு நாட்டையும் உள்ளடக்கிய விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 75 நகரங்களில் பொது சந்தைகளை நிர்மாணிப்பேன்.

- மக்களின் தேவைகளுக்கு ஏற்ப நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் புதிய நகர பிரதேசத்தை வெளியிடுவதுடன் வெளியிடப்பட்ட அந்த வளையங்களில் அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்துவேன். அந்த அதிகாரத்தின் கீழ் மகாத்மா காந்தி மூலம் 1943 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்த போது ஐந்தும்லாம்புச் சந்தியை அபிவிருத்தி செய்து மகாத்மாகாந்தி சதுக்கம் எனப் பெயரிடுவேன்.

- மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றுக்குரிய நகரங்கள் மற்றும் நகர பிரதேசங்கள் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான திட்டங்களை தயாரித்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்பதன் மூலம் மேலும் வலுப்படுத்துவேன்.

## பாரிய பாதை புனரமைப்பு

இலங்கையில் முதல் தடவையாக நிலையான பாதை வரைபடமொன்றை மற்றும் அபிவிருத்தித் திட்டத்துடன் பாதை நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டது. நான் பெருந்தெருக்கள் அமைச்சராக இருந்தபோதேயாகும் என்பதை நான் குறிப்பிடுவது மிகவும் பெருமையுடனாகும். கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் கிராமங்களிலுள்ள பாதைகள் கொங்கிறீட் இடும் நோக்கத்துடன் அந்த பாதைகள் புரமைக்கப்பட்டதுடன் அதிவேகப் பாதைகள் இரண்டு அமைக்கப்படும்வரை பரந்துள்ள வீதிகளாக அவற்றில் வருகின்ற நீங்கள் இதைப்பற்றி நன்கு அறிந்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, மத்தள விமான நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றை இணைத்து விஸ்தரிக்கப்பட்டது.
- தெற்கு அதிவேக நெடுஞ்சாலையிலிருந்து பெல்மதுளை வரை இரத்தினபுரி அதிவேக பாதை நிர்மாணிப்பேன்.
- சுற்றியுள்ள வளைவுப் பாதைகளை ஆரம்பித்து வடமேல், வட மத்திய, கிழக்கு மாகாண சபையூடாக யாழ்ப்பாணத்துக்கு செல்லுகின்ற வடக்கு அதிவேகப் பாதையை நிர்மாணிப்பேன்.
- வடக்கு அதிவேக பாதையைக் கொண்ட கண்டி அதிவேக பாதை நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தாமதமின்றி ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகளை எடுப்பேன்.
- அனைத்து அதிவேக பாதைகளையும் ஒன்றாக இணைத்து கொழும்புக்கு வெளியில் சுற்றியுள்ள பாதையில் கடுவலயிலிருந்து கடவத்தை வரையுள்ள பகுதியை 2015ல் திறந்து வைப்பேன்.
- 2020 ஆகும் போது மத்தள விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அதிவேக நெடுஞ்சாலை வழியாகவே போகக்கூடிய விதத்தில் புரட்சியை ஏற்படுத்துவேன்.
- கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட பெருந்தெருக்கள் மாகாண சபை, பிரதேச சபை மற்றும் கிராமிய வீதி அபிவிருத்திகளை செயற்படுத்தியதன் பின் நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் உங்கள் வீட்டிலிருந்து 6 மணித்தியாலத்துக்குள் இலங்கையில் எந்தவொரு இடத்திற்கு செல்லக்கூடிய விதத்தில் பாதை வரைபடத்தை நான் விரித்து வைப்பேன்.
- சர்வதேச மென்மையை அளவிடும் அளவுகோலுக்கு அமைய எங்களது பாதைகளின் நிலைமையை 2020ல் நூற்றுக்கு நூறு வீதம் வரை அபிவிருத்தி செய்வதே எனது நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைவருக்கு தண்ணீர்

தண்ணீர் தொடர்பாக அனைவருக்கும் இருப்பது சமமான தூய்மையான உரிமையாகும். நான் அந்த உரிமையை ஏற்றுக்கொள்கிறேன். நீர்ப்பாசனத்தைப் போன்று 2020 ஆம் ஆண்டு ஆகும் போது அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீரை பெற்றுக்கொடுப்பதன் ஊடாக அந்த உரிமையை உறுதிப்படுத்துவேன்.

- தண்ணீர் வளத்தால் செல்வந்தராக விளங்கும் எமது முழுச் சமுதாயத்திற்கும் குழாய் நீர் வசதியில்லை. எனினும் நகரத்தில் வாழுகின்ற மக்களின் தண்ணீர்த் தேவை அந்த குழாய்நீர் தேவையில் தங்கியிருப்பதால் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் நகரத்திலுள்ள அனைத்து வீடுகளுக்கும் குழாய் நீர் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
- கொழும்பு நகரம் மற்றும் உப நகர பிரதேசங்களில் குடிநீர் வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
- அதன்கீழ் 2015ல் சேவைகளை நீடிக்கும் வசதிகளை உள்ள பிரதேசங்களில் 4,00,000 புதிய குழாய் தொடர்பு வசதிகளை பெற்றுக்கொடுப்பேன்.
- பொலனறுவை மாவட்டத்தில் சுத்தமான குடிநீர் வசதியைப் பெற்றுக்கொடுத்ததைப் போன்று அநுராதபுர மாவட்டத்தில் சிறுநீரக நோய்க்கு நிவாரணம் அளிக்கும் நடவடிக்கையாக 2015ல் குழாய் நீர் விநியோகம் நூற்றுக்கு நூறு வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

## எரிசக்தி

எதிர்கால கைத்தொழில் பொருளாதார அபிவிருத்தியில் கிராமத்தின் சக்தி எரிசக்தி என்பதை நான் அறிவேன். அதனால் அதற்கு பொருத்தமான வகையில் எரிசக்தி துறையை மேலும் வலுப்படுத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோலிய கைத்தொழில்

- விஞ்ஞானபூர்வ முகாமைத்துவ மாற்றத்தின் மூலம் தொடராக நஷ்டத்தில் இயங்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மேம்படுத்தி சாதாரண மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.

- அரச நிவாரணமின்றி வருடம் முழுவதும் உறுதியான விலையைப் பேணும் வகையில் மண்ணெண்ணெய் விலையை குறைந்த மட்டத்தில் பேண நடவடிக்கை எடுப்பேன்.

- பெற்றோலிய தேவைக்கு பொருத்தமான வகையிலும் நவீன தொழிநுட்பத்துக்கு ஏற்ற வகையிலும் பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை நவீனப்படுத்தி சுத்திகரிப்பு கொள்ளளவை இரு மடங்காக்கி எண்ணெய் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன்.

- நாடெங்கிலும் குறைபாடின்றி எண்ணெய் விநியோகிப்பதற்காக வலய அல்லது பிராந்திய எண்ணெய் களஞ்சியசாலைகளை ஸ்தாபிப்பேன்.

## மின்சக்தி

மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் நான் 2016ல் சகலருக்கும் மின்சாரம் பெற்றுக் கொடுப்பேன் என வாக்குறுதி அளித்தேன். அந்த வாக்குறுதியை இவ்வருட நிறைவின் போது நிறைவேற்ற கிடைத்தமையை நான் பெரும் வெற்றியாக கருதுகிறேன். தேசிய மின் உற்பத்திக்காக 2010ல் திட்டமிடப்பட்ட அனைத்து யோசனைகளையும் நடைமுறைப்படுத்தி கிடைக்கப்பெறும் இலாபத்தை 2020ல் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதே எனது நோக்கம்.

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக புதிய மின் இணைப்புக்களை வழங்கும்போது குறைந்த வட்டி வீதத்திலான கடனை ஆறு வருடங்களுக்குள் மின் கட்டணத்துடன் செலுத்தக்கூடிய அடிப்படையில் பெற்றுக்கொடுப்பேன்.

- சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில் மற்றும் சர்வதேச கைத்தொழில் வகைப்படுத்தலுக்கு அமைய சலுகை விலையில் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் குறையும் மின் கட்டணத்தின் மூலம் அந்த தொழில் முயற்சியாளர்களுக்கு பாரிய நிவாரணம் கிடைக்கப்பெறும்.

- 2020 ஆம் ஆண்டாகும் போது ஈடுசெய்யக்ககூடிய மின் நுகர்வுக்காக மின் பாவனையாளரை ஊக்குவிக்கும் வகையில் குறைந்தளவில் மின்சாரம் செலவாகும் பொருட்களை இறக்குமதிசெய்து உற்பத்தி ஊக்குவிக்கப்படும். அத்தோடு அப்பொருட்களை இனங்காண்பதற்காக எரிசக்தி செயல்திறன் லேபல். (Energe efficenccy) முறைமையொன்றை அறிமுகப்படுத்துவேன்.

- பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி நிலையங்கள் மூலம் 2020ல் மொத்த மின் உற்பத்தியில் 25 வீத பங்களிப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.

- உத்தேச சார்க் பிராந்திய மின் கட்டமைப்பு மற்றும் அதனோடு இணைந்ததாக இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் எரிசக்தி வர்த்தகத்துறை தொடர்பேற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

## பொதுசன மற்றும் தகவல் தொழில்நுட்பம்

இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துக்காக மிகவும் வலுவான அடித்தளமொன்று இடப்பட்டுள்ளதுடன் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு எங்களது பொருளாதார வளர்ச்சியில் அடுத்த நுழைவாயிலாகும்.

- பொதுசன மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கின்ற சேவைகளை மிகவும் சிநேகபூர்வமாக செயற்திறன் மிக்கதாகவும் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன்.

- அனைத்து மாவட்டங்களிலும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிலையங்களை நிறுவுவதுடன் 100 BPO நிலையங்களை மற்றும் மஹிந்தோதய ஈ-நெனசல 400 ஆய்வுகூடங்கள் நிர்மாணிப்பேன்.

- அதன் ஊடாக 10,000 தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன் எங்களது நாட்டில் பொதுசன மற்றும் தகவல் தொழில்நுட்பம் 2020 ஆம் ஆண்டாகும்போது நூற்றுக்கு நூறு வீதம் மேம்பாடடைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொதுசன மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் கடமையாற்றுகின்றவர்களுக்காக தொழில்சார் நிறுவனமொன்றை நிறுவுவேன்.

- அரசாங்க மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற 300 சேவைககளை இணைய சேவைகளாக்குவதுடன் அந்தவிதத்தில் அனைத்து பிரஜைகளதும் தகவல்கள் மற்றும் காணி தொடர்பான தகவல்களை இணையமயப்படுத்துவேன்.

## செய்மதி தொழில்நுட்பத் துறையை விரிவுபடுத்தும் வலையமைப்பு

தேசிய பொருளாதார புதிய உற்பத்திகள் ஊடாக வலுப்படுத்துகின்ற அறிவை பொருளாதாரமாக்கும் நடவடிக்கைகளில் முதன்மையாக விளங்குவது செய்மதி தொழில்நுட்பமாகும் என்பதை நானறிவேன். இந்த துறை தொடர்பாக எமது கொள்கையளவில் பின்பற்றப்படுகின்ற இந்தத் துறையின் உயர்ந்த பலனை அடைந்திருக்கின்ற அரசுகளுடன் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை மேற்கொள்ளுவேன்.

- அதிதொழில்நுட்ப செய்மதி நிலைய வசதிகள் ஊடாக உலகில் செயற்படுத்தப்படுகின்ற செய்மதிகளின் தொலைத் தொடர்பு தரவுகளை சேகரித்து பகிர்ந்தளிப்பதற்கு தேசிய நிலையமொன்றை நிர்மணிப்பேன்.

- இலங்கைப் பொறியியலாளர்கள் மற்றும் நிபுணர்களின் திட்டமிடலுடன் நிர்மாணிக்கப்படுகின்ற இலங்கையின் முதலாவது புவி கண்காணிப்பு தொலைத் தொடர்பு செய்மதியை 2020ஆம் ஆண்டில் நிறுவ நடவடிக்கை எடுப்பேன்.

- மேலும் விவசாயம், இயற்கை வள முகாமைத்துவம், நகர அபிவிருத்தி, சூழல், காலநிலை, இயற்கை அனர்த்தம் தொடர்பான அறிவு, கடல்சார் சூழல், போக்குவரத்து, ஆகாயம் மற்றும் கடல் அபிவிருத்தி தொடர்பான பல்வேறு துறைகளில் செயற்பாடு மற்றும் பலன்களை மேம்படுத்த தேவையான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உபயோகப்படுத்திக் கொள்வதற்கு தேசிய வேலைத் திட்டங்களை செயற்படுத்துவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 விஞ்ஞான தொழில் நுட்பமும் புதிய உற்பத்திகளும்

நாம் இப்போது வேகமான பொருளாதார அபிவிருத்தியில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். புத்தெழுச்சி பெறும் ஆசியாவில் முதலாமிடத்தை வெற்றிக்கொள்வதாயின் நாம் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் முன்னணியில் திகழவேண்டும்.

- விஞ்ஞான அறிவுடன் கூடிய சமூகத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்காக தேசிய விஞ்ஞான மத்திய நிலையமொன்றை ஸ்தாபிப்பேன்.
- அறிவை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான மூலதன ஏற்பாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் இலங்கையில் புதிய உற்பத்திகள் தொடர்பான நிதியமொன்று ஸ்தாபிக்கப்படும்.
- இலங்கையை விஞ்ஞானம் மற்றும் அபிவிருத்தி குறித்து ஆசிய கேந்திர நிலையமாக மேம்படுத்தி விஞ்ஞான அறிவை பணமாக பரிமாற்றுவதற்குரிய வேலைத்திட்டத்தை செயற்படுத்துவேன்.
- 2020 ஆகும் போது அதி தொழில்நுட்ப ஏற்றுமதியை 15 வீதம்வரை அதிகரிப்பதற்கான திட்டத்தை வலுப்படுத்துவேன்.
- இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக தொழில்நுட்ப பெறுமதியுடன் கூடிய உள்நாட்டு பொருட்களை உற்பத்தி செய்வதற்காக விஞ்ஞான அறிவைச் சேர்ப்பதற்குரிய யோசனையை முன்வைப்பதுடன் அதற்காக செலவாகும் நிதி முதலீட்டுக்குரிய வரிச்சலுகையைப் பெற்றுக்கொடுப்பேன்.
- 2006ல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நனோ தொழில்நுட்பத்தின் ஆரம்பத்துடன் அறிவு பொருளாதாரத்துக்கு எமது விஞ்ஞானிகள் பங்களிப்பு நல்கும் வகையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப புதிய உற்பத்திகள் படையணியொன்றை ஸ்தாபிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயல்திறன் அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பை வழங்குவதற்காக தேசிய ஆராய்ச்சி அதிகார சபையொன்றை உருவாக்குவேன். அதன்மூலம் மூளைசாலிகள் வெளியேறுவதற்குப் பதிலாக அறிவுமூலமான இலாபத்தை நாட்டுக்குப் பெற்றுக்கொடுப்பதுடன், இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழுகின்ற இலங்கை விஞ்ஞானிகளை அந்த அதிகாரசபையில் இணையுமாறு அழைப்பு விடுக்கிறேன்.

- எமது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக உயிரியல் விஞ்ஞான வளங்களைப் பயன்படுத்தும் போது எமது வளமான உயிர் பல்வகைமையை பாதுகாப்பபதையும், அவற்றை காப்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

- அதிதொழில்நுட்ப உற்பத்தி மற்றும் கைத்தொழில் பூங்காக்களை நாட்டில் உருவாக்கி பெறுமதி சேர்த்த கைத்தொழில் அபிவிருத்தி மூலம் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் செயற்பாட்டை ஆரம்பிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 கலைஞர்களின் திறன்களை நாட்டுக்கு வழங்குதல்

அனுபவிப்பதைவிட அனுபவிக்க வைக்கும் உரிமைக்கு இட்டுச்சென்ற இருண்ட யுகத்தில் திரைக்கூடங்கள், நாடக அரங்குகள், இசை கச்சேரி மேடைகள் என்பன பாளடைந்து கிடைந்தன. அன்றைய காலகட்டத்தில் அரங்கேரியிருந்தது மரண அச்சுறுத்தல் மாத்திரமே. நான் தேசிய உறுதிப்படுத்தினேன். இன்று தாமரைத்தடாகத்தில் ஆயிரக்கணக்கான கலை மலர்கள் மலர்கின்றன. இங்கு திரைப்படங்களும் நாடகங்களும் போட்டி போட்டுக்கொண்டு அரங்கேறுகின்றன. எழுத்தாளர்களும் வாசிப்பு ஆற்றல் உள்ளவர்களும் அதிகரித்துள்ளனர். கலை என்ற அறுவடையை அள்ளிக் குவிக்கும் நேரமிது.

## இலக்கியம்

- சிறுவர் மற்றும் இளைஞர் இலக்கிய நூல்களுக்குப் பாராட்டும் அவற்றை பரவலாக்குவதற்காக விசேட அரச கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதற்காக கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சின் கீழ் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வேன்.
- இலக்கியம் மற்றும் ஏனைய கலை படைப்புகளுக்காக கலைஞர்களுக்கு இலகு வட்டியின் கீழ் வங்கிகள் மூலம் கடன் வழங்கும் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தி அதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இலகுவானதும், வசதியானதுமான தேசிய மட்டத்தின் அத்துறைகளின் புத்தி ஜீவிகளையும் முன்னணி கலைஞர்களையும் உள்ளடக்கிய தேசிய பெயர் பட்டியலொன்றை தயாரிப்பேன்.
- சிறுகதை, கவிதை நூல்களுக்கு நிலவும் கேள்வி வீழ்ச்சியடைந்துள்ளதுடன் அவ்வாறான இலக்கிய புத்தகங்களை அச்சிட்டு மேம்படுத்துவதற்காக அச்சு கைத்தொழில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுக்கு உரிய வரி சலுகையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்.
- தாமாக நூலொன்றை வெளியிடும் எழுத்தாளருக்கு நிதி உதவி வழங்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அந்தந்த இனங்களுக்கிடையில் தமது உணர்வுகளையும் எண்ணங்களையும் பரிமாறிக் கொள்வதற்கான இலக்கிய விருது வழங்கும் பைவங்களில் விருதுபெற்ற நூல்களை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து அரசாங்க செலவில் அச்சிட்டு வெளியிட நடவடிக்கை எடுப்பேன்.

- நீண்டகாலமாக அமைதியாக மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுவரும் எழுத்தாளர்களை இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பதிவுசெய்து அவர்களுக்கு அவ்வேலைத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

## நடனக் கலை

- டவர் மண்டப நடன மன்றம் சார்ந்த இலங்கை நடனக் கலையின் மேம்பாட்டுக்காக சர்வதேச நடன மத்திய நிலையமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- தாமரை தடாகத்தில் மாத்திரம் அல்லாமல் எல்லா மாகாணங்களிலும் சகல வசதிகளையும் கொண்ட ஒவ்வொரு நடன மண்டபங்களை உருவாக்குவேன். நடனப் பயிற்சிபெறும் இடம் மற்றும் கலைஞர்களின் தங்குமிட வசதிக்காக தங்குமிடமொன்றும் ஸ்தாபிக்கப்படும்.

- எதிர்கால படைப்பாளர்கள் மேடையில் கால் பதிப்பதற்கான பாடசாலை நடன அரங்குகளின் அபிவிருத்திக்கு கலாசார அமைச்சின் கீழ் விசேட வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவேன்.

## சினிமா

- திரைப்படத் துறையின் சுபீட்சத்துக்காக வர்த்தக சினிமா மத்திரம் அல்லாமல் கலை அம்சங்கள் நிறைந்த திரைப்படங்களையும் தயாரிப்பது அவசியமானாலும் அவ்வாறான திரைப்படங்களுக்கு முதலிட தயாரிப்பாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்பது நான் அறிவேன். அதன் காரணத்தினால் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக மூலதன முதலீட்டு நிதியமொன்றை உருவாக்குவேன். கலையம்சங்கள் நிறைந்த திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக அவற்றின் மூலம் உண்மையான உற்பத்திச் செலவில் 60 வீதத்தை இலகு வட்டிக் கடனாக வழங்குவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கலையம்சங்கள் நிறைந்த திரைப்படங்களைக் காண்பிப்பதற்கான ஐந்தாவது சபையும் இளம் திரைப்படக் கலைஞர்களின் படைப்புகளுக்கான வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்காக புதிய சினிமா கண்காட்சி மண்டபமொன்றையும் ஸ்தாபிப்பேன்.
- நகர ஹோட்டல் வீடமைப்புத் தொகுதிகள் மற்றும் விசால கடைத் தொகுதிகள் போன்ற பொது இடங்களில் உயர்தரத்திலான திரைப்பட கூடங்களை ஆரம்பிப்பதற்கு ஏற்ற வகையில் சட்ட திட்டங்களைத் திருத்துவேன்.
- சகல நடன மண்டபங்களையும் திரைப்பட கூடங்களையும் உரிய தரப்படுத்தலுக்கு உட்படுத்துவேன்.
- இலங்கையின் தமிழ் திரைப்படத் துறையைக் கட்டியெழுப்புவதற்காகப் பாடுபடும் படைப்பாளர்களுக்கு முழுமையான அரச அனுசரணையைப் பெற்றுக்கொடுப்பேன்.
- இளம் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களது ஆக்கப் பணிகளுக்காக இளைஞர் வங்கி ஊடாக ஒரு மில்லியன் ரூபா வரை கடன் வசதியைப் பெற்றுக்கொடுப்பேன்.

## மூத்த கலைஞர்கள்

- கலைத்துறைக்காக தமது முழு வாழ்வையும் அர்ப்பணித்து தற்போது தனிமையிலும், கையறு நிலைக்கும் உள்ளாகியுள்ள கலைஞர்களின் வாழ்வின் இறுதிக்காலத்தை அமைதியாக களிப்பதற்காக கலைஞர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வீடமைப்பு முறைமையொன்றை ஆரம்பிப்பேன்.
- ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள படைப்பாளர்களுக்கு கட்டாயம் ஓய்வூதிய முறைமையொன்றைப் பெற்றுக்கொடுப்பதுடன் அதன்மூலம் அவர்கள் முதுமை காலத்தில் எவரிலும் தங்கியிராது வாழ்வதற்கு ஏற்ற வருமான வழியொன்றை ஏற்பாடு செய்து கொடுப்பதை எனது பொறுப்பாக கருதுகிறேன்.
- பாடல் ஆக்கத் துறையில் ஈடுபட்டுள்ள பாடக பாடகிகளுக்கும் பாடலாசிரியர்களுக்கும் ஆக்க உரிமையைப் பாதுகாத்து அவர்களுக்கு உரிய பிரதி பலன்களை பெற்றுக்கொடுப்பதற்கு ஒழுங்கு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 சமூகப் பாதுகாப்பு

முதுமையடைந்த பெற்றோரைப் பராமரிப்பது வளர்ந்த பிள்ளைகளாகும். அது எமது நாட்டில் உள்ள சமூகப் பாதுகாப்பு முறைமையாகும். என்றாலும் தற்போது உருவாகியுள்ள சில ஏற்ற தாழ்வுகள் காரணமாக சிலர் கையறு நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை நான் அறிவேன். முதுமையடையும் போது ஏற்படுகின்ற தனிமை உணர்வு அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுகிறது. அதனால் அனாதரவாகியுள்ளவர்களுக்கும், சிரேஷ்ட பிரஜைகளுக்குமான பாதுகாப்பான வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பேன்.

- பொருளாதார அபிவிருத்தியிலும் சுகாதார அறிவிலும் சிறந்த பெறுபேறாக ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரிப்பும் ஓய்வு வயதில் தேகாரோக்கியமாக பணியாற்றக் கூடிய இயலுமையையும் அதிகரிப்பதாகும். அதனால் அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலும் இருந்து ஓய்வு பெற்றவர்கள் மீள செயலாற்றக் கூடியவாறு அபிவிருத்திப் படையணியொன்றை நான் ஆரம்பிப்பேன். நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தேவையான வழிகாட்டல், ஆலோசனை மற்றும் அவர்களின் அனுபவம் அறிவு ஆகியவற்றை அவர்களைக் கொண்டு குறித்த பணிகளுக்காக பயன்படுத்துவேன்.

- ஓய்வூதியம் மற்றும் தற்பொழுது அமுலில் உள்ள பல்வேறு சமூக பாதுகாப்பு முறைகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து தாமதமின்றி தீர்வு வழங்குவதற்காகவும் அதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கெனவும் குழுவொன்றை நியமிப்பேன்.

- தற்பொழுது செயற்பட்டுவரும் சமூகப் பாதுகாப்பு சபையை விஸ்தரித்து அதிகாரங்களுடன் கூடிய அதிகார சபையாக மாற்றுவேன்.

- பிறப்பால் அல்லது விபத்துக்களால் அங்கவீனமுற்ற சகல உறுப்பினர்களுக்கும் உரிய சமூக கௌரவமும், பாதுகாப்பும் கிடைக்கும் வகையில் வாழ்வாதார செயற்பாட்டில் ஈடுபடத் தேவையான அறிவை வழங்குவதற்காக 'திவிதிரிய' செயற்றிட்டமொன்றை ஆரம்பிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓய்வு காலத்தை அமைதியாகக் கழிப்பதற்காக உடற்சுகாதார வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய 'தெட்டுபுர அபிமன்சல' மத்திய நிலையங்களை சகல பிரதேச செயலகப் பிரிவிலும் ஆரம்பிப்பேன்.

- கடந்த கால அரசாங்கங்கள் 1977, 2001 தேர்தல்களின் பின்னர் மேற்கொண்ட தேர்தல் வன்முறைகளினாலும் அரசியல் பழிவாங்கல்களினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறு காரணங்களால் உரிய நஷ்டஈடு கிடைக்கவில்லையென எனக்கு தகவல் கிடைத்துள்ளது. சகல காரணங்களையும் புறந்தள்ளி அந்தக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

- 20 வருடங்களுக்கு மேலாக சோதிடம் மற்றும் தொவில் மற்றும் சப்பிரதாய உள்ளூர் மருத்துவ முறைகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு ஏனைய கலைஞர்களுக்கும் சுதேச மருத்துவர்களுக்கும் வழங்கப்படும் அரச அனுசரணையை வழங்குவேன்.

## இடர்முகாமைத்துவம்

- அடிக்கடி ஏற்படும் பல்வேறுபட்ட இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டி அறிவதற்குத் தேவையான அதிநவீன தொழில்நுட்ப உபகரணங்களைக் குறித்த அமைச்சுக்கு வழங்குவேன். அதனூடாக அனர்த்தத்துக்கு முன்னதாக குறித்த பகுதி மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்புவதற்கென துரித செயலணிப்பிரிவொன்றை ஸ்தாபிப்பேன்.

- அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை துரிதமாக வழமை நிலைக்குக் கொண்டுவந்து அவர்களின் வாழ்க்கைச் செயற்பாட்டை பாதிப்பின்றி முன்னெடுப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையினால் அனாதரவானோர்

- போதைக்கு அடிமையான இளம் பிள்ளைகளை அதிலிருந்து மீட்பது தேசிய பொறுப்பாகும். அதற்காக நீண்டகால மற்றும் குறுங்கால முறைகளை தயாரித்து செயற்படுத்துவதற்காக செயலணியொன்றை உடனடியாக ஆரம்பிப்பேன்.
- போதைக்கு அடிமையான இளைஞர் யுவதிகளுக்கென சகல மாவட்டங்களிலும் மத ஸ்தலங்களை அடிப்படையாகக் கொண்ட புனர்வாழ்வு மத்திய நிலையங்களை ஸ்தாபிப்பேன்.
- இளம் குற்றவாளிகள் மற்றும் சிறையில் இருக்கும் இளைஞர்களை முறையாக சமூகமயப்படுத்துவதற்காகவும் குற்றச்செயல்களின் வட்டத்திலிருந்து அவர்களை மீட்பதற்காகவும் அவர்களின் வாழ்க்கை எதிர்பார்ப்புகளை மேம்படுத்தவும் ஏற்ற வகையில் புதிய புனர்வாழ்வு மத்திய நிலைய வலையமைப்பொன்றை ஸ்தாபிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 சமாதானத்தின் நல்லிணக்கப் பயன்கள் மக்களுக்கு

- பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, இதுவரை வழக்கு தொடரப்படாத சகல வடபகுதி இளைஞர், யுவதிகளுக்கும் எதிராக வழக்கு தொடரவோ அல்லது தொடராதிருப்பது குறித்து ஆராய்ந்து தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் சகல அதிகாரங்களும் கொண்ட குழுவொன்றை நியமிப்பேன்.

- உலகில் எந்த நாடும் செய்திராத வகையில் வரலாற்றில் முதல் முறையாக மனிதாபிமான நடவடிக்கையின் போது பொதுமக்கள் விட்டுச் சென்ற வாகனங்களையும், மறைத்து வைக்கப்பட்ட தங்க நகைகளையும் உரியவர்களை அடையாளம் கண்டதன் பின்னர் மீள கையளிக்கும் நடவடிக்கையை இந்த வருடத்தினுள் பூர்த்தி செய்வேன்.

- பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட தமக்கு சொந்தமற்ற காணி, கட்டிடங்களை மனிதாபிமான நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நடவடிக்கை இதுவரை பெருமளவு நிறைவு செய்யப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இந்த நடவடிக்கையை நிறைவு செய்வேன்.

- பயங்கரவாத நடவடிக்கைகளால் சில காலம் பிரதான அபிவிருத்தி கட்டமைப்பில் இருந்து தூரமாகியிருந்த வடக்கு, கிழக்கு இளைஞர் யுவதிகளை தேசிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் இணையான பங்காளர்களாக பங்களிப்புச் செய்வதற்காக சமூக உள்வாங்கல் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக இடைக்கால கட்டமைப்பினுள் நிரந்தர செயற்திட்டமொன்றை முன்னெடுப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்வரும் வருடங்களில் தேசத்துக்கு மகுடம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

- நாட்டின் எப்பாகத்திலாவது பயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்த எந்த இனப்பிரிவினரோ அல்லது நஷ்டஈடு கிடைக்காத குடும்பங்களோ இருந்தால் அவர்களுக்கு உரித்தான நஷ்டஈட்டை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மற்றும் முகாம்களில் இருக்கும் சிங்கள, தமிழ் அல்லது முஸ்லிம் இனப்பிரிவினரை மீள்குடியேற்றும் நடவடிக்கையை துரிதப்படுத்தி அவர்கள் அனைவரையும் தமக்கே உரித்தான வீடுகளில் குடியிருக்கும் உரிமையை தாமதமின்றி பெற்றுக் கொடுப்பேன்.

- துரதிஷ்டமாக ஒரு சில இனவாத, மதவாத குழுக்களினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக மோதல்களை எதிர்காலத்தில் முழுமையாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அவ்வாறான மோதல்களுக்கு இழக்காகியுள்ள சிங்கள, தமிழ் அல்லது முஸ்லிம் இனத்தவர்களையும் பாதுகாக்கவும் மதத்தைப் பின்பற்றும் உரிமையை உறுதிசெய்யவும் நடவடிக்கை எடுப்பேன்.

- தோட்டப் பகுதிகளில் உள்ள கிராம சேவகர் பிரிவுகள் அளவில் பெரிதாக உள்ளதால் அங்கு வாழும் மக்களுக்கு தமக்குத் தேவையான நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. அதனால், அந்தப் பிரிவுகளை மீளமைக்க நடவடிக்கை எடுப்பேன்.

- நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள கல்வி, சுகாதார வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது வசதிகள் சம அளவாக முன்னெடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹிந்த சிந்தனையின் முன்மாதிரி உலகிற்கே

2005 இல் மஹிந்த சிந்தனையை முன்வைத்தபோது எந்த நாட்டுக்கும் தனியாக எழுந்து நிற்க முடியாது என்ற கருத்துணர்வைக் கொண்டிருந்த சர்வதேச நிறுவனங்கள் இன்று தனியார் மயப்படுத்தலுக்குப் பதிலாக முகாமைத்துவ மாற்றங்கள் மேற்கொள்வது தொடர்பில் ஆலோசனை வழங்கும் பிரிவுகளை ஆரம்பித்திருப்பது எம்மை முன்மாதிரியாகக் கொண்டாகும். அதனால் தமது நாட்டின் அபிவிருத்தி. எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற விரும்பும் நாடுகளுக்கு மஹிந்த சிந்தனை கொள்கைத் திட்டம் செயற்படுத்தப்படும் விதம் குறித்து வழிகாட்டுவதற்காக மஹிந்த சிந்தனை செயலாளர் அலுவலகமொன்றை ஸ்தாபிப்பேன்.

***உங்கள் அனைவரினதும் மக்கள் ஆணையுடன் இவை அனைத்தையும் யதார்த்தமாக்கு எனக்கு உங்கள் அனுமதி, ஒத்துழைப்பு மற்றும் சக்தி தேவை.***

***நாம் வென்ற நாட்டை கட்டியெழுப்பிய பண்பான தாய்நாட்டை ஆசியாவின் ஆச்சர்யத்தை***

***மற்றும்***

***உலகை வெல்லும் அபிமானமான தேசமாக மாற்றுவோம்.***

***நான் உங்களுக்கு பாதுகாப்பான நாட்டில் வழமான எதிர்காலத்தை ஏற்படுத்துவேன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005ல் எமது சவால் நாட்டுக்கு சமாதானத்தைக் கொண்டுவருவதே.

2010ல் நாட்டை பாரிய அபிவிருத்திக்கு உள்ளாக்கியுள்ளோம்.

இப்போது எமது தேவை சமாதானக் காற்றை சுவாசிக்கும் மக்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வை ஒழித்து அபிவிருத்தியின் பிரதிபலனைப் பெற்றுக்கொடுத்து அனைவரையும் மேம்படுத்தும் பயணத்தை ஆரம்பிப்பதேயாகும்.

இந்த மேம்பாடானநிலை எங்காவது எவ்வாறாவது சம்பாதிக்கும் பணத்தில் பைகளை நிரப்பிக்கொள்ளும் செல்வந்த நிலையல்ல. கஷ்டப்பட்டு தேடிய பணத்தினை கைகளில் வைத்துக்கொண்டு மனிதாபிமானத்தில் மனதை நிரப்பிக்கொள்ளும் மேம்பாட்டு நிலையாகும்.

உள்ளவர்கள் இல்லாதோரை இழிவாகப் பார்ப்பது, இல்லாதோர் இருப்போரை பொறாமையுடன் பார்க்கும் சமூகப் பாதையில் பயணித்த தூரம் போதுமானதே.

இனி உலை வைக்காத வீடு என்ற கடந்தகால நினைவுகள் பழமையான ஞாபகங்கள் மட்டுமே.

இனிமேல் எமது நாட்டில் செல்வந்தர்கள் மத்தில் வேறுபாடுகள் இன்றி வறுமை செல்வந்தர் என்கின்ற பாரபட்சம் இருக்க வேண்டும்.

தம்மைப்பற்றி மட்டும் சிந்திக்கின்ற எண்ணங்களுக்கு மாறாக சமூக உணர்வுடன் கூடிய பொது சமூக சிந்தனைகளுடனான பெருமைமிகு இலங்கையராக செயற்பட்டு பொருளாதார பலனைப் பெற்றுக்கொள்ளும் புதிய இலங்கையரை நான் உருவாக்குவேன்.

அத்தகைய இலங்கையர் உலகை வெல்வர் என்பது எனது நம்பிக்கை.

මහින්ද රාජපක්ෂ
மஹிந்த ராஜபக்ஷ
Mahinda Rajapaksa

X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org